

# காதல் எந்தன் மீதிலென்றால்...



## 1



கூலவிப் புரிவதைப் போல் உறவாடிக் கலந்திருந்த இமைகளைப் பிரித்தாள் நளினா. நேரம் காலை ஆறுமணியைக் காட்டியது. எழச் சொல்லி மூளை கட்டளை இட்ட போதிலும் மனம் சோம்பலைப் பரப்பியது. எழுந்து என்ன செய்யப் போகிறோம். மாமனார், மாமியாரைக் கவனிக்கப் போகிறோமா? இல்லை, கணவனுக்கு முதுகு தேய்க்கப் போகிறோமா? ஒன்றுமில்லை?!

பிறகென்ன மனதில் வெறுமை படர்ந்தது. அளவுக்கு மீறிய களைப்பைக் காட்டிலும் கவலைக்கு மனிதனைக்



குலைத்துவிடும் சக்தியதிகம் என்பது எத்தனை உண்மையான வார்த்தைகள்.

அந்நிலையில்தான் நளினா அப்போது இருந்தாள். பூரிப்பும் புன்னகையும் பூத்துக் குலுங்க வேண்டிய வயது. மணமாகி ஒன்றரை வருடங்களே முடிந்த நிலையில் உடலும் மனதும் கணவனின் அருகாமைக்கு ஏங்கித் தவித்தது.

மிதுன் படுத்திருந்த இடம் காலியாகி இருந்தது. கணவனின் அன்பும், ஸ்பரிசமும் கிடைக்க வேண்டிய வயது, இத்தனைத் தனிமையும், வெறுமையும் கடந்த ஆறு மாதங்களாகத்தான். ஒரு பெருமூச்சு ஒன்று அவளுள் எழுந்தது. நளினா பட்டதாரிப் பெண். படிப்பு முடிந்த கையோடு கம்ப்யூட்டர் இன்ஜினியரான மிதுனின் மனைவியானாள்.

சென்னைக்கு வருவதற்கு முன்பு, புகுந்த வீட்டு உறவுகளோடு இன்பமயமான வாழ்வு, அத்தையும், மாமாவும் தங்கள் மகளைப் போலத் தாங்கினார்கள். மிதுனின் தங்கை நிதிலா, கல்லூரிப் படிப்பில் கடைசி வருட மாணவி. பட்டாம்பூச்சியாய் சுற்றித் திரியும் அவள் நளினாவிற்கு நல்ல தோழி. அந்த அன்பு வட்டத்தின் பிடிக்குள் நளினா இன்பமாய் இருந்தாள்.

ஆனால், மிதுன் மட்டும் அதிகம் ஒட்டாமல் தள்ளியே இருந்தான். செங்கல்பட்டில்தான் அவர்களின் இருப்பிடம். மிதுன் கம்ப்யூட்டர் இன்ஜினியர். எந்நேரமும் காலில் சக்கரம் கட்டிக் கொண்டு இருப்பவன்.

திருமணமான புதிதில் நளினாவிற்கும் தயக்கம் இருந்ததால் அதைப் பெரிதாய் எண்ணவில்லை. செங்கல்

பட்டில் இருந்த வரையில் தாயின் கண்டிப்பிற்குப் பயந்தாவது விரைவாக வீடு திரும்பும் மிதுன் சென்னை வீட்டிற்கு வந்ததும் அடியோடு மாறிவிட்டான்.

கணவனின் அன்பை விட இனிப்பானது என்னயிருக்க முடியும். முதன் முதலில் தேர்வுக்கு தயாராகும் மாணவன், வாசலில் முதலில் கோலமிடும் பெண் இவர்களின் படபடப்பை போன்று தன் கையால் ரசித்து ருசித்து மிதுனுக்காய் செய்த உணவை அன்புடன் ஆவலோடு பரிமாறுவாள்.

அவனோ ஆவலாய் எதிர்பார்க்கும் அவளை விடுத்து, பலநாள் பட்டினி கிடந்தவனின் முன் விருந்து கிடைத்தால் எத்தனை வேகமாய் உண்பானோ அதைப் போல் அள்ளி நாலே வாயில் திணித்துவிட்டு நகர்ந்து விடுவான்.

சிரத்தையாய் அலங்கரித்துக் கொண்டு அவன் வரவிற்கென வழி மேல் விழி வைத்துக் காத்து இருப்பாள், வெளியே போகச் சொல்லி அழைத்தாலோ, எனக்கு வேலையிருக்கு நளினா.. உனக்கு போரடித்தால் நிதிலாவோடு போ! என்று கழன்று விடுவான். பத்திரிகைகளில் கூட புதுமணத் தம்பதிகளின் நெருக்கம் பற்றி படித்திருக்கிறாள் நளினா.

அத்தனையேன்.. பக்கத்து வீட்டு தாரணி திருமணமான புதிதில் எத்தனை உற்சாகமாய் இருப்பாள். கணவனும், மனைவியும் யாரும் அறியா வண்ணம் புன்னகையுடன் சீண்டிக் கொள்வதும், கேலியும், கிண்டலும், கணவனின் கைப்பற்றி பெருமிதத்தோடு அவள் தெருவில் நடப்பது, எத்தனை சுகம்.

அதில் பாதியளவு நெருக்கம் கூட மிதுன் தன்னிடம் காட்டவில்லையே என்ற ஆதங்கம் அவளிற்கு. வாரிச்



சுருட்டிப் போடும் அழகு இல்லையென்றாலும், அமரிக்கையான அழகு, வாளிப்பான உடல். அன்பான குணம் இருந்தும், கணவனைத் தன் வசப்படுத்த இயலவில்லையே. மிதுனின் தயக்கத்திற்குக் காரணம்தான் என்ன?

ஏமாற்றம் படர யோசிப்பாள். ஒரு வேளை பெற்றோர், கல்யாணமாகாத தங்கை எனும் உறவுகளுடன் இருப்பதால் மிதுன் தன் உணர்வுகளை கட்டுப்படுத்த முயல்கிறாரோ என்று கூட நினைப்பாள். ஆனால் அதுவும் தவறு என்பது சென்னை வீட்டிற்கு வந்த பிறகு புரிந்தது. எந்நேரமும் வேலை வேலையென்று ஓடும் குணம், அந்த நினைப்பைத் தவிர பிற எண்ணங்களில் மனதைத் திருப்பப் பழகாதவன் மிதுன்.

செங்கல்பட்டில் மேனேஜராய் பணி ஆற்றிய அவனுக்கு, சென்னையில் ஒரு BPO ப்ரான்ஞ் துவங்கி அதன் முழுப் பொறுப்பும் அவன் வசம் ஒப்படைக்கப்பட 24 மணி நேரமும் உழைக்கத் தயாரானான் அவன்.

மாதத்திற்கு இருமுறை சென்னை ப்ரான்ஞ் பற்றிய அறிக்கையைத் தயார் செய்வதும், வெளியூர்களுக்கு டூர் செல்வது என அவன் வாழ்வு ஓடிக் கொண்டு இருந்தது. அதனால் மனைவி என்று ஒருத்தி இருப்பதையே முற்றிலும் மறந்து போனான் மிதுன்.அவனுடைய இலக்கு தொழில் மட்டுமே என்றாகிப்போனது.

நளினா அன்பு என்ற வளையத்தினுள் அவனைச் சிக்க வைக்க எத்தனையோ முறை முயன்றுவிட்டாள். ஆனால் அவனோ தொழில் போர்வையைப் போற்றிக் கொண்டு அவளைத் தனிமைக் குளிரில் தவிக்கவிட்டான்.

இப்போது கூட வேலை விஷயமாய் பெங்களூர் வரை சென்றிருக்கிறான். இரண்டு பெட்ரூம், ஹால், இதர

வசதிகள் அனைத்தும் கொண்ட அந்த மூன்றாவது மாடி ப்ளாட் மிதுனுக்கு ஆபீஸ் உபயம். அதில் இவள் மட்டும் தனிமையாய்.. தனிமையே துணையாய்...

காதலர்களின் தனிமை, இனிமை ஆனால் கல்யாண மான ஒரு பெண் உறவுகள் இன்றி கணவனின் முழுமன மும் இன்றி, தனித்திருக்கும் தனிமை. அப்பப்பா புரிந்து கொள்ள முடியாத ஒரு பயம் அடிவயிற்றில் கிளம்பியது நளினாவிற்கு. டெலிபோன் சிணுங்கியது. மனதின் ஓரம் ஒருபுறம் மிதுனாய் இருக்குமோ என்ற எதிர்பார்ப்பும் பொய்த்துப் போனது.

தோழி கீதா பேசினாள்.

''சொல்லு கீதா? என்ன இத்தனை சீக்கிரம் நீ இன்னும் ஆபீஸ் கிளம்பலைமா?''

''போகணும். எக்மோர் அருங்காட்சி அகத்திலே வர்ற புதன்கிழமையில் இருந்து புத்தகம் மற்றும் ஓவியக் கண் காட்சி நடக்குது. உனக்குத்தான் இதில் ஆர்வம் அதிக மாச்சே வர்றியான்னு கேட்கத்தான் போன் பண்ணேன். நீ வருவதாய் இருந்தால் லீவு போடலாம்.''

'நாளை மறுநாள் தானே மிதுனும் ஊரிலிருந்து வந் திடுவார் பிரச்சனை இல்லை.'

''ஓ.கே... நோ ப்ராப்ளம்! அப்போ நான் வைச்சிடவா. ஆபீஸ் கிளம்பணும்.'' ரிசீவரை அதனிடத்தில் பொருத் திய பின், மாற்றுடையெடுத்துக் கொண்டு குளியலறைக் குள் நுழைந்தாள். மிதமான சூட்டில் வெந்நீர் உடலைத் தழுவ உடல் புழுக்கம் குறைந்தது. ஆனால் மனதில் அப்படியேதான் இருந்தது.



இலேசில் குறையுமென்று தோன்றவில்லை. உடலெங் கும் பொங்கும் சோப்பு நுரையாய் பழைய நினைவுகள் மனதைப் போர்த்தின.

திருமணம் முடிந்து முதலிரவு, எத்தனையோ இனிய நினைவுகளை எண்ணி ஏங்கித் தவிக்கும் நாள். வாழ்நாள் முழுவதும் வாழப்போகும் இரு உறவுகள் உடலால் சங்கமித்து தங்கள் உள்ளங்களை இணைக்கும் திருநாள்.

அலங்கரிக்கப்பட்ட சிலையாய் மிதுனுக்காய் காத்திருந் தாள் நளினா கட்டில் முழுக்க தோரணங்கள், பால், பழங்கள் ரூம்ஸ்ப்ரேவுடன் அந்த அறையே கமகமத்தது. பூக் களுக்கு நடுவில் தானும் ஒரு புஷ்பமென இருந்தாள் அவள்.

மனம் ஆயிரமாயிரம் கனவுகளை மாலையாய் கோர்த்து தன் மன்னவனின் கழுத்தில் சூட ஆசையாய் காத்திருந் தாள். பளீரென்ற வேட்டி சட்டையில் மிதுன் அறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டான். நேற்றைய கோட்சூட் டில் பார்த்ததைவிட இன்னும் கம்பீரமாய் அழகாய், ஆயிரம் உடைகள் இருப்பினும் பாரம்பரிய உடையின் அழகே தனியல்லவா.

கண்களில் அவனை முழுமையாய் வாங்கிவிட்டு மிதுனின் காலில் விழுந்து பணிந்தாள், பாலைப் பருகத் தந்தாள், பருகினான் முழுவதுமாய்,

''எனக்கும் தரணும்...''

''ஏன் உனக்கு இல்லையா? முன்னாடியே எடுத்திட்டு வரவேண்டியதுதானே?''

''அது நீங்க பாதி குடிச்சிட்டு எனக்குத் தரணும்...!'' என்றாள் அவஸ்தையாய்.

''ஓ.. எனக்கு இதெல்லாம் பிடிக்காது நளினி. ஏன் நிக்கறே உட்காரு?''

அவன் தன் பெயரை அழைத்தது இனிப்பாய் இருந்தது நளினாவிற்கு. கட்டிலின் விளிம்பில் அமர்ந்தாள். ''நளினி எனக்கு சுத்தி வளைச்சுப் பேசிப் பழக்கமில்லை, நான் எதையும் வெளிப்படையாய் பேசுபவன் நீயும் அப்படி யிருந்தால் சந்தோஷம்!

''நளினி உறவுகள் மத்தியில் பணமில்லாத ஒரே காரணத்தினால் மிகவும் உதாசீனப்பட்டவன் நான். என் நோக்கம் பணம் தொழில் மட்டும்தான். என் அம்மா நீ எல்லாருமே இரண்டாம் பட்சம்தான் புரியுதா?''

அவள் பொதுவாய் தலையசைத்தாள். என்ன பேசுவது என்றே தெரியவில்லை? முதலிரவன்று கண்ணே! மணியே! என்று கொஞ்சுவான். கட்டியணைப்பான் என்ற நினைப்பில் இருந்தவளுக்கு வியாபார ரீதியான மிதுனின் பேச்சு ஒரு வகையில் வியக்க வைத்தாலும் எதையும் ஒளிக்காமல் நேரடியாய் பேசியது பிடித்தது.

சிலநேரம் மௌனம் நீடித்தது. அதை அவனே கலைத் தான். ''நளினி உன்னோட சர்டிபிகேட்ஸ் எல்லாம் வைச் சிருக்கியா?''

"இருக்கு!"

''எடுத்திட்டு வர்றியா?"

"இப்பவே வேணுமா....?!''

''சரி காலையில் தா... உனக்கும் ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்யறேன்.'' நளினா வியப்பைத் தேக்கியபடி அவனைப் பார்த்தாள்.



''உடனே முடிவு சொல்லணுமின்னு அவசியம் இல்லை யோசிச்சு சொல்லு நளினி. ஆவரேஜா படிச்சிருக் கவன் கூட 1000 ரூபாய்க்கு வேலைக்குப் போறேன். நீ கஷ்டப்பட்டு படிச்சதை ஏன் வேஸ்ட் பண்ணனும். அப்புறம் எனக்கு முக்கியமான இ.மெயில் அனுப்பணும். நம்ம கல்யாணப் பரபரப்பில் முடியலை, அரைமணி நேரமாகும்.''

''தூக்கம் வந்தால் தூங்கு!'' அவள் தோளைத் தட்டிக் கொடுத்து விட்டு, கட்டிலின் விளிம்பில் லேப்டாப்புடன் உட்கார்ந்து விட்டான். மேற்கொண்டு என்ன செய்வது எனப் புரியாமல் அமர்ந்திருந்தாள். தோழிகளின் கிண்டல், அவள் பார்த்த முதலிரவு சினிமாக் காட்சிகள், ''பார்த்து பக்குவமா நடந்துக்கோம்மா!'' என ரூமுக்குள் நுழையும் போது அம்மா கூறிய வார்த்தைகள் இவை எல்லா வற்றையும் அடியோடு மாற்றுவதைப் போலிருந்தது அந்த நாள்.

இதைப் போலவே பல இரவுகளில் மிதுனின் மடியில் அமர்ந்திருக்கும் அந்த இயந்திரத்தை வெறுப்புடன் பார்ப்பாள். அவன் வீட்டில் இல்லாத நேரத்தில் அதற்கு அடியும் கூட விழும். குழந்தைத் தனமான அந்த செயல் கூட அவள் கணவனிடம் கொண்ட அன்பை வெளிப் படுத்தின.

தன் ஒருத்திக்கு சமைக்கப் பிடிக்காமல் இரண்டு பழங்களை விழுங்கி விட்டு தோட்டத்தின் புறம் நடந்தாள். மலர்கள் அவளைக் கண்டு நகைத்தது. கீழே விழுந்து கிடந்த இலைகளை பெருக்கி சுத்தம் செய்தாள், தண்ணீர் பாய்ச்சினாள். ஈரமான மலர்களின் புத்துணர்வு தனி உற்சாகம் தந்தது.

கொடியில் இருந்து மலர்களைப் பறிப்பதில் அவளுக்கு என்றுமே விருப்பம் இருந்ததில்லை. அப்பூக்களின் புன்னகை முகம்தான் அவளின் ஆறுதல். அவளின் தனிமைப் புயலைப் போக்க விரும்பி ஏற்றதுதான் தோட்ட வேலை.

நீண்டு செல்லும் நேரத்தை கொலை செய்ய ஷாப்பிங் போவதாய் முடிவு செய்து, காலாரா நடந்தாள் சூப்பர் மார்க்கெட் சென்று தனக்கு தேவைப்பட்ட பொருட்களை வாங்கினாள். வீட்டின் முகப்பில் சங்கிலியில் தொங்க விடும் குரோட்டன் செடிகளை வாங்கினாள் அனைத்தை யும் காரிடாரில் வைக்கும்படி சிறு டேபிளுக்கும் ஆர்டர் தந்தாள் பின் இறங்கி நடந்தபடியே பார்வையை ஓட விட்டாள்.

நேரம் ஆறைக் கடந்து விட்டபடியால், தெரு விளக்கு கள் உயிர்பெறத் துவங்கிவிட்டன. ஒளி வெள்ளமாய் பிரகாசிக்க, அலுவலகம் முடித்து வீட்டுக்கு செல்பவர்கள் புத்தகங்களை எடுத்துச் செல்லும் பிள்ளைகள் என அவரவர் வேலைகளில் முனைப்பாகத்தான் இருந்தார்கள். திடீரென அவள் செல்போன் அழைத்தது.

''ஹலோ...''

''நான்தான் மிதுன் ஊரிலிருந்து நேராய் ஆபீசிற்கு வந்துவிட்டேன்.. நைட் வீட்டுக்கு வந்திடறேன்.''

''சரிங்க, அப்புறம்..'' அவள் மேற்கொண்டு பேசும் முன் இணைப்புத் துண்டிக்கப்பட எரிச்சலாய் வீடு நோக்கி நடந்தாள்.

ஊருக்கு சென்று நான்கு நாட்கள் ஆகிறது போனும் இல்லை ஒன்றும் இல்லை அட்லீஸ்ட் எப்படியிருக் கேன்னு கூடவா கேட்கக் கூடாது.



இரவு சமையலை முடித்துவிட்டு, குளித்தவள் நீல நிற சேலையை அணிந்தாள். மல்லிகைச் சரத்தை சூடிக் கொண்டு கணவனுக்காய் காத்திருந்தாள். நேரம் பதி னொன்றைத் தொட்டது. உள்ளூரில் இருந்தாலும் அவன் ஒருபோதும் நேரத்தோடு வீடு திரும்பியதில்லை.

கர்ணனின் கவசம் போல் ஆபீஸ் பைல்கள் எப்பவும் அவனுடன் ஒட்டிக்கொண்டு இருக்கும். ஒரு கணவ னுக்கு தன் மனைவியைக் காட்டிலும் மற்றொன்றின் மீது ஈர்ப்பு இருக்கும் என்றால் அது எத்தனை கொடுமையான விஷயம்.

காலிங்பெல் இரண்டுமுறை ஒலித்தது. நளினா கதவைத் திறந்தாள். அவளைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான் மிதுன்.

''நீ இன்னும் தூங்கலையா?'' என்றான் அவள் அலங் காரத்தை கவனியாமலேயே.

''இன்னமும் சாப்பிடவும் இல்லை.''

''ஏன்? எனக்காகக் காத்திருக்க வேண்டாம் என்று எத்தனை நாள் சொல்வது?'' எரிச்சல் மண்டிக் கிடந்தது அவன் குரலில்.

பேசாமல் பரிமாறினாள்.

''நீயும் சாப்பிடு.''

''வேணாம் பசியில்லை'' - மெலிதான குரலில் கூறினாள்.

அவன் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தவில்லை சாப்பிட்டான், வழக்கம்போல் படுக்கை அறையில் புகுந்து கொண்டான். அவன் மடியில் லேப்டாப் துகி லுரியப்பட்டுக் கொண்டு இருந்தது.

நளினா பொங்கிய கண்ணீரை மறைத்த படியே மற்ற வேலைகளைக் கவனித்தவள் பெட்ரூமிற்கு வரும்போது வேலையில் ஆழ்ந்திருக்க, மனம் பாறையாய் கனத்தது. தன்னை ஒரு பொருட்டாய் மதிக்கவில்லை. அந்த இயந்திரம் கூட தன்னைவிட அதிக நேரம் அவனுடன் இருக்கிறது என்ற நினைப்பில் எப்போது தூங்கினாளோ தெரியாது.


மசமசப்பான இருட்டில் ஏதோ கனமாய் தன்மேல் விழுந்து கிடப்பதையுணர்ந்தவள் மிதுன் தன் உடலை ஆராய்ந்ததை உணர்ந்தாள்.

மென்மையாய் வருடி பெண்மையை நெகிழச் செய்து அதன் மூலம் சுகம் அடைவதை விட, உடைகளற்ற உடலை மூர்க்கத்தனமாய் அடைவதில்தான் அவனுக்குத் திருப்தி போலும். காதோரம் உஷ்ணமான அவன் மூச்சு மிதுன் திருப்தி பெற்றதும் தள்ளி சென்றது.


நளினா மலையின் உயரத்தில் இருந்து கீழே விழுந்ததைப் போல் உணர்ந்தாள், அவளும் மனுஷிதானே.. அவள் விருப்பம், திருப்தி உறவில் முழுமைப் பெற்றாளா என்ற எண்ணமே இல்லாமல் தன் வேலை முடிந்ததும் நகர்ந்து விடும் அவனை வெறித்தாள்.

அவன் உறங்க முயல்வது புரிந்தது. வெளிப்படையாய் அழுவதை விடவும் மனதிற்குள்ளே அழுவது ஆபத்தானது. ஆனால் மனக்கண்ணீர் மாறாத வடுக்களையல்லவா உண்டாக்குகிறது.





# 2



சிலர் கலராய் வண்ணங்களைக் குழைத்து தூரிகைகளை சீர்படுத்தி ஓவியப் பலகையில் வெள்ளை நிற ஷார்ட்டை க்ளிப்பின் உதவியால் சொருகி வைத்தான் சிவமணி. மனதிற்குள் வரைய வேண்டிய ஓவியத்திற்கு உருவம் கொடுத்து அதை கை வழியே வெளிக் கொணர்ந்தான்.

சிவமணி பெயருக்கேற்றாப் போல் சிவந்த தேகமும், வெள்ளை மனதும் உடைய 32 வயது வாலிபன், சிறு வயது முதலே ஓவியக் கலையில் அதிக ஆர்வமும் கொண்டவன். மகனின் இந்தக் கலையார்வத்திற்கு தீனியிடும் விதமாய் அவனின் தந்தையும் வேண்டிய ஊக்குவிப்பும், உதவியும் செய்திட, இதோ கலைத்தாயின் மடியில் புரளும் குழந்தையென ஆகிவிட்டான். இன்றைய தேதியில் தமிழகத்தின் முன்னணி ஓவியர்களில் அவனும் ஒருவன். இரண்டு சிறந்த ஓவியக் கலைஞருக்கான விருதும் பெற்றவன்.

பல இடங்களில் அவனை வரையச் சொல்லியும், கண்காட்சியும் நடத்துவார்கள்.

''சிவமணி,'' தந்தையின் குரலினால் ஈர்க்கப்பட்டு திரும்பினான் - ''என்னப்பா?''

மகனின் கைவிரல்கள் விளைவித்த வண்ணத்தினை பார்த்தார். இமை மூடிய விழிகள் சிந்தும் கண்ணீர்

துளிகளை சிப்பிகள் தாங்குவதைப் போல 'அன்பு' என்ற தலைப்பில் வரையப்பட்டு இருந்த அந்த ஓவியத்தைக் கண்டவரின் கண்கள் பாராட்டுதலோடு மகனின் புறம் திரும்பின.

நேரம் பதினொன்றைத் தாண்டி விட்டது. ''இன்னும் தூங்காமல் உடம்பை கெடுத்துகிட்டு வரையணுமா? நேரத்தோட தூங்குப்பா.''

''அப்பா! சென்னை ஆர்ட் கேலரி நடத்துற ஓவியக் கண்காட்சியில் ஓவியங்களை கேட்டு இருக்காங்க? அதான் லேட் நைட் ஆனாலும் பரவாயில்லைன்னு செய்துகிட்டு இருக்கேன்.''

''அப்படியா? போனமுறை கோவையில் நடந்த கண்காட்சிக்கு உன் ஓவியங்களை வாங்கிப் போக ஆள் வந்தா மாதிரி இப்போ யாரும் ஆட்கள் வர்றாங்களாப்பா?''

''இல்லைப்பா. இந்த முறை நானே நேரில் போய் கொடுத்திடலாமின்னு இருக்கேன் எனக்கும் கொஞ்சம் ரிலீப்பா இருக்கும்.''

''என்னைக்குக் கிளம்பறே சிவா?''

''நாளைக்கு, நாளை மறுநாள் தான் கண்காட்சி. திரும்ப ஒரு மாதம் ஆகலாம்ப்பா.''

''அப்படியா? சிவா உன்கிட்டே நான் கொஞ்சம் பேச லாமா?''

''என்னப்பா இது? என்கூட பேச பர்மிஷன் கேட்கணுமா என்ன?''

''என்ன செய்யறது சிவா இப்போ உள்ள பிள்ளை களுக்கு பெத்தவங்களோட பேசறதுக்கே டைம் கேக்கு



றாங்க ஆனா பெத்தவங்க மனசைப் புரிஞ்சிக்க மறுக்கற நீங்க எப்படிப்பா லைப்பில் முழுமையடைய முடியும்.

''நீ சாதிச்சிட்டே ஆனா ஒரு மனுஷனா நீ இன்னும் முழுமையடையலை.''

''அப்பா...''

''ஆமாப்பா... உனக்கு 30 வயசுக்கு மேல ஆயிடுச்சு உன் வயசுப் பிள்ளைகள் இன்னோரம் கல்யாணம் பண்ணி புள்ளை குட்டி பெத்துக்கிறாங்க, நீ இன்னமும் கல் யாணத்தைத் தள்ளி போட்டுகிட்டே போறீயேப்பா.''

அவன் மௌனம் சாதித்தான்.

''தம்பி, உங்கம்மா உயிரோட இருந்தா இதைப் பற்றி அவளே பேசியிருப்பா. நான் உன்னை நல்லபடியா வளர்த்திட்டேன். ஆனா, சரியாப் புரிஞ்சுக்கலையோன்னு மனக்குக் கவலையா இருக்குப்பா!''

''அப்பா என் மனசிலே எதுவுமே இல்லை இதுவரைக் கும் கல்யாணத்தைப் பற்றி நான் நினைக்கவேயில்லை, நீங்க வீணாக எதையும் நினைச்சுக் கவலைப்படாதீங் கப்பா?!''

''உன்னோட டிரஸ்ஸையெல்லாம் எடுத்து பேக் பண்ணட்டுமா? என்னென்ன பெயின்டிங்ஸ் எடுத்துப் போறேன்னு சொல்லுப்பா ரெடி பண்ணிடறேன்.''

அவன் விவரங்கள் கூறியவுடன், பாதி தூரம் நடந்தவர் தயங்கியபடியே திரும்பி, ''தம்பி உன் மனசிலே யாராவது இருந்தா சொல்லிடுப்பா நான் தவறாக எண்ண மாட் டேன்!'' என்றார்.

''அய்யோ அதெல்லாம் இல்லேப்பா நீங்க போங்க நான் கொஞ்ச நேரம் தூங்கப் போறேன்.'' மனமில்லாமல்

அவர் நகரவும், அப்பாவிடம் கூறிய முதல் பொய் மனதில் உரைத்தது.

காதல் எத்தனையோ கற்றுக் கொடுக்கிறது. பொய் பேசக் கூட, உன்மனதில் யாராவது இருக்கிறார்களா என்ற கேள்விக்கு மனதார இல்லையென்று சொல்லியிருப் பானா. என்றோ பார்த்த அவளை, இனி பார்ப்போமா என்ற எந்த எண்ணமும் இன்றி நாட்களை நகர்த்துவதைக் கூறினால், அவரால் தாங்கிக் கொள்ள இயலுமா, கேள்விக் கணைகள் ஒவ்வொன்றாய் மனதைத் துளைக்க, திரைச் சீலையை விலக்கி ஜன்னலோரம் பார்வையை செலுத்தி னான். இருள் படர்ந்த வானத்தினை எட்டிப் பிடிப்பதைப் போல் அலைகள் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக் கொண்டு கரையை முத்தமிட்டன. ஆங்காங்கே எரிந்த மஞ்சள் நிலவொளியில் விவேகானந்தர் பாறை கம்பீரமாய் நின்றிருக்க, அதன் அருகில் இருந்த வழுக்குப் பாறையை விட்டு கண்கள் அகல மறுத்தன.

அந்தப் பாறை அவன் மனதை விட்டு அகலாத ஒரு இடம் அல்லவா! அந்த நாள் கண்ணில் காட்சியாய் விரிந்தது.

இளமஞ்சள் நிறத்தினை வானம் பூசிக் குளித்திருந்த காலை நேரம் சூரியன் மெல்ல மெல்ல கடல்தாயின் மடியில் இருந்து தலையை நிமிர்த்தினான். கடற்கரையில் சொற்பக் கூட்டமே இருந்தது. சிவமணிக்கு எப்பவுமே அதிகாலையில் கடற்கரையில் நடந்து இயற்கையின் அழகை அள்ளிப் பருகுவது வழக்கம். அதே போல அன்றைய தினம் ஈரக்காற்றை சுவாசித்தபடி நடந்து வந்தவனின் கண்களில் அவள் தென்பட்டாள்.



நீல நிற உடையில் கடலினில் இருந்து எழுந்து வரும் தேவதைப் போல் தன் துப்பட்டாவினைப் பறக்கவிட்டு, தலைக்கு மேல் பிடித்தபடியும், அலை அலையாய் அவளுடைய கூந்தல் புரண்டு விழவும், ஒரே விநாடிதான் இமை மூடி திறக்கும் நேரம் திடீரென அவன் கண்களில் இருந்து மறைந்தாள்.

சிவமணியும் அதோடு எத்தனையோ முறை அந்த பாறை இடங்களைச் சுற்றி வந்துவிட்டான். அவள் மட்டும் கண்ணில் படவே இல்லை, மனம் திடீரென வெறு மையைப் பூசிக் கொண்டது போல் இருந்தது. எப்பவும் காலைநேரக் காற்று அவன் உடலையும், மனதையும் குளிர்விக்கும். ஆனால் இன்றைய தினம் அது அனலைப் பூசியதுபோல் எரிந்தது.

அவள் பெண்தானா இல்லை தேவதையோ என்று மனம் குழம்பியது. அறைக்கு வந்தான் ஜன்னலின் திரையை விலக்கி பார்வையைப் படர விட்டான். அவள் எங்கும் தென்படவில்லை, மசமசப்பான விடியல் புத் தொளி வீசிப் புறப்பட்ட போதும் அங்கு நிலவிய ஜனத் திரளில் அவள் மட்டும் கண்ணில் சிக்கிடவில்லை.


ஓவியப் பலகையின் முன் வந்தான். அலைபாயும் மனதை ஒருநிலைப்படுத்தி தூரிகையைக் கொண்டு தான் கண்ட காட்சியை வரைந்தான்.

சுமார் ஒன்றரை மணி நேரங்களுக்குப் பிறகு முழுமைப் பெற்ற அந்த ஓவியத்தைப் பார்த்தவனின் கண்களில் திருப்தி நிலவியது. ஆனால் ஒரு விநாடி விடிவெள்ளியின் பின்னணியில் பார்த்த முகம் இப்படி மனதில் பதியுமா என்ற கேள்வி ஒன்று அவனுள் பூதாகரமாய் எழுந்தது.


அன்று வெள்ளைக் காகிதத்தில் வரைந்த ஓவியம் ஆறு வருடங்களுக்குள் அவன் மனதில் பல்வேறு மாற்றங் களை ஏற்படுத்திவிட்டது.

ஒரே பார்வையில் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண் டவள் தன் ஓவிய உலகில் எத்தனையோ மாடலிங் பெண்களைச் சந்தித்திருக்கிறான். அவர்களில் இல்லாத ஈர்ப்பு இந்தப் பெண்ணிடம் ஏற்பட்டு விட்டது ஆச்சரி யந்தான். அவன் அந்தப் படத்தை ஊன்றிப் பார்த்தான். இத்தனை ஆழமாய் என்னுள் பதிந்து விட்ட பெண்ணே உன் பெயர், ஊர் எதுவுமே எனக்குத் தெரியாது-ஆனால் எனக்குள் மிகப்பெரிய மாற்றத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்தி விட்டாய்.

இனி எப்போது உன்னைக் காண்பேனோ ஆனால் உன்னைத் தவிர வேறொரு பெண்ணைக் கண்ணிலும் காணமாட்டேன். பேசியபடியே உறங்கிப் போனான் மறு நாள் தனக்கு ஏற்படப்போகும் மாற்றத்தினை அறியாமல்.



# 3



பகல் புறப்பட்டது. ஒவ்வொரு விடியலும், உலகிற்கு ஒரு ரகசியத்தைப் பறை சாற்றுகிறது. எதிர்காலமாக இருந்தது. இப்போது நிகழ்காலமாகிவிட்டது. இந்த நிகழ்காலமும் கடந்த காலமாகிவிடும் போது என்ன வாகும்.



நளினாவும், கீதாவும் ஸ்கூட்டியில் எக்மோர் ஓவியக் காட்சி வாசலில் நின்றார்கள். வந்தவர்களை வரவேற்க பட்டு உடையணிந்த இரு சிறுவர்கள் கையில் மலர் செண்டுடன் வரவேற்றனர். சென்னை ஆர்ட் கேலரி உங்களை அன்புடன் வரவேற்கிறது என்ற பேனரைத் தாண்டி வந்தார்கள்.

சிகப்பு நிறக் கம்பளம் விரிக்கப்பட்டு இருந்தது. அங்கு வந்தவர்களை ஒரு நோட்டம் விட்டாள். கல்லூரி மாண வர்கள், முதியோர்கள், காதலர்கள் ஏன் கணவன் மனைவி யென ஒருவருக்கொருவர் சீண்டலுடன் தங்களின் ரசனைகளைப் பரிமாறிக் கொண்டனர்.

ஒரு வயதான தம்பதிகள் எதிரே இருந்த காதலர்களின் ஓவியத்தைக் கண்டு பேசியது காதில் விழுந்தது. ராஜம் அந்தப் படத்தைப் பார்த்தியா? அவர்கள் கண்களில் எத் தனை காதல் இதைப் பார்த்த போது, ''முதன் முதலில் நாமிருவர் சந்தித்ததுதான் நினைவுக்கு வருகிறது.''

''நிஜமாவா?''

''பின்னேயென்ன? அந்த ஒரு விழிப்பார்வையில் விழுந்தவன்தானே நான் இன்றைய வரையில் எழாமல் தவிக்கிறேன்.''

''போங்க?'' அந்த பெண்மணி வெட்கப் புன்னகை யுடன் சிரிக்கவும், அது பொது இடம் என்பதையும் மறந்து இருவரும் வயதைக் கடந்து பேசியது நளினாவிற்குள் என்னவோ பிசைந்தது.

வயதான தம்பதிகள் இவர்களுக்குள் எத்தனை அன்னி யோன்யமாய் வயதை அனுபவிக்க வேண்டியதில் நாங்கள்

இருவரும்.. சாதாரண சிறு பொறியாய் மனதில் உண்டாகும் வேதனை இது போன்று மற்றவர்களைக் காணும் போது பெருகி பெறும் கொழுந்தாய் மாறி சுட்டெரிக்கிறது. எங்கோ வெறித்தபடி இருந்தவள் அந்த ஓவியங்களை கண்டதும் மற்றதையெல்லாம் மறந்தாள்.

மார்டன் ஓவியங்கள், இயற்கை காட்சிகள், உலக அதிசயங்கள், இவை தவிர சில நூற்றாண்டுகளுக்கு முன்புள்ள வாழ்க்கையை அவன் ஓவியங்கள் வெகு சுந்தரமாய், உயிரோட்டத்தோடு பதிந்திருக்கின்றன.

மாமல்ல புரச் சிற்பங்களை நேருக்கு நேர் பார்த்தது போன்ற பிரமிப்பை ஏற்படுத்தி இருந்தது. ரதங்கள், பல்லக்குகள், விளையாட்டுகள் வில்வித்தை, போர்க்களம், அந்தப்புரம் அதில் மகளிரின் பூப்பந்தாட்டம், நீராடும் அறை, காதல் மயக்கம் என சகலமும் சதுரப் பெட்டிக்குள் ஓவியங்கள்.

இவை தவிர கண்ணாடியில் ஓவியங்களும், தங்க வேலைப்பாடுகளுடன் கூடிய டிசைனும் வெகுவாய் கவர்ந்தன. இயற்கை ஓவியங்களை கண்ணாடியில் வரைந்தால் அதன் அழகே தனிதான் மனதை கொள்ளை கொண்டது.

"ரொம்பவும் அற்புதம் கீதா... என்னுடைய நேரம் பயனுள்ள முறையில் செலவழிந்து இருக்கிறது. இத்தனையும் கை வண்ணத்தில்.. வெகு அற்புதம்."

நளினா ரொம்பவே உணர்ச்சி வசப்பட்டவளாய், இருக்க ஓவியம் வரைவதில் கூட இத்தனை முறை உண்டா என்று வியந்தார்கள். வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த பல ஓவியர்களின் படங்கள் முதல் கூடத்தில்



இருந்தன. அதற்கு அடுத்தாற்போல் இருந்த கூடத்தில், 'தேடல்' என்ற தலைப்பின் கீழ் ஓர் அழகிய ஓவியம்.

ஒருகணம் அதை அசையாது பார்த்தவளுக்கு சுரீரென்றது. அது தன் புகைப்படம் ஆம் அதிலிருந்தது நளினாவேதான். அந்த ஓவியத்தின் அடியில் தேவி தரிசனம். சிவமணி என்று இருந்தது.

"என்ன கீதா என் படம் இங்கே எப்படி?"

"தெரியலையே? ஒருவேளை எனக்குத் தெரியாம நீ போஸ் கொடுத்தியோ என்னவோ?"

"விளையாடதே கீதா? இதுயெப்படி வந்ததுன்னே எனக்குத் தெரியாது?!" அவள் நெற்றியில் குழம்ப முடிச்சுகளோடு வியர்வை துளிகளும் அணி வகுத்தன.

"சரி! சரி! டென்ஷனாகாதே! இதைப்பற்றி யார்கிட்டயாவது விசாரிப்போம்." சுற்றிலும் பார்வையை ஓட்டியவர்களின் கண்ணில் அந்த டை கட்டிய ஆசாமியை நெருங்கினார்கள்.

"எக்ஸ்யூஸ்மி ஸார்."

"எஸ் மேடம்...!"

"ஸார்.. இந்த கண்காட்சியை நடத்தறது யாருன்னு தெரியுமா?"

"இண்டியன் ஆர்ட் கேலரி, எனி ஹெல்ப் மேடம்...?"

"எஸ் ஸார் இந்த பெயிண்டிங்ஸ் எல்லாம் விற்பனைக்குத்தானே."

"எஸ் மேடம். விச் பெயிண்டிங் ஆர் யூ லைக் டூ?"

"இதோ, 'தேடல்' தலைப்பில் சிவமணி என்பவர் வரைந்த ஓவியம் இப் பூ டோண்ட் மைண்ட் அவரைப் பார்க்க முடியுமா?"

"ஷ்யூர், இன்னும் அரைமணியில் கேலரியில் இருப்பார். வெயிட் பண்ணிப் பாக்குறீங்களா...?"

"கண்டிப்பாய்...!"

"ஆனா.. இந்த பெயிண்டிங் விற்பனைக்கு இல்லை என்று அதிலேயே எழுதியிருக்கே?"

மேற்கொண்டு பத்து நிமிடங்களை தவிப்பாய் கரைக்கும் சமயம், நளினாவின் செல்போன் உயிர்ப்போகும் வலியில் முனகியது.

"ஹலோ...!"

"ஏய்... நீ எங்கே இருக்கே?" கோபமாய் வெளிவந்தது மிதுனின் குரல்.

"என்னங்க?"

"கேட்டதற்குப் பதில்..." நான் வீட்டுக்கு வந்து பத்து நிமிடமாச்சு."

"எக்மோரில் ஒரு ஆர்ட் கேலரியில், ஏன்?"

"மண்ணாங்கட்டி.. நான் திடீரென வெளியூர் செல்ல வேண்டிய நிர்பந்தம் பஸ்ஸோ, ஆட்டோவோ எதையாவது பிடித்து உடனே வீடு வந்து சேரு" இணைப்பைத் துண்டித்தான்...!"

"யாரு நளினா போன்லா?"

"மிதுன்தான்! எங்கேயோ வெளியூர் பயணமாம். நான் வீட்டைப் பூட்டி சாவியைக் கொண்டு வந்திட்டேன். போயே தீர வேணடிய கட்டாயம்."



"சரி வீட்டுக்குப் போய் முதலில் உன்னவரைக் கவனி. நான் இங்கேயிருந்து சிவமணியைச் சந்தித்து விவரம் அறிந்து கொண்ட பின் இரவு வந்து உன்னைச் சந்திக்கிறேன்."

தயங்கியவளிடம்,


"போ நளினா.. மிதுனைப் பற்றி உனக்கே தெரியும். தேவையில்லாத பிரச்சனைக்கு நீயே வழி வகுத்திடாதே...!"

"அது வந்து...!"


"போ நளினா என்மேல நம்பிக்கை இல்லையா?"

"ம்.. சரி உடனே எனக்கு போன் பண்றியா?" செல்வதற்கே மனசில்லாமல் கடைசியாய் தன் ஓவியத்தின் மேல் ஒருமுறை பார்வையை சுழல விட்டுப் பின் வாயிலை நோக்கி நகர்ந்தாள். அவள் ஆட்டோ பிடித்து நகர்ந்த மூன்றாவது நிமிடம் சிவமணி உள்ளே நுழைந்தான்.

விதி தன் கண்ணாமூச்சு விளையாட்டின் முதற் சுற்றை அங்கு ஆரம்பித்து இருந்தது.



## 4



பெங்களூர் ஏர்போர்டில் இறங்கிய மறுவிநாடியே மிதுனை ஆபீஸ் கார் ஒன்று பிக்-அப் செய்து அந்த உயர்ரக ஓட்டலில் சேர்த்தது. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட அறையில் சேர்ந்தான். முற்றிலும் குளிரூட்டப்பட்ட

அறை. இரண்டு குஷன் பெட்டுகள், இந்த வார, மாத மேகஸீன்கள் என்றும் சகல வசதியோடு இருந்தான்.

ஐந்து நிமிடங்கள் ரிலாக்ஸ் செய்த பின்னர், ஷவரோடு அடங்கிய குளியலறையில் குளித்தான். அலுப்பு தீர. பின்னர் இண்டர்காம் மூலம் காலை உணவை முடித்தான்.

செல்லின் மூலம் ஆபீஸிற்குத் தொடர்பு கொண்டு தெய்வசகாயத்தினைச் சந்திக்க அனுமதி கோரினான். பின்னர், நளினியின் நம்பருக்கு தொடர்பு கொண்டான் ஏனோ லைன் கிடைக்காமல் போகவே, ஆபீஸிற்குப் புறப்பட்டான். ரூமைப் பூட்டிவிட்டு அன்று வாரமுதல் நாள் என்பதால் வெகு பரபரப்பாய் இருந்தது அந்தக் கட்டிடம்.

*

அடுக்காய் கண்ணாடிச் சுவர்களுக்கு நடுவில் கம்ப்யூட்டர் சகிதமாய் ஆண்களும், பெண்களும் தத்தம் பணிகளை மேற்கொண்டு இருக்க, ரிஷப்ஷன் பெண்ணிடம் தான் வந்து இருப்பதை தெரிவித்து விட்டு பின் நகர்ந்தான் மிதுன்.

தெய்வசகாயம் நாற்பது வயதிற்குள் வழுக்கை வாங்கியிருந்தார். க்ரே கலரில் சபாரி சூட் அவருக்கு பாந்தமாய் இருந்தது.

''ப்ளீஸ் டேக் யுவர் சீட்...''

''குட்மார்னிங் ஸார்.''

''ஹௌ ஆர் யூ மிதுன்....''

''பைன் ஸார்..''

''ஹௌ இஸ் யுவர் சென்னை ப்ரான்ஞ்?''



''வெரி வெரி பைன் ஸார். லாஸ்ட் மன்த் ப்ராஜெக்ட் ரிப்போர்ட் பற்றி எதுவும் சொல்லலையே சார்.''

''மிதுன் உங்க வேலையைப் பற்றி சொல்லணுமா நான் என் சின்ன வயசிலே இருந்தியோடினது எல்லாம் நினைவிற்கு வருது உங்களைப் பார்த்தால்...!''

''ஸார் போனமுறை பூனே போய் இருந்தப்போ சுதன் கம்ப்யூட்டர்ஸின் யூரோ ப்ராஜெக்ட் பற்றி உங்ககிட்டே பேசினேன் இல்லையா!''

''எஸ் வெரிகுட் ஜாப்!''

''தேங்க் யூ ஸார் இப்போ அதே போல் யூரோ ப்ராஜெக்ட் நம்ம கம்பெனிக்கும் வந்திருக்கு. கொட்டேஷன்ஸ் எல்லாம் ஓ.கே. ஒரு ப்ராஜெக்ட்டில் மொத்தம் 30 பிரிவுகள் இருக்கு.''

''அதெல்லாம் சரி இப்போ நாம முடிக்க வேண்டிய ஜாப்பே இன்னும் எட்டு மாதத்திற்கு கண்டினியூ ஆகுமே.. இந்த யூரோ ப்ராஜெக்டை எப்படி முடிக்கப் போறீங்க?''

''இப்போயெல்லாம் ஆபீஸ் வேலையை இண்டர்நெட் மூலமாகவே வேலை செய்கிறார்கள். அதனால நெட்லே அட்வர்டைஸ் பண்ணியிருக்கேன். நல்ல ரெஸ்பான்ஸும் இருக்கு.''

''குட்... தென்?''

''பிப்டீன் டேஸ் ஒன்ஸ் ஆர்டர் தந்திட்டு ஜாப் முடித்து தந்த இருபதாவது நாள் பேமண்ட் தர்றதா முடிவு பண்ணிட்டேன். இதனால வேலையும் சுலபமா முடியும். சம்பளம் கம்மியா தரலாம். இரண்டுமே கம்பெனிக்கு லாபம்தானே.''

"ஆனா எல்லா வொர்க்கர்ஸ்ஸும் வேலையை சரியா முடித்து தருவாங்கன்னு சொல்ல முடியாதே?"

"எக்ஸ்பீரியன்ஸ், குவாலிட்டியானவர்களுக்கு ஒரு சின்ன இன்டர்வியூவோடு வித் இன் ஃபைவ் டேஸ் ப்ராக்டீஸ் தரலாம்."

"நமக்கு ஸேப்டியா ரீபன்டபிள் ஸ்கீம்ல் ஒரு குறிப்பிட்ட தொகையை அட்வான்ஸா வாங்கலாம்.. 95 சதவீதம் அக்யூரஸி இருந்தால் மட்டுமே பேமண்ட்டுன்னு டெர்ம்ஸ் அண்ட் கண்டிஷனில் அறிவிச்சிடலாம்."

"வெல்டன் மிஸ்டர். மிதுன் யூ ஆர் வெரி ப்ரில்லியண்ட்.. நிச்சயமாய் இந்த பிராஜெக்டை சக்ஸஸ்புல்லா உங்களால செய்ய முடியும் ஆல் தி பெஸ்ட், இப்பவே சர்க்குலர் ரெடி பண்ணச் சொல்லி சைன் பண்ணிடறேன். தென் யூ கோ டு பர்தர் ஸ்டெப்ஸ்."

"தேங்க்யூ வெரிமச் ஸார்!" அறையை விட்டு வெளியேறியவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டபடியே ஒட்டலை அடைந்தான்.

விசாலமான ஹால், சுற்றிலும் கண்ணாடிப் பிரதிபலிப்பில் நளினாவின் ஓவியம் ஏனோ இன்று மிகவும் அழகாய் இருப்பதாய் தோன்றியது. இந்த ஆறு வருடங்களாக உன்னைக் காண்பதற்காக நான் காத்திருந்தது தவம். அது நிறைவேறப் போகிறது.


நான் தவித்த தவிப்பிற்கும் என் தேடலுக்கும் இதோ இன்று விடை கிடைத்து விட்டது. நான் உன்னை முதன் முதலில் சந்திக்கும் என் அன்பை உனக்குப் புரிய வைப்பேன் தேவி, தன்னையே எண்ணிக் கொண்டு ஒருவன்




இத்தனை வருடங்களாய் உருகி இருக்கிறானே என்ற நினைப்பில் நீ என்ன செய்வாய் தேவி.

புன்னகைப்பாயா? இல்லை அழுவாயா? மௌனத்தினால் சம்மதம் என்று சொல்வாயா? அந்த நேரம் உன் அழகான கன்னத்தில் படரும் சிவப்பை நான் ரசிக்க வேண்டும் தேவி, பார்த்தியா உன்னையே கேட்கிறேன் நான் உன்னை நேரில் பார்க்கும் போது எப்படிப் பேசப் போகிறேனோ?

அன்று மதியம் நடந்த நிகழ்வு கண் முன்னே விரிந்தது.



# 5



சிவமணி கேலரிக்குள் நுழைந்த போது, தன்னைக் காண ஒரு பெண் காத்திருக்கிறாள் என்று தெரியவும், விசிட்டர்ஸ் ஹாலில் அமர்ந்து அந்தப் பெண்ணை சந்திக்க தான் தயாராய் இருப்பதாய் தெரிவித்தான்.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க பெண் தன் எதிரில் அமரவும் அவளை கேள்வியாய் நோக்கினான், வந்தவள் மேற்கொண்டு எதுவும் பேசாமல் போகவே, "வாட் கேன் ஐ டூ யூ மேடம்?" அழகான ஆங்கிலத்தில் மிருதுவான குரலில் கேட்டான்.

கீதா ஒருமுறை அவனைப் பார்வையால் நனைத்தாள், ஆறடி உயரம், வெகு சீராய் உடற்கட்டு, கூர்மையான

கண்கள் அதில் கண்ணியம் இருந்தது. எடுப்பாய் நாசி பிங்க் நிற உதடுகள் அவனுக்குப் புகைப்பழக்கம் இல்லா ததை ஊர்ஜிதம் செய்தன.

''ஐயம்...' கீதா 'தேடல்' என்ற தலைப்பில் உள்ள ஓவியம்...?''

''என்னுடையது தான்.''

''உங்க ஓவியம் மிகவும் அற்புதம் ஸார். தலைப்பு அதைவிட பிரமாதம். அதை எனக்கு விலைக்குத் தர முடியுமா?''

''ஸாரி மேடம்... இது விற்பனைக்கு அல்ல இது வெறும் ஓவியம் அல்ல என் உயிர்.''

''ஓ...! இந்த ஓவியத்தின் மாடல் யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா?''

''தெரியாது மேடம்?''

''என்னது தெரியாதா?''

''நம்ப முடியலையா? உண்மைதான்! மேடம் என்னமோ என் மனதிலுள்ளதை உங்களிடம் கூறச் சொல்லி என் உள்ளுணர்வு சொல்லுது. நான் கன்னியாகுமரியில் பிறந்து வளர்ந்தவன், ஓவியம் வரைவதுதான் என் தொழில், கண்காட்சி நடத்துவதற்கு நான் பலமுறை ஊருக்குச் செல்வது உண்டு.''

''சுமார் ஆறு வருடத்திற்கு முன்பு, இந்தப் பெண்ணைச் சந்தித்தேன்.''

''உங்களுக்குள் நல்ல பரிச்சயமோ?''

''இல்லை, எனக்கு எப்பவுமே அதிகாலை வேளையில் கடற்கரையில் ஈரக்காற்று உரச நடப்பது பிடிக்கும். அதே



போல் அன்றைய தினம் நடந்தபோது ஒரு பாறையின் மேல் துப்பட்டாவை குடையாக்கியபடி கூந்தல் இழை யோட அவளை முதன்முதலில் கண்டேன்.

''ஒரே ஒரு நிமிடம்தான் அவள் என்னுள் ஆழமாய் இறங்கி விட்டாள்.

''இன்று வரை அவள் யாரென்று தெரியாது நானும் தேடாத இடம் இல்லை.''

''அப்படியானால் இந்த ஓவியம்...''

''என் மனதில் சில விநாடிகளில் ஆழப் பதிந்துவிட்ட அவளை மனக்கண் முன் நிறுத்தி வரைந்தது.''

''இது சாத்தியமா'' என்றாள் விழிகள் விரிய நம்பிக்கை யில்லாமல்!

''எனக்கே வியப்புதான்!'' அத்தனை ஆழமாய் என் மனதில் இந்தப் பெண் பதிந்த பிறகுதான் நான் அவளை நேசிக்கிறேன் என்று தெரிந்தது. இந்த ஆறு வருடங் களில் கன்னியாகுமரி மட்டுமல்ல, நான் கண்காட்சிக்கு செல்லும் எல்லா ஊர்களிலும் அலசிவிட்டேன். ப்ர யோஜனமில்லை, ஆனால், அவள் நினைவுகளில் இருந்து விலக முடியமால் தவிக்கிறேன்.''

கீதா பிரமிப்பு அகலாமல் பார்த்தாள்.

''இன்னொன்று சொன்னால் என்னை பைத்தியம் என்று நினைப்பீர்கள் மிஸ்.கீதா. என் காதலிக்கு நானே தேவி என்று பெயரிட்டு இன்றுவரை அவளோடு வாழ்ந்து கொண்டு இருக்கிறேன் மனதளவில்!''

''ஐ'ம் ஸாரி மிஸ்டர். சிவமணி.''

"ஏன்?"

"உங்க காயங்களை கீறிவிட்டேன்."

"மேடம் இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?" தவிப்போடு கேட்ட அவனிடம் ஒரே வார்த்தையில் கூறினாள் கீதா.

"தெரியும்" - என்று!

அவளின் அந்த பதிலில் கிட்டதட்ட அலறி எழுந்து விட்டான் "மிஸ்.. மிஸ்..."

"வெறும் கீதா போதும்."

"அவள்.. அவள் எங்கேயிருக்கிறாள்? ப்ளீஸ் தயவு செய்து சொல்லுங்களேன்!"

"மிஸ்டர் சிவமணி! என்னதான் சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் இருந்தாலும் நீங்கள் முன்பின் தெரியாத ஒரு ஆண்மகன். இதனால் அந்தப் பெண்ணிற்கு ஏதும் அசம்பாவிதம் நேர்ந்துவிடக் கூடாது அல்லவா?"

"உங்களுடைய முன்னெச்சரிக்கை சரிதான்,ஒரு பெண்ணாய் இருந்து கொண்டு என் மனவேதனை உங்களுக்குப் புரியாமல் இருக்கலாம். ஆனால் என்னால் எப்போதும் அந்தப் பெண்ணிற்கு எந்தத் தொல்லையும் வராது. என்னை நம்புங்க ப்ளீஸ்!"

"சிவமணி நீங்க சொல்றதை என்னால் நம்பவும் முடியலை, நம்பாமல் இருக்கவும் முடியலை, முன்பின் அறிமுகமில்லாத ஒரு பெண்ணை நிழல் போல் தெளிவில்லாமல் கண்டு அவளையெண்ணி ஆறு வருடங்களாக உருகிக் கொண்டு, நினைக்கவே பிரமிப்பு அகலாத



நிலையெனக்கு. பல வருடங்களாகப் பழகி காதலித்து இருந்தவர்களே ஒரே விநாடியில் தன் அன்பினை மறப்பது உலக நடப்பு. இத்தனை சுயவர்களுக்கு மத்தியில் என்றோ ஒரு முறை சந்தித்தவளை உயிராய் மதித்து, உண்மையாகவே உங்கள் மேல் தனிமதிப்பு உருவாகிறது மிஸ்டர். சிவமணி.

"ஆனாலும், இந்த விஷயத்தில் சம்பந்தபட்ட என் தோழியின் முடிவுதனை அறியாமல் நானெதுவும் சொல்ல முடியாது. நான் அவளிடம் பேசிவிட்டு உங்களிடம் சொல்கிறேன். அதுவரையில் நீங்கள் பொறுமையாய் இருக்க வேண்டும்."


"என் பொறுமைக்கு நான் கடந்து வந்த வருடங்களே உதாரணம்."

"நன்றி.." கீதா புறப்படத் தயாராகவும், வெகு தயக்கமாய் கேட்டான் அந்த பெண்ணின் உண்மையான பெயரை யாவது நான் தெரிந்து கொள்ளலாமா?"


சிவமணியின் ஏக்கமான குரலில், தன்னையும் அறியாமல், அடக்க மனமின்றி "நளினா" என்று பெயரைக் கூறிவிட்டாள் கீதா!

அவள் சென்றதும் வானமே தன் வசப்பட்டது போன்ற எண்ணம் தோன்றியது சிவமணிக்கு. அதே நினைப்பில் அறைக்குள் வந்து தேவியின் புகைப்படத்தின் முன்பு பேசிக் கொண்டு இருக்கிறான்.

'தேவி உன்னைச் சந்திக்கப் போகும் அந்நாளை நான் வெகு ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருக்கிறேன்.'



# 6



ஆசையே துன்பத்திற்கு அறிகுறி என்பது எத்தனை சத்தியமான வார்த்தைகள், சில சமயம் நியாயமான ஆசைகள் கூடத் தோற்கின்ற போது மனம் இறந்துதான் போகிறது. மனிதன் எத்தனையோ ஆசைகளுக்கு அஸ்தி வாரம் இடுகிறான். ஆனால் அதன் மூலம் கட்டிடம் எழுப்ப கடவுளின் அனுக்கிரகம் எப்போதும் தேவை.

அப்படித்தான் நிறைவேறாத ஆசை ஒன்றை மனதில் வைத்திருக்கும் சிவமணி அது உடையும் போது என்னா வானோ...

எந்த நிகழ்வும் தானாக நடப்பதில்லை, வாழ்க்கைப் பூந்தோட்டத்தில் உள்ள ஒவ்வொரு பூக்களுக்கும் ஒரு முக்கியத்துவம் உண்டு. இவ்வுலகில் நேற்றைய இன்ப மும், நாளைய எதிர்பார்ப்பும் ஒரு சிலருக்குத்தான் இனிக் கிறது.

நாளைய தினம் தனக்கு ஏற்படப் போகும் இனிய அனுபவம் பற்றிய எண்ணத்தில் திளைத்திருந்தான் சிவமணி.

கணவனை ஊருக்கு அனுப்பிய கையோடு கீதாவின் வருகைக்காய் காத்திருந்து அலுத்துப் போனாள் நளினா, மனம் ஒரு நிலையில் இல்லை, அந்த கேலரியில் தன் புகைப்படத்தைப் பார்த்ததும், அவளுக்கு ஒன்றுமே



புரியவில்லை. தான் யாருக்கும் தன் புகைப்படத்தைக் கூடத் தந்ததில்லையே என்று மனம் சாட்சி கூறியது.

சீ! இந்த கீதாவிற்கு விவஸ்தையே இல்லை, நான் எத்தனை கவலையோடு காத்து இருப்பேன் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? மூன்றாவது முறையாக கீதாவிற்கு தொடர்பு கொள்ள, 'வாடிக்கையாளர் தொடர்பு கொள்ளும் நிலையில் இல்லை' என்றுரைத்தது.

வெறுப்போடு போனை கீழே வைக்கவும் மறுபடியும் அழைப்பு வந்தது.

"ஹலோ கீதாவா?"

"நான் அத்தை பேசுறேன் நளினா... நீயும் மிதுனும் நல்லாயிருக்கீங்களாம்மா?"

"நல்லாயிருக்கேன் அத்தை அங்கே மாமா, நிதிலா எல்லாம் நலமா?"

"நலம்தான் நம்ம நிதிலாவுக்கு ஒரு நல்ல வரன் வந்திருக்கும்மா?"

"அப்படியா.. ரொம்ப சந்தோஷமா இருக்கு அத்தை, மாப்பிள்ளை எப்படி? இதே ஊர்தானா?"

"செங்கல்பட்டுதான். மாப்பிள்ளை நம்ம நிதிலாகூட படிச்சவர். நல்ல பிள்ளை, இரண்டு பேருக்கும் மனசு பொருந்திடுச்சு. அதனால சீக்கிரமே கல்யாணத்தை நடத்திடலாமின்னு இருக்கோம்."

"சந்தோஷம் அத்தே..."

"இரண்டு பேருக்கும் பேர் ராசி பார்த்தேன் நளினா இன்னும் இரண்டு மாதத்திற்கு நல்ல முகூர்த்தம் இல்லை யாம் அதனால முதல்ல நிச்சயம் பண்ணிடலாமின்னு

இருக்கோம் தம்பிகிட்டே சொல்லிட்டு புறப்பட்டு வந்திடும்மா.''

''நான் அவர்கிட்டே சொல்றேன் அத்தை எனக்கு ரொம்பவும் சந்தோஷம் பக்கத்திலே நிதிலா இருக்காளா?''

''ஆ.. இந்தாம்மா....''

''ஹலோ அண்ணி?''

''என்னம்மா கல்யாணப் பொண்ணு சௌக்கியமா?''

''போங்க அண்ணி...''

''வெட்கப்பட்டது போதும் மாப்பிள்ளை பேரு என்ன? ஒரு போட்டோ அனுப்பினா நானும் பார்ப்பேன் இல்லை உன்னோட செலக்ஷன் எப்படினின்னு?''

''போட்டோவெல்லாம் கிடையாது, நேர்ல வந்தாதான் காட்டுவேன் இருங்க அம்மா ஏதோ பேசணுமாம்...!''

''நளினா! எதுவும் விசேஷம் உண்டாம்மா?''

''இல்லைத்தே!'' அந்த வார்த்தையைச் சொல்லி முடிக்கும் முன்பே நளினாவின் நாக்கு உலர்ந்து போனது குழந்தை எத்தனை இனிமையான விஷயம். பரஸ்பர உறவுகள் இருந்தால்தானே குழந்தைப் பேறு பற்றி அறிய முடியும். மிதுனின் மனக் கதவுகளைப் போலவே என் கர்ப்ப வாசலும் மூடிக் கிடக்கிறதோ என்னவோ?

அவள் இதயத்தில் வேதனை சாறு படிந்து இருந்தது. அதைக் கண்ணீரால் கழுவினாள். தன்னைக் கண்டு வெகுதூரம் போய்விட்ட மகிழ்ச்சியைத் தேடினாள். மறுபடியும் அதே இரக்கமில்லா இரவு மறக்க முடியாத தனிமை. குழந்தையென்று ஒன்றிருந்தால் இத்தனை



வெறுமை படராமல் இருந்திருக்கும். அவள் எத்தனை கனவுகள் கண்டிருந்தாள்.

அவள் எப்போதும் அவனருகில் இருக்க வேண்டும். மடிமீது தலைசாய்த்து கொள்ள வேண்டுமென்று, ஊடலும் கூடலும் இனிமை. ஆனால் உடல் உடல் சேர்க்கையை கூட ஒரு கடமையென கருதும் மிதுனுக்கு எங்கே புரியப்போகிறது. நிமிடங்களையே கணக்கிட்டு செலவிடும் அவன் எப்படி ஊடலையும், கூடலையும் எண்ணுவான்.

குறைந்தபட்சம் ஒரு முத்தம், அதைத் தரக்கூட அவனிற்கு எண்ணம் இல்லையே எனும்போது அவளுள் வலித்தது. இதழோடு இதழ் நடத்தும் அன்பின் பரிமாணம் அது உலகமகா இன்பமல்லவா.

கண்கள் சொருகிய நிலையில் தரும் அந்த முத்தம் கூட இப்போதைய உறவில் இல்லாமல் போனது. அவளைப் பெரிதும் அலைக்கழிக்கத்தான் செய்தது. இதயத்தின் ஓசை அரங்கேறும் தாம்பத்தியத்தில் இரு உடல்களின் ஓசைதானே கேட்கிறது.

ஒவ்வொருவரும் தூக்கம் தொலைந்த விழிகளோடு இருக்கும்போது கீதா மட்டும் அதற்கு விதிவிலக்கா யென்ன?


தன் தோழியின் வாழ்வில் ஏற்பட்டு இருக்கும் புகை மூட்டம் மழைக்காகவா அல்லது பெரும் புயலுக்கா என்று தெரியாமல் குழம்பிய வண்ணம் இருந்தாள். சிவமணியைப் பார்த்தால் பொய் சொல்பவனாய்த் தெரியவில்லை, உண்மையிலேயே அவன் சொல்லிலும், செயலிலும் நிஜம் உரைத்தது.

மணமானவள் என்று அறிந்து கொள்ளாமல் வெறித்தனமாய் சிவமணி நளினாவின் மேல் வளர்த்துக் கொண்டுள்ள காதலால், அது நிறைவேறாது என்று தெரிந்தால் அந்த நல்ல உள்ளம் வேதனைப்படுமே, அதனால் அவன் எதுவும் விபரீதமான முடிவுகளை எடுத்து விட்டால் என்னாவது, அதனால்தான் அவள் நளினாவைப் பற்றி எதுவும் கூறவில்லை.


இருவரையும் ஒருமுறை நேரில் சந்திக்கச் செய்தால், நளினாவே தன் நிலையை அவனுக்கு எடுத்துரைத்தால் அந்த நல்ல உள்ளத்தை ஆபத்திலிருந்து காப்பாற்ற இயலும். ஆனால் இதற்கு நளினா சம்மதிப்பாளா.

நளினாவின் பெயரை சிவமணியிடம் கூறியது தவறோ? இப்படி பல்வேறு கேள்விகள் தலையைக் குடைய உறக்கம் வராமல் படுக்கையில் புரண்டார்கள் அனைவருமே!

எல்லோரையும் உறங்க விடாமல் செய்த அந்த இரவு வழக்கம் போல் நான் வந்துவிட்டேன் என்று விடிந்து விட்டது.



## 7



கீதா அந்தக் காலையில் வருவாள் என்று நளினா சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவள் கண்களும் கோவைப் பழமாய் சிவந்து இருந்தது.



"என்ன கீதா இது நைட்டே வருவேன்னு சொன்னே, எந்த விஷயமும் தெரியாம நான் எப்படி தவிச்சுப் போயிட்டேன் தெரியுமா? ஏன் செல்லைக் கூட ஆப் பண்ணிட்டே?"

"ஜார்ஜ் இல்லை நளினி எல்லாமே வாசல்ல வைச்சே கேட்கணுமா?"

"ஸாரிடீ உள்ளே வா டீ வேணுமா...!"

"வேண்டாம்..."

"ஏன்டி ஒரு மாதிரியா இருக்கே?"

"அதை எப்படி உன்கிட்டே சொல்றதுன்னு தெரியலை? நளினா!"

"தினம் தினம் வாழ்க்கையோட போராடிகிட்டு இருக்கேன் நீ மறைப்பதுதான் என்னை பயங் கொள்ள வைக்கிறது. எதுவானாலும் நேரடியாய் சொல்லிடு."

கீதா சுவற்றையே வெறித்தாள், பின் மெதுவாக "நீ கன்னியாகுமரி போய் இருக்கியா நளினா?" என்றாள்.

"இப்போ சம்பந்தமில்லாம அதையேன் கேட்குறே?"

"நான் கேட்ட கேள்விக்கு முதலில் பதில் சொல்லு."

"ம்.. ஆறு வருடத்திற்கு முன்பு சித்தியோட கல்யாணத்திற்குப் போனேன்." அப்போது நளினா கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவி, அம்மாவின் பெரியம்மா மகளின் திருமணத்திற்கு சென்றவள் அப்படியே கன்னியாகுமரியில் உள்ள முக்கிய இடங்களை எல்லாம் சுத்திப் பார்த்து விட்டு ஒரு வாரம் கழித்து திரும்பியது இன்னும் பசுமையாய் நெஞ்சில் நினைவிருக்கிறது.

அப்போதெல்லாம் எத்தனை சந்தோஷமாய் இருந்தாள், படிப்பு, தோழிகள் என்று அவள் வட்டம் சிறியதுதான் என்றாலும் நிமிடங்களைக் கூட தேனாய் கழித்த நாட்கள் எத்தனை.

அர்த்தமில்லாத சிரிப்புகள், அந்த வயதிற்கே ஏற்ற குறும்புகள் என புன்னகை மாறாமல் இருந்த நாட்களல்லவா அவை பெண்களுக்குக் கல்யாணம் ஒரு சிறையாகத்தான் அமைந்து விடுகிறது.

"நளினா...." கீதாவின் குரலுக்கு அசைந்தாள்.

கீதா சிவமணியுடன் தான் பேசிய அத்தனையும் கூற நளினா வாய்மூடாமல் சிலையென அமர்ந்திருந்தாள். மயக்கம் வருவது போல் கண்கள் சுழன்றது.

"என்ன கீதா இது? எனக்கு இருக்கிற பிரச்சனை போதாதுன்னு இப்போ புதுசா இது வேறயா? எனக்கு ரொம்ப பயமா இருக்கு கீதா."

"கவலைப்படாதே நளினா சிவமணியிடம் நான் உன்னைப் பற்றி எந்த விவரமும் தரலை, உன் பெயரைத் தவிர."

"பேசாம இதை இப்படியே விட்டுடலாம் கீதா."

"தப்பு நளினா தெரிஞ்சோ, தெரியாமையோ, அவன் மனசிலே கற்பனை வளர நீ காரணமாயிட்டே ஆறு வருடமா முன்பின் அறியா, உனக்கு தேவின்னு பெயரிட்டு, வெறும் நம்பிக்கையை மட்டும் ஆதாரமா வைச்சிகிட்டு வாழ்ந்திட்டு வர்றது சாதாரண விஷயம் இல்லை. அந்த அசுர நம்பிக்கையைத் தயவு செய்து சிதைக்காதே. உனக்குத் திருமணமான விஷயத்தை நீயே நேரடியா சொல்லிடு அதுதான் நல்லது."



"இதனால வேறு ஏதும் புதுப் பிரச்சனை வந்திட்டா?"

"நளினா இதுல உன் தவறு எதுவுமே இல்லை, சிவமணி ரொம்பவும் நல்ல மனிதராத் தெரியறார். கலைஞர்களின் மனது கற்பனையில் சுழலுமே தவிர கபடம் சூதும் இருக்காது. உன் சூழ்நிலையைச் சொன்னா அவர் தன்மனதை மாற்றிக் கொள்ள வாய்ப்பிருக்கு. நீங்க இரண்டு பேரும் ஒரு பொது இடத்தில் சந்திக்க நான் ஏற்பாடு பண்றேன்."

நளினா ஏதும் பேசாமல் அமைதியாக இருந்தாள். கீதா மெல்ல எழுந்து தோழியின் தோளில் கையை வைத்தாள். "நளினா நீ கவலைப்படாதே உன் நல்ல மனசுக்கு எந்தக் குறையும் வராது. என்னை மீறி எந்தப் பிரச்சனையும் உனக்கு வராது!"

"சரி எனக்கு ஒரே தலைவலியா இருக்கு. கொஞ்சம் சூடா காபி தர்றீயா?" மனசே இல்லாமல் எழுந்து சமையலறைப் பக்கம் நடந்தாள் நளினா. தன் வாழ்வு திசை மாறிப் போவதை அறியாமல் காபி கலக்கச் சென்றாள்.

நிதிலா முகூர்த்தப் புடவையை எடுத்து தோள் மேல் போட்டபடி அழகு பார்த்துக் கொண்டிருந்தாள். அடர் நீல நிறத்தில் உடல் முழுவதும் சரிகை வேலைப்பாடு கொண்ட அந்த புடவை நன்றாய் பொருந்தி இருந்தது அவளுக்கு. கண் முன் வசந்தன் வந்து போனான்.

முகம் குங்குமமாய் சிவக்க மனம் பழைய நினைவில் அசை போட்டது. நெடு நெடுவென்ற உயரமும், அசாத்திய நடையும் அவன் அழகை வெகுவாய் பறைசாற்றும் ஆண் பெண் இருபாலர் படிக்கும் கல்லூரியில் இருவரும் கணக்கியல் பிரிவு மாணவர்கள்.

மனம் ஒன்றிப்போன போதும், வாய் விட்டுச் சொல்லாமல், வெறும் பார்வைப் பரிமாற்றங்கள் மட்டுமே நடக்கும். விழிகள் காதலின் இதயத்துடிப்பு, நிதிலாவின் விழிகள் வசந்தனின் மேல் ஒவ்வொரு முறை பதிந்த போதும் அவள் தன்னுடையவள் என்பதை உணர்ந்தான்.

அவர்கள் கல்லூரியில் வருடம் தவறாமல் சுற்றுலா செல்வது வழக்கம் இந்தத் தடவை நிச்சயம் நிதிலாவிடம் தன் காதலைச் சொல்லிட வேண்டும் என்று எண்ணினான்.

பல்லவர்களின் சிறப்பை, கலைத் திறனை தெரிவிக்கும் இடமான மகாபலிபுரத்தில் கூட்டம் கூட்டமாய் வந்திறங்கினார்கள் அவர்கள்.

எழில் கொஞ்சும் அச்சிலைகளையும், ஒரே கல்லில் செதுக்கிய அர்ஜுன ரதமும், மணல் மணலாய் கால் புதையப் புதைய நடக்கும் சுகமும், துள்ளி வரும் வெள்ளி மணி அலைகளையும் ரசித்தபடி தோழிகள் புடைசூழ நடந்த நிதிலாவிடம் வந்தான் வசந்தன்.

''நிதிலா நான் உங்ககிட்டே கொஞ்சம் தனியாப் பேசணும்.''

''என்ன விஷயம்?''

''போயண்டீ! அவர்தான் கூப்பிடறார் இல்லை, போ ஒண்ணும் உன்னைக் கடிச்சுத் தின்னுட மாட்டார்.''

மேற்கொண்டு இருந்தால் வேறு ஏதாவது கிண்டல் செய்வார்கள் என்று அவன் பின்னாலேயே நடந்தாள். ஆள் அரவமற்ற கடற்கரையில் நின்றார்கள்.

''சொல்லுங்க ஏதோ பேசணுமின்னு...'' அவன் நிமிரவும் வார்த்தைகளை விழுங்கினாள்.



''நிதிலா நான் என்ன சொல்ல வர்றேங்கிறது உங்களுக்குப் புரியுதா...!''

''சொன்னால் தானே தெரியும்'' அவன் முகம் பாராமல் திரும்பி நின்று கொண்டாள்.

''ஏற்கனவே நான் நாட்களைக் கடத்தி விட்டேன். நிதிலா 'I love you'.....''

சில விநாடி நேர தயக்கத்திற்குப் பின் ''நானும் தான்'' அதை சொல்லி முடித்த அடுத்த விநாடி வசந்தனின் அணைப்பில் இருந்தாள் நிதிலா.

''விடுங்க வசந்த், இதென்ன அனுமதி தந்ததும் உடனே கட்டிப் பிடிச்சிடறதா?''

''பின்னே ஏற்கனவே நான் ரொம்ப லேட்டுன்னு ஃபீல் பண்றேன். இனிமேயெல்லாமே வேகம்தான்.''

''விடுங்க கூட நம்ம ப்ரெண்ட்ஸ் எல்லாம் வந்துயிருக்காங்க, பார்த்தா கிண்டல் பண்ணியே சாகடிச்சிடுவாங்க.''

''சரி அப்போ எப்போ சந்திக்கிறது?''

''தினமும்.. வரேன்.''

''இரு. நித்தி உனக்குன்னு ஒரு பரிசு வாங்கி வைச்சிருக்கேன்'' டாலர் பதித்த சிப்பி கோர்த்த மணி ஒன்றைப் பரிசளித்தான் அதை ஆசையோடு வாங்கிக் கழுத்தில் அணிந்தவள், ஒரு வெட்கப் புன்னகையை வீசி விட்டு மறைந்தாள்.

அடுத்தடுத்து அவர்களின் சந்திப்பு கல்லூரி, லைப்ரரி, பார்க், சினிமா என அவர்களின் காதலும் வளர்ந்தது.

போனவாரம் வசந்தனின் குடும்பம் வந்து பெண் பார்த்துப் போனதில் இரு குடும்பத்தினரும் பரஸ்பர

சம்மதத்திற்குப் பின் திருமண நாளும் குறித்தாகி விட்டது. ''ஏய் நிதிலா! கல்யாணப் பத்திரிகை அச்சடித்து வந்திருக்கு வாயேன்.''

தாயின் குரலிலும், அது கூறிய விஷயத்திலும் ஈர்த்து ஓடிவந்தாள் பத்திரிகைகள் அவளின் பார்வைக்காக காத்திருந்தன. முகப்பில் விநாயகர் படமும், விளக்குகளும், வசந்தனின் நிதிலாவின் புகைப்படமும் அமைந்திருந்தன.

''ரொம்ப நல்லா வந்திருக்கும்மா அப்பா எங்கே?''

''பத்திரிகைகளை மாப்பிள்ளை வீட்டுக்குத் தர போயிருக்கார். அண்ணிக்கும், அண்ணனுக்கும் ஒரு போன் பண்ணிச் சொல்லுடி.''

''நேத்தே ட்ரை பண்ணினேன். லைன் கிடைக்கலை,'' இரும்மா! அருகிலிருந்த போனின் எண்களை ஒத்தி எடுத்தாள்.''

எதிர்முனை ரிங் போய் எடுக்கப்பட்டது.

''ஹலோ...''

''அண்ணா நான் நிதிலா பேசறேன்.''

''சொல்லுடா எப்படியிருக்கே?''

''நான் நல்லாத்தான் இருக்கேன் என்னண்ணா நீ நிச்சயத்திற்கும் வரலை. கல்யாணத்திற்காவது வருவியா?''

''ஏய் என்ன இப்படிக் கேக்குறே?''

''பின்னேயென்னவாம்? உனக்கு என் மேலே கொஞ்சம் கூட அக்கறையே இல்லை.''

''ஸாரிம்மா கொஞ்சம் வேலையதிகம்.''



''சரி! பத்திரிகையெல்லாம் வந்தாச்சு. கல்யாணத்திற்கு இன்னும் ஒன்றரை மாதம் இருக்குன்னு லேட்டா வராதேண்ணா சீக்கிரம் வந்திடு.''

''சரிம்மா எனக்கு நேரமாகுது நான் அப்புறம் பேசட்டுமா?''

''இருண்ணா அம்மா பக்கத்திலே இருக்காங்க. ஒரு வார்த்தை பேசேன்.''

''அர்ஜெண்ட்டா மீட்டிங்குக்குக் கிளம்பறேன் நித்திம்மா ப்ளீஸ்'' அவன் லைனை கட் பண்ணிடவும், ஆவலாய் எதிர்பார்த்த அம்மாவின் முகம் சுருங்குவதை கவலையாய் பார்த்தாள் நிதிலா,

''என்ன நித்தி! இது உங்கண்ணன் இன்னமும் வேலை வேலைன்னுதான் ஓடிகிட்டு இருக்கிறானே? பாவம் நளினா தனியா இருந்து என்ன கஷ்டப்படறாளோ.''

''அம்மா என்னோட கல்யாணத்திற்கு அவசியமா உங்கண்ணனையும் கூப்பிடும்மா?''

''அவர் எதுக்குடி இப்போ?!''


''பணம் காசு இல்லேன்னு எத்தனை ஏளனமா பேசி அவர் பொண்ணை நம்ம அண்ணனுக்கு தர மறுத்தார். இப்போ என் அண்ணன் தன் உடலை வறுத்தி நேர்மையா எத்தனை சம்பாதிக்கிறான். அதையெல்லாம் உன் அண்ணன் பார்க்க வேண்டாமா?''

''நிதிலா எந்தவொரு செயலுக்கும் ஒரு எதிர்விளைவு இருக்கணுமின்னு அவசியமில்லை, அவருடைய குணம் அது விடுடி.''


''இல்லேம்மா உனக்குத் தெரியாது. அண்ணனோட வைராக்கியத்தை, மனவலியை கூடவே இருந்து பார்த்தவ நான். இத்தனை குறைந்த நாளில் அவன் அடைந்திருக்கும் உயரம் அசுர வளர்ச்சின்னு தான் சொல்லணும் தன்னை, தன் உழைப்பை நிரூபிச்சே தீரணுங்கிற வெறியை இந்த வாய்ப்பில் செய்யலாமே!

அண்ணன் வயசுப் பிள்ளைங்க எல்லாம் எப்படி எப்படியோ வாழ்க்கையை அனுபவிக்கும் போது அவன் மனசில் இந்த வெறி வரக் காரணமே முன்பு உன் அண்ணன் செய்த செயல்.

அதனால முதல் பத்திரிகையை அவருக்கே கொடு!'' தீர்மானமாய் சொல்லிய அவளைப் பார்த்த ரத்தினம் மாளின் கண்முன் அந்த கசப்பான நினைவுகள் விரிந்தன.



# 8



ரங்கசாமி ரத்தினம்மாளின் சகோதரர் கொஞ்சம் பசையுள்ள மனிதர். பணம் சேர்ந்தாலே பகட்டும், திமிரும் உடன் பிறந்ததென சேர்ந்து விடுகிறதே, ரங்க சாமிக்கு லலிதா என்ற மகளுண்டு தங்கசிலை மாதிரி. உறவை மறக்காமல் தன் மகன் மிதுனுக்கு லலிதாவைப் பெண் கேட்டாள். அதுவும் லலிதாவின் பிறந்த நாள் விழாவிற்குப் போனபோது.



அதற்கு மிகவும் சுருக்கமாக அதுவும் ஊசி குத்துவதைப் போல் பேசினார். ரங்கசாமி மிதுன் அப்போதுதான் 'பிசிஏ' முடித்துவிட்டு, வேலைக்கு முயற்சி செய்து கொண்டு இருந்த நேரம்.

''என்ன ரத்தினா இது? பேச்சிலே கூட ஒருமுறை வேணாம். உனக்கும், எனக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம். இதோ பாரு என் பொண்ணு பிறந்த நாளுக்கு எத்தனை ஆளுங்க அதுவும் பெரிய மனுஷங்க வந்திருக்காங்க.''

''நாளைக்கு உங்க சம்பந்தியாரு, உங்க மாப்பிள்ளை என்ன வேலை? பாக்குறாருன்னு என்னைக் கேட்டா ஒண்ணுத்துக்கும் வழியில்லாதவ என் சம்பந்தி வேலைக்குப் போகாம தண்டச்சோறு சாப்பிடறவன் என் மருமகப் பிள்ளைன்னு மார்தட்டிக்கச் சொல்றியா? ஏதோ கூடப் பிறந்தவளாச்சே ஒரு வாய் சோறு வாய்க்கு ருசியா சாப்பிட்டு போகட்டுன்னு வரச்சொன்னா, நினைப்பு போகுது போ போ உன்னை யாரும் இங்கே சீர் கொண்டு அழைக் கலை.''

அன்றைய சம்பவத்திற்குப் பிறகு ஒரு வார காய்ச்சலில் படுத்து விட்டாள் ரத்தினம்மாள் தன் மனதில் இது நாள் வரை வைத்திருந்த நம்பிக்கை சிதைந்து போனதை அவளால் தாங்க முடியவில்லை.

தாயின் இந்நிலை கண்டு தவித்த மிதுனிடம் மாமா வீட்டில் நடந்த அனைத்தையும் கூறிவிட்டாள் நிதிலா. இயல்பிலேயே தன்மான உணர்வு அதிகம் கொண்ட மிதுன் தானே அவமானப்பட்டது போல் உணர்ந்தான்.

தங்களை இத்தனை கேவலமாய் நினைத்து விட்ட மாமாவின் முன் நல்ல நிலைமைக்கு வர வேண்டும் என்ற

ஊந்துதலே அவனை வெறித்தனமாய் உழைக்கச் செய்தது. கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் படித்தான் பார்ட் டைமில் வேலை பார்த்துக் கொண்டே, அவன் வயது பிள்ளைகள் பல கேளிக்கைகளில் ஈடுபாடு இருக்க அவனுடைய கவனமோ பணம் சம்பாதிப்பதிலேயே இருந்தன.

அவனின் திறமையும் யூனிவர்சிட்டியிலே முதல் வகுப்பில் வெற்றி பெற்றதும் அவனை க்ளோபல் கம்ப்யூட்டரில் ப்ரோகிராமராய் மாற்றியது மாதம் 18,000 ரூபாய் சம்பளத்தில், வெளியூர் செலவுகள் இதரப்படிகளும் 3000யிரத்தை தொட்டது.

செங்கல்பட்டிலேயே சொந்தமாய் வீடு வாங்கினான். ஏளனமாய் பேசியவர்கள் ஏறிட்டுப் பார்த்தனர். திரும்பிப் பார்ப்பதற்குள் ஏழெட்டு வருடங்கள் ஓடிவிட்டது.

''நிதிலா இப்பத்தான் பர்ஸ்ட் ஹியர் பண்ணிகிட்டு இருக்கா, அவளுக்குன்னு ஒரு அங்கீகாரம் வேண்டாமா? மேற்கொண்டு படிக்கட்டும்!'' என்றுதான் பேசினான் மிதுன். தங்கையின் திருமணம் பற்றிப் பேசியபோது!

''அப்போ பேசாம நீ கல்யாணம் பண்ணிக்கோ மிதுன்.''

''இல்லேம்மா! எனக்கு அதிலெல்லாம் விருப்பமேயில்லை, என் முழுக்கவனமும் தொழிலில் மட்டும்தான்.''

''ஏண்டா இப்பவே உனக்கு 28 வயதாகுது. இன்னமும் நாளைத் தள்ளிட்டே போனா என்னப்பா அர்த்தம்.'' அருகே வந்து மகனின் மோவாயைத் தடவி விட்டபடியே, தயக்கத்துடன் ''நேத்து கோவில்ல லலிதாவைப் பார்த்தேன், முன்னைமாதிரி அத்தான் என்கூட ஏன் பேசறது இல்லைன்னு கேட்குறா?'' என்றவாறே மகனின் முகத்தில் ஓடிய உணர்வுகளைப் படிக்க முயன்றார் அத்தாய்.



அவனோ வெகுசாதாரணமாய் சாப்பிட்ட படியே, ''எல்லாம் உங்கப்பாவால்தான்னு சொல்ல வேண்டியது தானே'' என்றான்.

''மிதுன் நான் உன்கிட்டே ஒண்ணு கோபப்படாம மறைக்காம உண்மையை கேட்கட்டுமா?''

''கேளுங்கம்மா?''

''சின்ன வயசிலேயிருந்து லலிதாவைத் தான் கட்டப் போறாம்மின்னு உன் மனசிலே ஆசையை வளர்த்திட்டேன். இப்பத்தான் நாம நல்ல நிலைக்கு வந்திட்டோமே,. நா வேணுன்னா அண்ணங்கிட்டே போய்...!''

அவர் முடிக்குமுன்னரே, ''ஏம்மா நம்மை அத்தனை மட்டமா பேசின அந்தாளோட பொண்ணைப் போய் நினைப்பேனா?''

''இல்லைப்பா? லலிதா ரொம்பவும் நல்ல பொண்ணு அவளுக்கும் உன்மேல இஷ்டம் இருக்கு அதனால தான்.''

''வேண்டாம்மா, ஏற்கனவே உங்க அண்ணன் உன்னைப் பேசின பேச்சை மறக்கவும் முடியாம நான் தவிக்கிறேன். அப்படியே உனக்கு உன் பிள்ளையை எவ தலையிலோவது கட்டணுமின்னு தோணினா அது உன் அண்ணன் மகளைத் தவிர வேறு யாரா இருந்தாலும் சம்மதம்தான்!'' மகனின் வாயிலிருந்து இப்படியொரு வார்த்தையைக் கேட்ட பின்னர்தான், வெகு முனைப்பாக பையனுக்குப் பெண் பார்த்தாள் ரத்தினம்மாள்.


செங்கல்பட்டைச் சேர்ந்த ஸ்கூல் வாத்தியார் சுந்தர்ராஜ் - கஸ்தூரி தம்பதியின் மகளான நளினாவைப் பெண் பார்த்து மணம் முடித்தார்கள். அப்பவும், ஒரு முறை வந்து

நளினாவைப் பார்த்ததோடு சரி அதன் பிறகு நடந்த எந்நிகழ்விலும், மிதுன் அத்தனை ஆர்வம் காட்ட வில்லை.


திருமணத்தன்று தாலி கட்டியதோடு சரி அவன் கடமை முடிந்து விட்டது என்று இருந்தான். மறுவீடு, விருந்து என எதிலும் தனித்து இருந்தான். கஸ்தூரி யம்மாள் தன் மகளை மிகவும் செல்லமாய் வளர்த்துவிட் டேன் நீங்கதான் பத்திரமா பார்த்துக்கனும் என்று மிது னிடம் கூறும்போது மட்டும் சரி என்று ஒற்றைச் சொல் லில் பதிலளித்தான்.

திருமணம் ஆன மறுநாளே வேலை வேலையென்று ஓட, ரத்தினம்மாள் தான் சப்தம் போட்டு மருமகளை எங் கேனும் அழைத்துச் செல்லச் சொல்லுவார். பெரும்பாலும் அவன் கழுவுற மீனில் நழுவுற மீனாகவே இருப்பான்.

சரி! சின்ன வயசுதானே வெட்கப்படறான்ம்மா எல்லாம் போகப் போகச் சரியாயிடும் என்று நளினாவிற்கு ஆறுதல் கூறினார், தனிக்குடித்தனம் போனாலாவது நல்ல முறையில் இருப்பார்கள் என்ற எண்ணமும் பொய்த்துப் போனதோ என்று பயந்தார்.



# 9



சிவமணிக்கு ஒரே தவிப்பாய் இருந்தது. எல்லாம் ஐந்து நிமிடங்களாகத்தான், கீதா போன் பண்ணி நளினா



தங்களை நேரில் சந்திக்க வருகிறாள் என்று கூறியதும் வானத்திற்கும், உயர்ந்தது போல் இன்பம் அடைந்தான்.

பாதி நேரம் இன்னும் மிச்சம் இருந்தது முதன் முதலில் தன் மனங் கவர்ந்தவளைச் சந்திக்கப் போகிற நினைப்பில், ஏதேனும் ஒரு பரிசு வாங்குவதற்காக ஹோட்டலின் அருகில் உள்ள காம்ப்ளக்ஸிற்கு வந்தான். சுற்றும் முற்றிலும் பார்த்தான் எதுவும் மனதில் பதிய மறுத்தது.

முற்போக்கு சிந்தனைகளைக் கருத்தில் கூறி முற் போக்கு திலகமென வாழ்ந்த பாரதியாரின் உருவச்சிலை அவனைக் கவர்ந்தது. அதைப் பேக் பண்ணச் சொல்லி விட்டு திரும்பவும். நளினா அந்த காரிடாரில் இருந்து இறங்கவும் சரியாய் இருந்தது.

சிவமணிக்கு உற்சாகம் கரைபுரண்டு ஓடியது எப்படி யாவது தேவியைப் பிடித்து விட வேண்டும் என்ற வேகத் தில் அவசரமாய் வெளியே ஓடி வர, அதற்குள் ஆட்டோ ஒன்றை நிறுத்தி அதிலேறிச் சென்றுவிட்டாள் அவள்.

ஏமாற்றம் மனதிற்குள் வேகமாய் படர்ந்தாலும், இன் னும் சற்று நேரம் தானே இன்று மாலையே அவளைச் சந்திக்கப் போகிறோமே என்ற நினைப்பு அவனைச் சமாதானப்படுத்தியது.

அவன் காத்திருந்த அந்த மாலை நேரமும் வந்தது. அந்த ரெஸ்டாரெண்டின் குளிர் சூழ்நிலையும் மீறி, வியர்வை வழிந்தது. படபடப்பான மனதோடு அவனும் தேவிக்காக அவன் வாங்கிய பரிசும் சேர்ந்து தேவியின் வரவை ஆவலோடு எதிர்நோக்கிக் கொண்டு இருந்தது.

கஞ்சிபோட்ட மொடமொடப்பான புடவையில் ஒரு பெண்ணும், அதற்கு பின்னால் சல்வார் அணிந்த இருவர்

வருவது தெரிந்தது. ஆம் அது என் தேவியேதான் அவன் வரைந்த ஓவியம் அப்படியே உயிர்பெற்று வருவது போல, கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருந் தான். அவர்கள் அருகில் வந்து அமரும் வரை, என்னவோ பேச வேண்டும் என்று துடித்த நாக்கு உலர்ந்து ஒட்டிக் கொண்டதைப் போல் ஒரு உணர்வு.

''மிஸ்டர். சிவமணி இதுதான் நளினா.''

''என் தேவி!'' என்றான் அவன் குரல் சற்றே நெகிழ்ந்து இருந்தது. நளினா கீதாவைச் சங்கடமாய் ஒரு பார்வைப் பார்த்தாள்.

மேற்கொண்டு பேசுவதற்குள் பேரர் வந்துவிட, ''என்ன சாப்பிடறீங்க?''

''எதுவும் வேண்டாம்?''

''நோ.. நோ.. என் உயிரையே எனக்கு மீட்டுத் தந்து இருக்கீங்க கட்டாயம் சாப்பிடணும். மூன்று பாஸந்தி கொண்டு வாங்க.''

பென்சிலின் மூலம் அந்த சின்ன நோட்டுப் புத்தகத் தில் குறித்து கொண்ட யூனிபார்ம் அணிந்த பேரர் அடுத் தவர், மேஜைக்கு சென்றான் தன் பணியைத் தொடர,

''தேவி... நான் உங்களைச் சந்திப்பேன் என்று கனவிலும் நினைக்கலை. கீதாவுக்குத் தான் நான் நன்றி சொல்லணும். முதன் முதலில் உங்களை கன்னியா குமரியில் சூரிய ஒளியில் மின்னும் தேவதையெனக் கண்டேன். ஒரே விநாடி தான் நீங்கள் என்னுள் ஆழமாகப் பதிந்து விட்டீர்கள். கீதா உங்கிட்டே எல்லா விஷயமும் சொல்லியிருப்பாங்க. நானும் எவ்வளவோ பேசணுமின்னு நினைச்சேன் தேவி ஆனா நாக்கு ஒட்டிக்கிச்சு.''



''என் பெயர் நளினா.''

''தெரியும்! பெயர் எதுவாயிருந்தால் என்ன? என் மனதின் எண்ணங்களில் நான் உங்களுக்கு இட்ட பெயர் தேவி!''

''என்னால எதையுமே நம்ப முடியவில்லை,''

''என்றாவது ஒருநாள் உங்களைச் சந்திப்பேன் என்று எண்ணிக் கொண்டேயிருந்த எனக்கே இச்சந்திப்பை நம்ப முடியவில்லை. உங்கள் மனநிலை எனக்குப் புரிகிறது. ஆனால் என் காதல் உண்மை தேவி,!'' காதலோடு குழைந்த அக்குரல், நளினாவினுள் துக்கத்தைப் பெருக் கியது. இனம் புரிந்து கொள்ள முடியாத வேதனை மனதைப் பிசைந்தது. இந்த எல்லையில்லா அன்பிற்கு அவள் தரும் பரிசு சிவமணியின் வேதனையல்லவா...?!

''தேவி இது என்னுடைய சிறிய பரிசு.'' அவன் நீட்டி யதை வாங்கிப் பிரித்தாள். முற்போக்கு சிந்தனைகளை கருத்தில் கூறி முன்னோடியாய் வாழ்ந்த பாரதியாரின் உருவச்சிலை.

நளினாவின் கண்களில் கண்ணீர் கசிந்தது. சிவமணி பதறினான்! ''என்னாச்சு தேவி?''

''அய்யா! தயவு செய்து என்னை மன்னியுங்கள். உங்கள் அன்பினை ஏற்கும் சூழ்நிலையை நான் கடந்து விட்டேன். ஆம், நான்.. மணமானவள்.'' நளினாவின் உதடுகள் அந்த வார்த்தையை உச்சரித்த அந்த கணம், மலைச் சிகரத்தின் விளிம்பில் மரணத்தின் பிடியில் நிற்பது போலதொரு உணர்வு அவன் தன்னை அடக்க மிகவும் சிரமப்படுவது புரிந்தது.

''மிஸ்டர்.. சிவமணி, இந்தத் தவறு என்னையும் அறியாமல்..!'' அவன் முகத்தில் புன்னகை தொலைந்தது. அதன் மேற்பட்டு அவன் அங்கு நிற்கவில்லை, நளினா வின் பேச்சுக் காற்றில் கரையும் வண்ணம் அவன் வெகு விரைவாய் சென்று கொண்டிருந்தான். அவள் கண்களில் நீர் வழிந்து கொண்டேயிருந்தது.

ஒரு நல்ல கலைஞனின் மனம் சஞ்சலப்பட நான் காரணமாயிட்டேனே என்ற கவலை நளினாவை புழுவாய் குடைந்தது. அடுத்து வந்த நாட்களில் சிவமணியைச் சந்தித்து மன்னிப்பு கேட்க எண்ணினாள். ஆனால் அவன் கண்ணில் படவே இல்லை கீதாவும் ஒருமுறை கண்காட் சிக்குச் சென்று பார்த்தாள் அங்கு வரவில்லை.

கடந்த நான்கு நாட்களாக நளினாவின் வழக்கம் போல் வெறுமையைப் பூசிக் கொள்ளாமல் மனம் முழுக்க சிவமணியைப் பற்றிய எண்ணங்களே நிறைந்திருந்தது. அவனைப் பற்றி எந்த விவரமும் அறியாமல் போக அவன் ஏதேனும் தவறான முடிவை எடுத்து விட்டானோ என்று மனம் அஞ்சியது.

ஐந்தாவது நாள் காலையில், ஒரு தொலைபேசி ''ஹலோ.. நான் சிவமணி பேசறேன்.''

''எங்கே சென்று விட்டீர்கள்? சிவமணி நான் ரொம்ப வும் பயந்து போய்விட்டேன்.'' நளினாவின் குரலில் தென்பட்ட உண்மையான வருத்தம் அவனை என்னவோ செய்திருக்க வேண்டும்.

''முதலில் என்னை மன்னித்து விடுங்கள் தேவி ஸாரி நளினா, ஆறு வருடங்களாக என் மனதில் தோன்றிய எண்ணங்களுக்கு உருவம் கிடைத்து விட்டதென்ற



மகிழ்வில் நான் உங்களிடம் அப்படி பேசிவிட்டேன் அது எத்தனை தவறு என்று உணர்வதற்கும், என் மனதை ஒரு நிலைப்படுத்துவதற்கும், இந்த நான்கு நாட்கள் தேவைப் பட்டன, இனிமேல் என்னால் உங்களுக்கு எந்தத் தொந்தரவும் இருக்காது!''

''அப்படியானால்.. நீங்கள் உங்கள் மனதை மாற்றிக் கொண்டு விட்டீர்களா?''

''நளினாவை நான் அடியோடு மறந்து விட்டேன். ஆனால் மணமானவளா இல்லையா என்று ஏதும் தெரி யாத நிலையில் நான் என் மனதில் தேவதையாய் வரித்த என் தேவியை என்னால் மறக்க முடியுமா என்று தெரிய வில்லை, முயற்சிக்கிறேன் தேவி ஸாரி.''

''நீங்க என்னை தேவின்னே கூப்பிடலாம் சிவமணி!'' அவள் எப்படிப்பட்ட மனநிலையில் அப்படி கூறினாளோ தெரியவில்லை, ஆனால் இருவரின் மனதிற்குமே அது பெருத்த ஆறுதலாய் இருந்தது.

அமைதியின் காந்தத்தில் அன்பு ஆத்மாக்களை இழுக்க முடியும். மௌனம் சில வேளைகளில் எத்தனை நல்ல மருந்தாய் பயன்படுகிறது.

நண்பர்கள் என்ற முறையில் என்னையும் நேசிக்கும் ஒரு உறவு எனக்குக் கிடைப்பதில் மகிழ்ச்சிதான்.

''நன்றி தேவி நன்றி!'' அவன் மறுமுனையில் வைத்து விட, எல்லையில்லா அந்த அன்பில் இருந்து விலக இயலாமல் நிலை தடுமாறி அவள் ஒப்புக் கொண்ட நட்பு வட்டத்தில் விதி விளையாட ஆரம்பித்தது.


எண்ணங்கள் விசித்திரமானவை, சில விநாடிகளில் தவறாகத் தோன்றும் அவை பல நேரங்களில் சரியென்று

ஒரு வழக்கறிஞராய் மாறி விவாதிக்க ஆரம்பிக்கிறது. எச்செயலையும், ஆரம்பிக்கும் முன் அதன் விளைவை யோசிக்க ஒரு கணம் தேவைப்படும்.


ஆனால் உணர்வுகளின் பின்னலில் சிலவற்றை விளக் காமலே அதைச் சரியென ஒப்புக் கொண்டாள் நளினா.

உள்ளத்தில் கலக்கம் இருந்தால் வெளியில் எல்லாமே குழப்பமாய்த் தோன்றும் ஒழுக்கம் என்பது கண் ணாடியைப் போலயென்று எங்கோ படித்தது நினைவுக்கு வர அவள் தனக்குத் தானே சமாதானம் கூறிக் கொண்டாள் மனதிற்குள் இப்படி.

எல்லாச் செயல்களுக்கும் எண்ணங்கள் தான் விதை யானவை ஆகவே நல்ல தூய விதைகளையே நான் விதைப்பேன் அப்போதுதான் விளையும் பழங்கள் மிகவும் சுவையாய் இருக்கும் என்று, நினைவுகள் வாழ்க்கையில் படித்து மறக்கப்பட்ட பாடங்களேதானே.



# 10



அன்றைய காலையில் விடியும் போதே நளினாவுக்கு புதியதொரு அனுபவம் காத்திருந்தது. அன்று வெள்ளிக் கிழமையாக இருந்தும் தான் பூஜைக்குத் தயாராய் இல் லாததை அவள் உணர்ந்தாள். மிதுன் தன்னுடைய வேலை விஷயமாக மறுபடியும் டூருக்குக் கிளம்புகிறான்.



காலை உணவை கொறித்து விட்டு கட்டிலில் கிடந்து அனத்திக் கொண்டிருந்த நளினாவைக் கண்டான்.

''என்னாச்சு நளினா உனக்கு?'' அந்தக் கேள்வி அன் போடு வந்ததா அல்லது எரிச்சலின் வெளிப்பாடா என்று பகுத்துணரும் மனநிலையில் அவள் அப்போது இல்லாத தால் ''வயிறு வலிக்குதுங்க?!'' என்றாள்.

''வழக்கமா...!'' அவள் இழுத்தாள். கணவனாகவே இருந்தாலும் அதற்கு மேல் விரிவாய் அவனிடம் கூற வெட்கம் தடுத்தது. ஒருவேளை வெகு அன்னியோன்ய மாய் இருந்திருந்தாலும் தயக்கம் வராதோயென்னவோ. இது மாதாமாதம் அந்த நேரத்தில் வரும் வயிற்று வலி தான் என்றாலும், அன்றைய தினம் சற்று அதிகமாகவே இருந்தது.

''ரொம்பவும் முடியலைங்க.'' என்றாள். வயிற்றை இருகைகளால் பிடித்தபடி,

''இந்தா இந்த வயிற்று வலி மாத்திரையை விழுங்கு நான் நம்ப டாக்டருக்கு போன் பண்ணிடறேன். வலி அதிகமானா ஆட்டோ பிடிச்சிப் போயிட்டு வந்திடு. எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு.''

கைக்கடிகாரத்தைப் பார்த்தபடியே பேசினான்.

''வரட்டுமா?'' அவன் போயேவிட்டான்.

இல்லைன்னாலும் நான் என்னைக்கு உங்களுக்கு முக்கியமாய்ப்பட்டேன் தொண்டை வரை வந்த வார்த் தைகளை மனதினுள் அடக்கிக் கொண்டாள். கையில் மிதுன் அளித்து சென்ற மாத்திரை அவளைப் பார்த்துச் சிரித்தது.

உடலின் வலியைக் காட்டிலும் மனவலி பெரியதாய் இருந்தது.

என்னையேன் மறந்தாய் என்பது போல வயிற்றுவலி ஒருமுறை சுருக்கென்றது. கீதாவைத் தொடர்பு கொண்டாள்.

''உடனே வரேன் நளினா'' என்றாள் அவள். சரியாய் அரைமணியில் திரும்பவும் அழைப்பொலி ஆனால் வந்தது கீதா இல்லை சிவமணி.

அவனைக் கண்டதும் மடைதிறந்த வெள்ளமெனக் கண்ணீர் கரைபுரண்டது.

அவளுடைய துவண்ட நிலையைக் கண்டதும் துடித்துப் போனான் சிவமணி ஒரு விநாடி அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை, தான் மனதார விரும்பியவளின் வேதனை அதன் விளைவாய் அவ்விழிகளின் விளிம்பில் கசிந்த கண்ணீர்.

அதை உணர்ந்த பின்னர் அவன் கணநேரமும் தாமதிக்கவில்லை, ஒரு குழந்தையைப் போல அவளைத் தோளில் தாங்கியபடி காரில் அமர வைத்தான். அவளுக்குத் தயக்கமாய் இருந்தாலும், வேறு வழியில்லாததால் வாய் மூடி இருந்தாள். ஆனால் கீதாவிற்குப் பதில் இவனெப்படி வந்தான் என்ற கேள்விமட்டும் அவளுள் பூதாகரமாய்.

''வாங்கம்மா என்ன செய்றது?'' டாக்டரின் கனிவான உபசரிப்பே அவளுக்கு மனநிறைவைத் தந்தது.

''வயிற்று வலி டாக்டர்,''

''எங்கே வலிக்குது?''

''அடி வயிறு, மாதாந்திரப் பிரச்சனை வரும்போது வர்றதுதான்.''



''ஒவ்வொரு மாதமும் இப்படித்தானா?''

''ம்...'' தலையசைத்தாள். சில நிமிடங்களைக் கொண்டு, டெஸ்டுகளும் எடுக்கப்பட்டது. ''சாதாரண பீரியட் டைம் வர்ற வலிதான். நீங்க ரொம்ப வீக்கா இருக்கீங்கம்மா... உங்களுக்கு கல்யாணம் ஆகி எத்தனை நாட்கள் ஆகுது?''

''2 வருடங்கள் ஆகுது டாக்டர்.''

''பெயர்?''

''நளினா...''

டாக்டர் மருந்து சீட்டில் தன் கிறுக்கல் கையெழுத்துக்களை பரப்பினார், பின் ''விட்டமின் டேப்லஸ் எழுதியிருக்கேன் சாப்பிடுங்க க்யூர் ஆயிடும்.''

''தேங்யூ மேடம் பீஸ்...''

''ரிஷப்ஷனில் கேளுங்க,'' என்று கூறிவிட்டு டாக்டர் அடுத்த பேஷண்டிற்கு தயாரானார்.

நளினா வெளியே வந்தாள்.

சிவமணி உடனே எழுந்தான் ''என்னாச்சு தேவி, டாக்டர் என்ன சொன்னாங்க.''

''சாதாரண வலிதானாம் டேப்லஸ் தந்து இருக்காங்க போலாமா?''

''ஒரு நிமிடம்!'' அருகில் இருந்த சின்ன பிள்ளையார் கோவிலில் இருந்து விபூதியை எடுத்து தந்தான்.

மறுபேச்சு இன்றி இட்டுக் கொண்டாள்.

''போலாமா தேவி?'' என்றான்.

காரில் முன்சீட்டில் அவனுக்கருகில் அமர்ந்து கொண்டு வந்தாள், சிவமணி எத்தனை உயர்ந்தவன், அவனின்

ஒவ்வொரு செய்கையும் அவளை சிவமணியின் பக்கம் சாய்த்தது.

"ஸாரி தேவி வீட்டிலே அந்த நிலையிலே உங்களைப் பார்த்ததும் என்னால தாங்கிக்க முடியலை, அதான் ஆபத்திற்குப் பாவமில்லைன்னு உங்களைத் தூக்கிட்டு..."

"பரவாயில்லை சிவமணி."

"இப்போ வலி தேவலையா?"

"ம்...."

வீடு வந்து விட்டது பழையபடியே ஆதரவாய் அவளை அழைத்துப் போனான். ஆனால் அவனின் ஒவ்வொரு தொடுதலிலும் கருணையைத் தவிர வேறு எதையும் உணர முடியவில்லை நளினாவால், ஒவ்வொரு கணமும் கண்ணை இமைபோல் பாதுகாப்பாய் பார்த்துக் கொண்டான் சிவமணி. அவன் அருகாமை வெகு இயல்பாய் ஏற்றுக் கொண்டது நளினாவின் மனம்.

"நளினா" சோபாவில் சரிந்தாள்.

"ஏதாவது சூடா சாப்பிடறீங்களா தேவி?"

"காபி சாப்பிட்டா தேவலை."

"இருங்களேன் நான் போட்டு தர்றேன்."

"அய்யோ உங்களுக்கு ஏன் வீண் சிரமம்?"

"ஷ்.. பேசக் கூடாது கிச்சன் எந்தப் பக்கம்?"

அவள் தன் வெண்டை விரல்களை வலப்புறம் நோக்கி நீட்டினாள். அடுத்த சில நிமிடங்களில் ஆவி பறக்கும் காபியோடு வந்து நின்றான் சிவமணி. "காபியெப்படி?"



"நான் போடறதை விட நல்லாத்தான் இருக்கு. ஆமாம், சிவா நான் கீதாவுக்குத்தானே போன் பண்ணினேன் நீங்கயெப்படி வந்தீங்க?!"

"கீதா உங்களைப் பார்க்க கிளம்பினப்போ ஏதோ அவசர வேலை வந்திட்டதாம் அதனால உடனே கிளம்ப முடியலை. நீங்க போங்க நான் அப்புறம் வர்றேன்னு சொன்னாங்க? பொய் சொல்லாம சொல்லணும், நான் வந்ததில் உங்களுக்கு ஏதும் தொந்தரவா?"

"உண்மையைச் சொல்லப் போனால் உங்க வரவு கூட எனக்கு ஆறுதலாய்த்தான் இருக்கு."

"வீடு ரொம்ப அழகா சுத்தமாத்தான் இருக்கு. தேவி இதுக்குன்னு தனி அக்கறையெடுத்துப்பீங்களா?"

"ம்., வீட்டிலே சும்மா இருக்கிறதால நேரத்தை வேறெப்படி கழிக்கிறது."

"சும்மாயிருக்கீங்களா? என்ன தேவி இது நீங்களே இப்படி தன்னம்பிக்கை இல்லாம, பேசலாமா? ஆண்களை விடவும் பெண்களுக்குத்தான் பொறுப்பதிகம். வெறும் பணத்தை மட்டும் சம்பாரிச்சிட்டு வர்றதோட ஆண்களின் வேலை முடிஞ்சிடும். ஆனால், பெண்கள் அப்படியா வீட்டுப் பெரியவங்களை, கணவனை, பிள்ளைகளை, பொறுப்பை இதெல்லாம் திறம்பட செய்ய ஒரு அசாத்திய திறமை வேண்டுமே!

"தவிரவும் ஆண்களுக்கு எப்பவுமே ஒரே இடம்தான் ஆனால் பெண் மலர்வது ஒரு இடம் மணம் வீசுவது ஒரு இடம், அங்கு எத்தனைப் பேரை அனுசரித்துக் கொண்டு இருக்க வேண்டும். ஆண்களை விடவும் பெண்களுக்கு,

மனவைராக்கியமும் திடமும் அதிகம் என்பதில் அசை யாத நம்பிக்கை உடையவன் நான்.''

அவன் பேச்சை மிகவும் சிலாகித்து ரசித்தாள் நளினா.

''உங்களுக்கு வேறுயென்னப் பொழுது போக்கு தேவி?''

''பழைய பாடல்கள், புத்தகம் வாசிப்பது ஒரு சின்ன லைப்ரரி கூட உண்டு, வீட்டைச் சுற்றி தோட்டம் கூட போட்டு இருக்கேன்!''

''வாவ்.. உங்களிடம் நிறைய திறமையிருக்கும் போல யிருக்கே, நேரத்தின் அருமையை நன்றாய் உணர்ந்திருக் கிறீர்கள்.''


பேசியபடியே லைப்ரரியை அடைந்தார்கள். அந்த அறையில் மூன்று ஷெல்ப்புகள். அவற்றில் ஐந்து அடுக்கு கள் இருந்தது. புத்தகங்கள் வரிசையாய் அடுக்கி வைக்கப் பட்டு இருந்தது.

ஒவ்வொரு அடுக்கிலும், அந்தந்த கதாசிரியர்களின் பெயர் எழுதி வைக்கப்பட்டு இருந்தது. கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம், சாண்டில்யனின் சரித்திர நவீனம், இலக்கிய நூல்கள், காஞ்சனா ஜெயதிலகர், அனுராதா ரமணன், சுபா, என அனைத்து கதாசிரியர்களின் புத்தகங்களும் இருந்தன.


அந்த அடுக்கிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்தான் சிவமணி அட்டையிட்டு புத்தகத்தின் வரிசை எண்ணை யும் கடந்து பிரித்தான். ஷேக்ஸ்பியரின் நாவல் ஒன்று, அமர்ந்து படிக்கவும் குறிப்பெடுக்கவும் அறையின் மூலை யில் ஒரு மேஜையுடன் கூடிய நாற்காலியும் நோட்டு புத்தகமும் பேனா ஸ்டாண்டும் இருந்தது.



அங்கு ஒரு அரைமணி நேரத்தை செலவழித்த பின்னர், தோட்டத்தின் புறம் சென்றனர். அந்தப் பூக் களைக் கண்டதும் இருவருக்கும் உற்சாகம் ஒட்டிக் கொண்டது.



## 11



மல்லிகை, முல்லை, இருவாட்சி, நித்யமல்லி, என பலவகையான வண்ண வண்ண ரோஜாச் செடிகளும் என்று பார்க்கவே கண்களுக்கு குளிர்ச்சியாய் இருந்தது.

அதன் நறுமணம் காற்றில் மிதந்து வர, பதினோரு மணி வெய்யில் லேசாய் நளினாவின் மேல் படரவும், டிசம்பர் வண்ணப் புடவையில் டிசம்பர்ப் பூவைப் போலவே இருந்தாள்.

''வெகு அற்புதம் தேவி இதற்கு எவ்வளவு உழைப்பு தேவைப்பட்டு இருக்கும் என்பதை எண்ணும் போது என்னையும் அறியாமல் உங்கள் மேல் ஒரு மதிப்பு பரவத் தொடங்கி விட்டது தேவி!''

அவளுள் உற்சாக ஊற்று. தன் செயலை பிறர் பாராட்டி னால் தானாகவே இன்பம் வரும். அதுவே தன்னை ரொம்பவும் புரிந்தவரின் பாராட்டு எனில் அந்த சுகமே தனிதானே. ஏதோ மலையைப் பெயர்த்து விட்டதைப் போல, சந்தோஷக் கடலில் மீனாய் நீந்தியவளிடம், கரைக்கு இழுப்பதைப் போல அந்தக் கேள்வியைக் கேட்டான் சிவமணி.

"உங்க கணவர் இதை நிச்சயம் பாராட்டி இருப்பாரே!"

மிதுனைப் பற்றிய பேச்சு வரவும் சற்று நிசப்தம் நிலவியது. உணர்வுகள் துடைத்த முகத்துடன், "அவருக்கு காய்கறித் தோட்டம் போடலையே என்ற வருத்தம்."

"ஏன்?"

"காசு பார்க்கலாமே அதனால் கூட இருக்கலாம்?" அவள் குரலின் கசப்பு அவனைத் தொட்டது.

"சிவா, அவருக்கு எப்பவுமே தொழிலில் தான் ஆர்வம் அதிகம் எத்தனையோ கனவுகள் அவரால் நிறமிழந்து விட்டது. என் சின்னச் சின்ன ரசனைகள் கூட, மிதுனால் நசுக்கப்பட்டு விட்டது. அவரைப் பொருத்த வரையில் பணம்தான் பிரதானம். என் இல்வாழ்வின் வெறுமையைப் போக்கத்தான் என் மனதை மற்ற வழிகளில் செலுத்துகிறேன்."

அவள் முகத்தில் மறுபடியும் வேதனையின் சாயல், அதைக் காணச் சகியாமல் சிவமணி பேச்சை மாற்றினான். "சரி தேவி நான் கிளம்பட்டுமா? நேரம் ஆகுது?"

"ஐ'யோ வெரி ஸாரி சிவா உங்களை நான் சாப்பிடக் கூடச் சொல்லலையே? முதமுதல்ல வீட்டுக்கு வந்திருக்கீங்க? ஒரு அரைமணி இருங்களேன் சாப்பாடு ரெடியாயிடும்."

"நோ.. நோ.. ஸ்டெயின் பண்ண வேண்டாம். நான் வீட்லே போய் சாப்பிட்டுக்கறேன் நீங்க?"

"தெரியலை?"

"தெரியலையா? என்ன சொல்றீங்க?"

"அவர் இல்லாத நாட்களில் பெரும்பாலும், என் ஒருத்திக்கு மட்டும் சமைக்கப் பிடிக்காமல் நான்...!"



"மத்த நேரத்திலே சரி உடம்புக்கு முடியாம.. சரி வீட்லே ஏதும் இல்லையா?"

"தோசை மாவு இருக்கு ப்ரிஜ்ஜில்."

"அப்ப நான் தோசை வார்க்கட்டுமா."

"நீங்களா?"

"பயப்படாதீங்க? நான் நல்லாவே சமைப்பேன் அம்மா போனதும் எனக்குன்னு வேறயாரிருக்கா? அப்பாவும் பாவம், அதனால எனக்கும் எல்லாம் தெரியும்." நளினாவிற்கு அவனைப் பார்க்கவே பாவமாய் இருந்தது. இயற்கை அவனுக்கு தந்த கவலை வேறு போதாதென்று, தன்னைப் பற்றிய வேதனை வேறா இந்த நல்லவனுக்கு! என்று எண்ணினாள்.

அவள் மலைக்கும் போதே அவன் செயலில் இறங்கினான். அவளை எந்த வேலையும் செய்ய விடாமல், சரியாய் 75 நிமிடங்களை விழுங்கி விட்டு டேபிளின் மீது பரப்பினான்.

அரக்க பரக்க ஓடி வந்த கீதா பதற்றத்துடன், "ஏய்! நளினா உனக்கு என்னாச்சு?"

"பதறாதே கீதா சாதாரண வயிற்று வலிதான்."

"நீ ஆபீஸிக்குப் போன் பண்ணவும் நான் பயந்தே போயிட்டேன் உடனே வரலான்னா எம் டி மீட்டிங் அரேன்ஞ் பண்ணிட்டார் அதன் சிவமணிக்கு போன் பண்ணேன் வந்தாரா?"

"ஓ....!"

அதே நேரம் சமையல் கட்டுக்குள் இருந்து வெளியே வந்தான் சிவமணி.

''அதையேன் கேட்குறே...!'' ஆஸ்பிட்டல் கூட்டிட்டு போனதிலேயிருந்து வந்தது வரை அனைத்தையும் ஒப்பித்தாள்.

''அப்போ லன்ஞ் ரெடியா? எனக்கும் ரொம்ப பசிதான் கேண்டீன் சாப்பாடு அலுத்துப் போச்சு!''

''ஆஹா.. என் சமையலுக்கு இப்பவே அபிமானி வந்தாச்சு.''

பீங்கான் பாத்திரங்களில் அடுக்கி வைக்கப்பட்டு இருந்த உணவு வகைகளை பார்த்தாள். வெஜிடபிள் ரைஸூம், குருமாவும் தவிர உருளைக்கிழங்கு வறுவலும் முறுமுறுவென்ற தோசையில் கேரட்டை சீவித் தூவிய தூள்களும் என்று அமர்க்களமாய் இருந்தது.

மூவரும் ஒன்றாய் அமர்ந்தபடி உணவு உண்டார்கள்.

''சாப்பாடு பிரமாதம் சிவமணி. ஒரு பெண்ணாய் இருந்து எனக்கே இன்னும் சமைக்க வராது நீங்க.. கிரேட் தூரிகைப் பிடிக்கிற கைக்கு கரண்டியும் பிடிக்க வரும் மின்னு நிரூபிச்சிட்டீங்க!''

''அறுசுவை விருந்தைக் கூட நளபாகமின்னுதான் சொல்லுவாங்க, அதனால, சமையலில் எப்பவுமே நாங்க தான் நம்பர் ஒன்!'' சிவமணிக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

லானில் அமர்ந்தபடியே மூவரும் பேசிக் கொண்டு இருந்தனர்.

''உண்மைதான் ஆண்களால எல்லாமே செய்ய முடியும் இருந்தாலும், இன்னன்ன வேலை பெண்களுக்கு மட்டும்தான் ஒதுக்கி வைச்சிடறாங்க, நல்லா யோசிக்க,



குக்கர், வாஷிங்மிஷின் ஏன் ஆண்களின் இன்னர்ஸ் கூட பெண்கள்தான் ஸ்பான்ஸர் பண்றாங்க!?!

உலகம் இயங்கக் காரணமே பெண்கள் தானே அதை ஒத்துக்குறீங்களான்னு?'' கீதா கேட்கவும் தலையசைத் தான் சிவமணி.

''ஆமா கீதா நீங்க ஹாஸ்டலிலா தங்கியிருக்கீங்க?''

''பார்த்தியா! நளினா என் கூட போட்டி போட முடியா துன்னதும் சிவா பேச்சை மாத்திட்டார்.''

''நானும் கீதாவும் சிறுவயதிலேயே சிநேகிதிகள், அவளுக்கு அம்மா மட்டும் தான்.''

''அப்படியா.. கீதா.''

''ம்.. எனக்கு சொந்த ஊர் மதுரைப் பக்கம் ஒரு கிராமம். நளினாவும் அங்கேதான் பழக்கம், பள்ளிப்படிப்பு முடி யறதுக்குள்ளேயே, நளினாவோட அப்பா செங்கல்பட் டுக்கு மாற்றலாகி வந்திட்டார். நானும் ஸ்காலர்ஷிப்பில் காலேஜ் சேர்ந்தேன். மாமாவிற்கு எத்தனை நாள்தான் பாரமா இருக்கிறது.''

''சென்னையிலே தெரிஞ்சவங்க மூலமா வேலை தேடிகிட்டேன் அம்மாவை அங்கேயே விட்டுட்டு ஹாஸ்ட லில் தங்கி இருக்கேன் வருஷத்திற்கு இரண்டு தடவை ஊருக்குப் போவேன். நளினாவும் மெட்ராஸுக்கு வந்து விட விட்ட நட்பு திரும்பவும் தொடர ஆரம்பிச்சிடுச்சு.''

''அப்போ கல்யாணம்...''

''அது ஒரு பெரிய லவ் ஸ்டோரி - நளினா.''

''ஆமா பெரிய டைட்டானிங் ஸ்டோரி, லவ்வுன்னு சொல்ல முடியாது அது ஒரு மாதிரி நேசம். கவலைக்குத் தோள் தரும் தோழமை. அப்பாவுக்கு பேர் வாயில நுழை யாத ஒரு நோயாய் நான் அப்போ சின்னப் பெண்

அம்மாவும் எங்கே எங்கேயோ கடன் வாங்கி அப்பாவைக் காப்பாற்ற முயற்சி பண்ணியிருக்காங்க. பலனில்லை.''

''அந்தக் கடன் சுமையை மனமுவந்து ஏற்றார் சுரேந்தர் எங்கமாமா பையன். நானும் அவரும் சேர்ந்துதான் கடனை பாதி அடைச்சிட்டோம். இப்போ அவரு பாரின்ல இருக்கார் கடன் அடைய இன்னும் இரண்டு வருடமேனும் ஆகும். அதுவரையில் தவவாழ்வுதான்.''

''கீதா.. அந்த வகையில் நீ ரொம்பவும் கொடுத்து வைத்தவள்தான். இப்பவே உன் நலனில் அக்கறை கொண்டுள்ள மனிதர், கிடைக்க நீ கொடுத்து வைத்திருக்கணும்!'' நெகிழ்வான குரலில் கூறினாள் நளினா.

பிறகு பேச்சு சிவமணியின் ஓவியங்கள் பற்றித் திரும்பியது.

''எனக்கு கன்னியாகுமரிதான் சொந்த ஊர். அம்மா இல்லை அப்பா மட்டும்தான். சிறு வயது முதலே ஓவியத்தில் அதிக ஈடுபாடு உண்டு.'' அதற்கு பெரும் ஆதரவு அளித்தவர் அவன் தந்தை. கண்களையும் ஈற்று கருத்திற்கும் புரியும் அவற்றினால் பேரும் புகழும் அடைந்தான்.

அவனுடைய கண்காட்சிகள் பல இடங்களில் நடக்கும் பல ஓவியங்கள் ஆயிரக் கணக்கில் விற்கும். நட்சத்திர ஓட்டல், வீடுகள் அலுவலகச் சுவர்கள் இதிலெல்லாம் அவன் படைப்புகள் இடம்பெற்று இருக்கும்.

எப்போதும் இருப்பதைக் காட்டிலும் நளினாவின் முகம் அன்று முற்றிலும் தெளிவாய் இருந்ததை கவனித்தாள் கீதா. மிதுனுடனான வாழ்வில் ஒரு நாள் கூட அவள் இத்தனை சந்தோஷமாய் இருந்து கீதா பார்த்தது இல்லை.

இன்று புன்னகை அவளைவிட்டுப் பிரியவே இல்லை. ஏனோ தோழியின் இந்த மாற்றம் அவளுக்கும் நிம்மதியைத் தந்தது. நட்பின் தூய்மையே நண்பர்களின் நலம்தானே வெளிப்பார்வைக்கு மட்டும் சந்தோஷப் போர்வைக்கு உள்ளே வாழ்ந்த நளினாவின் இன்றைய மகிழ்விற்குக் காரணம் சிவாதான் என்பதில் வெகு உறுதியானாள் கீதா.



''கீதா நீங்க எனக்கொரு உதவி செய்யணுமே?''

''என்ன?''

''தேவியின் இப்போதைய உடல்நிலைக்கு அவங்களைத் தனியே விட எனக்கு மனமில்லை, அதனால நீங்க இன்னைக்கு அவங்க கூடவே இருக்கணும் சரியா?''

''நிச்சயமா?''

அவன் மனமேயில்லாமல் கிளம்பினான். தனக்கு அருகில் படுத்திருந்த கீதாவிடம் சிவாவைப் பற்றிய புராணமே பாடிக் கொண்டு இருந்தாள் நளினா.

சற்றைக் கெல்லாம் தொலைபேசி மணியடிக்க நளினா ஓடினாள் சிவாவாத்தான் இருக்கும்.

அவள் துள்ளல் மிகுந்த நடையும் பேசி முடிந்தவுடன் புன்னகை ததும்பும் முகத்தோடு, ''சிவாதான் இப்போதான் போனார் உடனே போன் பண்ணிட்டார் பாத்தியா?''

''சிவா என் மேல் ரொம்ப அக்கறை வைத்து இருக்கிறார் கீதா. அவரைப் போல் அன்பை நேசிக்கும் நண்பரை அடைய நான் கொடுத்து வைத்திருக்கணும்.''

''நளினா ஊருக்குப் போன மிதுன் போன் பண்ணினாரா?''

அந்தக் கேள்வியைக் கேட்டதுமே அவள் முகம் சோர்ந்து போனது. ''அவருக்கு என்னைப் பற்றி யோசிக்க நேரம்

எங்கே இருக்கப் போகிறது. தாலிகட்டின பொண்டாட்டி உடம்பு முடியாம தவிக்கிறேன். மனதார வேலைதான் முக்கியமின்னு போறார். நான் என்ன தவறு செய்தேன் கீதா அவருக்கு.

''இதோ இந்த சிவாவைப் பார் எத்தனை அன்பு, கருணை 'தேவி தேவி' என்று உருகும் குணம் உன்னிடம் உண்மை சொல்கிறேன் நான் நளினாவாய் இல்லாமல் தேவியாகவே இருந்திருக்கலாமோ என்று தோன்றுகிறது கீதா.''


சொல்லிவிட்டு மாத்திரையின் உதவியில் உறக்கத்தின் பிடியில் வீழ்ந்தாள் நளினா. ஆனால் கீதாவின் தூக்கம் பறிபோய் விட்டது. நளினாவிடம் ஏற்பட்டுள்ள மாற்றம் நல்லதிற்கா, தீயதற்கா என்று புரியவில்லை. மிதுனால் நசுக்கப்பட்ட அவளின் உணர்வுகள் அனைத்துமே சிவமணியால் போற்றப்படுவதும் ஒரு காரணம்.

மிதுனிடம் இத்தனை பாராமுகம் ஏனோ, இப்படியா கண் மண் தெரியாமல் வேலை வேலை என்று அலைவது. வீட்டில் இருக்கும் பெண்களை ஒரு பொருட்டாகவே இவர்கள் மதிப்பதில்லை, தன் உணர்வுகளுக்கு வடிகால் இல்லாமல் தாராசாய் ஆடும் பெண்ணின் மனம் எந்தப் பக்கம் அன்பின் பிடிமானம் அங்கே சாய்கிறது. எத்தனை பத்திரிகைகளைப் பார்க்கிறாள்.


ஆண்கள் அலட்சியப்படுத்தும் பெண்கள் வீட்டின் சுவர்களிடையே பல பாடங்களைக் கற்று விடுகிறாள். தன் திறமைகளை, சாமர்த்தியங்களைக் கூர் தீட்டி வைக்கிறாள். சில நேரம் அது நன்மையாகவும், பல நேரம் தீமையாகவும் போய் முடிகிறது.



இப்போவெல்லாம் பத்திரிகைகளைப் புரட்டினாலே கள்ளக்காதல், கணவனின் கொலை என்று பெண்கள் ரொம்பவும் மாறித்தான் போய் விட்டார்கள். இதைப்பற்றி நளினாவிடம் நேரில் பேசினால் என்ன? ஆனால், அதுவே எதிர் விளைவை ஏற்படுத்தி விட்டால், எதற்கும் கொஞ்சம் விட்டுப் பிடித்தால் தான் நல்லது என்ற முடிவிற்கு வந்தபின் தூக்கம் அவளைத் தழுவியது.



## 12



வேலை முடிந்து சென்னைக்கு வந்து இறங்கிய மிதுன் நேரம் காலை ஒன்பதரை ஆகிவிட, பசிக்கு ஏதேனும் உணவருந்திவிட்டு செல்லுவோம் என்ற நினைப்பில் அந்த பைவ் ஸ்டார் ஓட்டலில் நுழைந்தான்.

காபி ஒன்றையும் மசாலா தோசையையும் ஆர்டர் பண்ணிவிட்டு காத்திருந்தவன் நேற்று வரும் போது நளினா வேறு வயிற்று வலியில் துடித்தது நினைவிற்கு வர போன் பண்ணலாம் என்று நினைத்தான்.

புது யூரோ ப்ராஜெக்டிற்கு கவுன்சிலிங்கிற்காக அவசரமாய் கிளம்பியபோதுதான், நளினா உடம்பிற்கு முடியாமல் தவித்தாள். அவசரமாகச் செல்ல வேண்டியதனால், போன் பண்ணி கேட்கக் கூட முடியவில்லை, அதனால் எண்களை ஒற்றியெடுக்க முனைந்தான்.

''அதற்குள் அத்தான்...'' என்ற பெண் குரல் கேட்டது அவன் முதுகிற்குப் பின்னால்,

திரும்பியவன் கனிசமாக அதிர்ந்தே போனான். அது அவன் மாமாவின் பெண் லலிதா. இளமை எழில் பூத்துக் குலுங்கி, புள்ளிமானாய் திரிந்தவள் லலிதா அப்படிப் பட்டவளா, உடல் மெலிந்து கண்கள் இடுங்கி, 22 வய திலே 30 வயதிற்குரிய தோற்றம் அடக்கமாட்டாமல், "நீ லலிதாதானே" கேட்டே விட்டான்.

"ஆமா அத்தான் லலிதாவேதான்."

"என்னம்மா ஆச்சு உனக்கு ஆளே மாறிப்போய் இருக்கே போன தடவை ஊருக்கு வந்த போது கூட, நீ நல்லாத் தானே இருந்தே கல்யாணம் ஆயிட்டதாக் கூட கேள்விப் பட்டேனே?"

"எல்லாம் உண்மைதான் அத்தான் உறவுகளை விட பணம்தான் முக்கியமின்னு நினைச்சுத்தானே எங்கப்பா உங்களை உதாசீனப்படுத்தினார். அதுக்குத்தான் இப்போ நான் அனுபவிக்கிறேன். பெத்தவங்க பாவம் பிள்ளை களைத்தானே சேரும். அதான் இப்போ..." கண்ணீர் திரை போட்டது அவள் கண்களில்,

"லலிதா பதட்டப்படாதே! முதல்ல உக்காரு" என்று தனக்கென ஆர்டர் செய்த காபியை அவளுக்குக் குடிக்கத் தந்தான்.

"இப்ப சொல்லு - " லலிதாவிற்கும் மூச்சு சீராகி விட் டிருந்தது-

"அத்தான் சொத்து இல்லை. வேலை இல்லைன்னு உங்களை வேண்டாமின்னு மறுத்ததை பெரிய தவ றுன்னு உங்க வளர்ச்சியைப் பார்த்து உணர்ந்தார் அப்பா. அதுக்குப் பிறகு உங்க கூட சம்பந்தம் வைச்சிக்க மறை முகமா முயற்சி பண்ணினார்.



"ஆனா நீங்க ஒரேயடியா மறுத்துட்டீங்க, உங்க கல்யாணம் நடந்திட்ட பிறகு அவருடைய வைராக்கியம் இன்னமும் அதிகமாயிட்டது அத்தான். எப்படியாவது எனக்கு சீக்கிரம் கல்யாணத்தை முடிக்கணுமின்னும், அதுவும் உங்களைவிடப் பெரிய இடமா செய்யணும்ங்கிற வெறியிலே மாப்பிள்ளை தேடினார்.

"மாப்பிள்ளையும் வந்தான் அத்தான். பேரு தினேஷ் பெரிய சாப்ட்வேர் இன்ஜினியர்ன்னும், பணக்காரன்னும் சொல்லி அப்பாவை சம்மதிக்க வைச்சிட்டான்."

"என்ன லலி, மாமா சாதாரணமா யாரையும் நம்பவே மாட்டாரே அப்புறம் எப்படி?"

"ஒரு பெண்ணிற்கு அப்பாவா இருந்து அவரு யோசிச்சு இருந்தா விசாரிப்பாரு. ஆனா அப்போ அவருடைய புத்தியிலே பொறாமையும், பழியுணர்ச்சியும் தான் கலந்து இருந்தது. ஆசை கண்ணை மறைச்சிடுச்சு.'

"சரி உன் கல்யாண வாழ்க்கை என்னாச்சு, இங்கே சென்னையில் நீ யெப்படி?"

"தினேஷ் ஒரு பெரிய பிராடு. இன்ஜினியரும் இல்லை ஒரு மண்ணும் இல்லை. பத்தாவது கூட தாண்டலையாம் மகா குடிகாரன் அத்தான் அவனால் நான் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமில்லை.

"ஒரு பொண்டாட்டி புருஷன் கையால பட்டும் பவளமும் எதிர்பார்க்க மாட்டா அத்தான் உண்மையான அன்பும் அனுசரணையும்தான். அது கிடைக்காத போது வேறயென்ன இருக்கு வாழ்க்கையிலே?

"குடி, குதாட்டம் இதெல்லாம் சேர்ந்து அவனுக்கு பொம்பளை சகவாசமும் வந்துவிட்டது. குடித்தனம்

நடத்தற வீட்டோடு கண்டவளையும் கூப்பிட்டு வந்திட்டான். அவளுக்கு சேர்த்து என்னை சேவகம் செய்யச் சொல்ல, பொறுக்க முடியாம போடா நாயேன்னு! வந்திட்டேன்.''

''மாமா?''

''தப்பு செய்தவர் அவர்தானே அதனால வாய் பேசலை தினேஷ்கிட்ட அவரும் பேசினார். எடுத்தெறிஞ்சு பேசினான். அதற்குப் பிறகு, ஊருக்குப் போகவும் விரும்பலை, போனா எல்லாரும் துக்கம் விசாரிக்கறா மாதிரி பழைய விஷயத்தையே கேட்கிறாங்க. அதனால தான் ஊர் பக்கமே போகலை, வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கப் பிடிக்கலை, அதனாலதான் இங்கே லேடீஸ் ஹாஸ்டலில் தங்கி ஸ்கூல்ல வேலைக்குப் போறேன். என்னைத் தொந்தரவு பண்ணாதீங்கப்பான்னு அவருகிட்டே கண்டிப்பா சொல்லிட்டேன்.''

''இப்போ எப்படி இருக்கேம்மா?''

''பக்கத்திலே இருக்கிற கோவிலுக்கு வர்றது வழக்கம். நீங்க இங்கே நுழையறதைப் பார்த்தேன். உங்களைப் பார்த்ததிலே ரொம்ப சந்தோஷம் அத்தான்.''

''நான் கேட்டதற்கு பதில் இது இல்லை?''

''பலதரப்பட்ட மனிதர்கள், பிஞ்சு குழந்தைகளோட முகத்தைப் பார்க்கும்போது என் கவலையெல்லாம் மறந்து போயிடுது அத்தான். அப்பாவும் இப்போ எவ்வளவோ திருந்திட்டார். ஆனா என் வாழ்க்கைப் போனது போனது தானே!''

''லலிதா கவலைப்படாதேம்மா உனக்கு இன்னும் வயசாயிடலை. நீ நினைச்சா உன்னை இன்னொரு வாழ்க்கைக்கு தயார்படுத்திடலாம்.''



''அத்தான் ஏற்கனவே உங்களை மனசார விரும்பிட்டு, தினேஷை கல்யாணம் பண்ணிகிட்டேன். அதிலே ஒரு வேளை திருப்தி அடைஞ்சிருந்தா கூட மனசு சந்தோஷமா இருந்திருக்கும். ஆனா, அதுவும் இல்லைன்னு ஆயிப்போச்சு. இப்பக்கூட உங்ககிட்டே பேசினதுக்குக் காரணம் அப்பா செய்த காரியத்திற்காக என்னையும் ஒதுக்கிட்டீங்க என் மேல தப்பு ஏதும் இல்லைன்னு நீங்க புரிஞ்சுக்கணுங்கிறதாலதான்.''

''உம்மேல எனக்கு என்னைக்குமே கோபம் இருந்தது இல்லை லலிதா.''

''என்னைப் பற்றியே பேசிகிட்டு இருக்கேன் பாருங்க, நீங்க எப்படியிருக்கீங்க அத்தான். உங்க மனைவி எப்படியிருக்காங்க?''

''நலம்தான் லலி, நளினா ரொம்பவும் அமைதியான சுபாவம் கொண்டவ.''

''அத்தான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. ஏதோ அப்பா உங்களை அசிங்கப்படுத்திட்டாருன்னு நீங்க உங்க சந்தோஷத்தை எல்லாம் புறக்கணிச்சு வேலை வேலைன்னு ஓடுனீங்க. இனிமேலும் அதைப் போல இருக்க வேண்டாம் அத்தான்.

''ஆண்கள் மனசிலே ஆயிரம் எண்ணங்கள் இருக்கும். ஆனா பெண்களுக்கு தன் குடும்பமும் கணவனும்தான் உலகமே.


பொண்ணுங்க மனசு கண்ணாடி மாதிரி நீங்க எதைப் பிரதிபலிக்கிறீங்களோ அதையேதான் அதுவும் பிரதி பலிக்கும். பணத்தை மீறியும் உன்னதமான ஒரு வாழ்க்கை இருக்கு புரிஞ்சு நடந்து உங்க வாழ்வையாவது பிரகாசம் ஆக்கிக்கோங்க அத்தான் நான் புறப்படறேன்.''

''நேரம் கிடைச்சால் வீட்டுக்கு வந்து போ லலி இந்தா இதுதான் என் முகவரி'' அவன் தந்த விசிட்டிங் கார்டை பெற்றபடி ஒரு ரெடிமேட் புன்னகையுடன் நடந்து மறைந்தாள் லலிதா.


பாவம் எத்தனை நல்ல பெண். அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையவில்லையே வந்தபோது இருந்த பசி இப்போது காணாமல் சென்று விட்டிருந்தது.

மனம் தானாக நளினாவின்புறம் சென்றது. நான் என் மனைவியை நல்லபடியாத் தான் கவனிக்கிறேன். உண்ண உணவு, அவள் விரும்பிய நகைகள் உடை என எந்த விதத்திலும் நான் குறை வைக்கவில்லை. அவளுக்கு ஒரு நிறைவான வாழ்க்கை நான் தந்திருக்கிறேன்.

வீட்டிற்குப் போனதும் நளிணவை நல்ல டாக்டரிடம் கூட்டிப் போக வேண்டும் என்ற நினைப்போடுதான் சென்றான். ஆனால் அதற்கு முன்பே அலுவல் வேலை காத்திருந்தது.



# 13



மிதுன் வீட்டிற்குள் நுழையும் நேரம் நளினா யாருடனோ போனில் பேசிக் கொண்டு இருந்தாள்.

''என்ன ஸார்? அவர் ஊரிலிருந்து காலையிலேயே திரும்பிட்டாரா இல்லைங்க? இன்னும் வீட்டுக்கு வரலை'' பேசியபடியே மிதுனைக் கண்டவள் ''உங்க பி.ஏ. அருண் பேசணுமாம்!'' என்று ரிசீவரை அவனிடத்தில் தந்துவிட்டு, ஹீட்டரை ஆன் பண்ணினாள்.



கட்டின புருஷன் ஊரிலிருந்து வந்தது. யாரோ ஒரு மூணாம் மனுஷனுக்குத் தெரிகிறது. எனக்குத் தெரியவில்லை. என்ன தாம்பத்தியம் எந்த ஒட்டும் உறவும் இல்லாமல் ச்சே!

வாசலில் ஏதோ சப்தம் கேட்க, எட்டிப் பார்த்தாள். அம்மா வந்து கொண்டிருந்தார். மனம் குதூகலித்தது. எத்தனை புது உறவுகள் வந்தாலும், உலகில் ஜனித்தபோது முதன் முதலாய் கண்ட அந்த முகத்திற்குத்தான் மதிப்பதிகம்.

அம்மா என்பது எத்தனை பூரணமான உறவு. வேதனையில் குன்றிப் போன மனதிற்கு தாயின் வரவு பெருத்த ஆறுதலாகத்தான் இருந்தது.

''அம்மா'' ஆசையோடு கட்டிக் கொண்ட மகளை அன்போடு தடவிக் கொடுத்தார். ''நல்லாயிருக்கியாம்மா.''

''ம்... அங்கே அப்பா, அண்ணா அண்ணி எல்லாரும் நலம்தானே..''

''என்னடா நளினா ரொம்ப மெலிஞ்சு போயிட்டியே?''

''போம்மா உனக்கு எப்பவுமே என்னைக் கிண்டல் பண்றதுதான் வேலை. பேசாம குடும்மா.''

''மாப்பிள்ளையெங்கே?''

''குளிக்கிறார்.''

''காபி தரட்டுமா.''

''வேண்டாம். அப்புறமா குளிச்சிட்டு டிபனே சாப்பிட்டுக்கிறேன்.'' வீட்டை சுற்றும் முற்றும் ஆராய்ந்தவர் ''பரவாயில்லை நளினா வீடெல்லாம் ரொம்ப சுத்தமா வைச்சிருக்க!'' ஒரு தாய்க்கு உண்மையான சந்தோஷமே மகளின் வீட்டு நடப்பை அருகிலிருந்து ரசிப்பதுதானே. தாயின் மனம் முழுக்க பூரிப்படைந்து இருந்தது. மிதுனும் அந்நேரமே டவலைப் போர்த்தியபடி வெளியே வந்தான்.

"தம்பி நல்லாயிருக்கீங்களா?"

"இருக்கேன் அத்தை. நானே உங்களுக்குப் போன் பண்ணனுமின்னு நினைச்சேன். நல்லவேளை நீங்களே வந்திட்டீங்க. எல்லாரும் நலமா?"

"ம். சுகம்தான்."

சமையலறையில் இருந்த நளினாவிற்கு உள்ளூர உதைப்பு இவர் ஏதேனும் சொல்லி அம்மாவின் மனதை யும் புண்படுத்தி விடப் போகிறாரோ என்று பயந்தபடியே வெளியே வந்தாள்.

நல்லவேளை அவன் அப்படி எதுவும் சொல்ல வில்லை. "நளினா ரொம்பவும் வீக்கா அத்தை. அவளை ஆஸ்பிட்டலுக்கு கூட்டிட்டுப் போய் ஒரு ஜெனரல் செக்கப் செய்யச் சொல்லிடுங்களேன். என்னோடு வேலை டென்ஷனில் என்னால போக முடியலை."

நளினா அமைதியாய் வந்து டிபனை இருவருக்கும் பரிமாறினாள். ரவா இட்லியும் தக்காளிச் சட்னியும் சுலப மாய் உள்ளிறங்க, "அப்போ நான் கிளம்பறேன் அத்தை. வரேன் நளினா." அவன் தன் ப்ரீப்கேஸுடன் கிளம்பவும்.

தலையை மட்டும் அசைத்து வைத்தாள். நல்லவேளை நம்மிடம் எரிந்து விழுவதைப் போல இல்லாமல் தாயிட மாவது நல்ல முறையில் நடந்து கொண்டானே என்ற எண்ணம் நிம்மதியைத் தந்தது.

இதர வேலைகள் சீக்கிரமாய் முடிந்துவிட, தாயும் மகளும் அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தனர்.

"என்னாலே இன்னமும் நம்பவே முடியலைம்மா நீங்க வந்து இருக்கிறதை?"

"என்னமோ! உன்னைப் பார்க்கணும் போல தோணிச்சு அதான் உடனே புறப்பட்டு வந்திட்டேன். உங்கண்



ணிக்கு இது ஐந்தாவது மாதம். ரொம்பவும் பூஞ்சையா இருக்கா... ம்.. இந்தக் காலத்துப் பிள்ளைங்களுக்கு எங்கே உடம்பு இருக்கு. ஒரு பிள்ளை பெத்த உடனேயே அங்கே வலிக்குது இங்கே வலிக்குதுன்னு சொல்லுதுங்க. எங்க மாமியார் காலத்திலே வரிசையா எட்டு, பத்துன்னு கூட பெத்துப் போட்டுட்டு கட்டுக் குலையாமே காட்டு வேலைக்குப் போவாங்க, இப்போ உங்களைச் சொல்வி யும் தப்பில்லை, கம்மங்கஞ்சியும் சுத்தமான காத்துமே உடம்பை வளர்த்திடுச்சி. இப்போ சாப்பாடு கூட பேஷனாயிடுச்சு."

"வயித்துக்கு சாப்பிடாம உடம்பு குறையணும் என்று இரண்டு இட்லியைக் கொறிச்சிட்டு நோஞ்சு போய் கிடந்தா எங்கே சத்து இருக்கும்."

நளினா பெரிதாய் சிரித்தாள். "நல்லா பேச ஆரம்பிச்சிட் டீங்கம்மா அண்ணியோட ட்ரைனிங்கா?"

"ஆமா அவ பேசவே காசு கேக்கறா, பாவம் தாயில்லாத பொண்ணு இந்த நேரத்திலே நான்தானே பார்த்துக்கணும். நளினா கேக்கிறேன்னு தப்பா நினைக்காதே. நீயும், மாப் பிள்ளையும் எந்தப் பிரச்சனையும் இல்லாம சந்தோஷமாத் தானே இருக்கீங்க?"

"ஏம்மா இப்படித் திடீர்னு கேக்குறே?"

"பின்னேயென்னடி கல்யாணமாகி எட்டு மாசந்தான் ஆகுது உங்கண்ணி உண்டாயிட்டா. நீயும் இரண்டு வரு ஷமா எந்த நல்ல சேதியும் தரலை. எம்மவ வயித்துப் பிள்ளையைப் பார்க்கணும் என்று எனக்கும் ஆசையிருக் காதா."

"அம்மா..."

''நளினா இப்போதைக்கு வேண்டாம் என்று தள்ளி போட்டு இருக்கிங்களா?''

நளினாவிற்கு என்ன சொல்வது என்றே தெரிய வில்லை. பேசாமல் தலையசைப்பதோடு நின்று விடலாம் என்று அமைதி காத்தாள். ''ஆமாம்மா அவரு இருக்கிற பிஸி ஷெட்யூல்ல குழந்தை பிறந்தா கவனிக்கிறது கஷ்ட மின்னு நினைக்கிறார் அதனால...!''

''அடக்கடவுளே...! நீ என்ன டஜன் கணக்கிலேயா புள்ளை பெத்துக்கப் போறே ஒரு புள்ளையை உன்னால பார்த்துக்க முடியாது. நளினா பொண்ணு முழுமையடை யறதே தாய்மையிலே தாண்டி, அதையே தள்ளிப் போடு றது எந்த வகையிலே நியாயம். உன்னால பார்த்துக்க முடியலைன்னா நீ பிள்ளையைப் பெத்து என்கிட்டே கொடுத்திடு நான் பார்த்துக்கிறேன்.

''எத்தனையோ பெரும் பணக்காரர்கள் கூட பிள்ளை வரம் கேட்டு, கோயில் கோயிலா அலையறாங்க. நீ என்ன டான்னா ரொம்ப ஈஸியா எடுத்துக்கறியே? ஆம்பிள்ளைங்க மனசு நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிடும் நளினா. நாமதான் அதெல்லாம் புரிஞ்சு நடந்துக்கணும்.''

''சரிம்மா நான் இதைப்பற்றி சீக்கிரமா அவர்கிட்டே பேசறேன்.'' வாய்தான் அப்படி சொல்லியதே தவிர மனம் குமைந்தது.

தன் வேலையிலேயே கண்ணுங் கருத்துமா இருந்து வரும் அவனிடம் இத்தனை பெரிய விஷயத்தை எப் போது பேசுவது. நினைத்ததை பேசும் சுதந்திரம் தனக்கு இருக்கிறதா என்று குழம்பியது அவளின் இதயம்.

அம்மா அருகில் இருந்த இரண்டு நாட்களும் நிமிடங் களும் வேகமாய் கரைந்தன. கோவில், பீச்சென்று நேரம்



கரைந்தே போனது. மூன்று நாட்கள் போனதே தெரிய வில்லை. அம்மா கிளம்புகிறேன் என்று சொல்லும்வரை அந்த சந்தோஷம் நீடித்தது.

''என்னம்மா இது அட்லீஸ்ட் ஒரு வாரமாவது இருப் பேன்னு பார்த்தேன். மூணே நாள்ல கிளம்புறீயேம்மா.''

''என்னவோ உன்னைப் பார்க்கணும் போல இருந்தது. போட்டது போட்டபடி அப்படியே ஓடி வந்திட்டேன். அங்கே நிலைமை எப்படியிருக்கோ? பாவம் புள்ளைத் தாச்சிப் பொண்ணு இப்பத்தான் அவளுக்கு ஒருத்தரோட ஆறுதல் தேவை. என்னதான் மருமகளா இருந்தாலும், அவளும் நீயும் ஒண்ணுதானே எனக்கு.''

''எனக்கென்னமோ நீ அண்ணிக்காக போறா மாதிரி தெரியலை. அப்பாவுக்காகத்தானே போறே?''

''அப்படித்தான் வைச்சுக்கோயேன். அவரு குழந்தை மாதிரிடி. நான் இல்லாம அவருக்கு எந்த வேலையும் ஓடாது. தண்ணீர் குடிக்கணுமின்னாகூட என்னைத்தான் தேடுவார். அவரு புருஷனா கிடைக்க நான்தாண்டி கொடுத்து வைச்சி இருக்கணும்.''

''அப்பாவும், நீயும் இந்த வயசிலேயும் அன்னி யோன்யமா இருக்கிறது மனசுக்கு ரொம்ப நிறைவா இருக்கும்மா. இந்த மாதிரி வாழ்க்கை நிறையப் பேருக்கு அமையறது இல்லை.'' அவள் கண்களில் இருந்து கண் ணீர் துளிர்த்தது.

பதறிப் போனார் அத்தாய். ''என்னடியிது சின்ன பிள்ளை மாதிரி அழுதுகிட்டு.''

''உண்மையிலேயே நீ ரொம்பக் கொடுத்து வைச்ச வம்மா.''


"நளினா நான் ஊருக்கு இத்தனை சீக்கிரம் கிளம்பிய துக்கு இன்னொரு காரணமும் இருக்கு."

"என்ன?" என்பதுபோல் வியப்பொழுக கேட்டாள்.


"நீயும் மாப்பிள்ளையும் தனியா ப்ரியா இருந்தே பழகிட்டீங்களா? இப்ப நான் ஒரு பெரிய மனுஷி இங்கே உலாவிகிட்டு, இருக்கிறதால மாப்பிள்ளை உன்கூட பேசக்கூட கஷ்டப்படறார். ஏதாவது ஒரு பைலை சாக்கா வைச்சிகிட்டு, அவரு ஒண்டியா உக்காந்து இருக்கிறதைப் பார்த்தா எனக்கே பாவமா இருக்குடி. அதான் கிளம்பறேன்."

"அவரு உன்னை அப்படியெல்லாம் நினைக்க மாட் டாரும்மா?"

"நீ சின்னப் பொண்ணுடி உனக்கென்ன தெரியும். எல்லா ஆம்பிளைக்கும், வேலை முடிஞ்சு ஆயிரத்தெட்டு டென்ஷனோட வருவாங்க. அப்போ பெண்டாட்டியோட முகம்தான் ஹெல்த் டானிக் மாதிரி. நாமதான் அவருடைய மனசறிஞ்சு நடக்கணும்."



# 14



உண்மையான அன்பான தம்பதிகளுக்கு இது பொருந்தும். நானும் அவரும் தாமரை இலைத் தண்ணீர் போல ஒட்டாமல் தானே இருக்கின்றோம். இதைப் பற்றி அம்மாவிடம் சொன்னால் தாங்க முடியாது. என் கஷ்டம் என்னோடயே போகட்டும் என்று எண்ணியபடியே அண் ணிக்காக வாங்கிய புடவையையும், வளையலையும்



தந்துவிட்டு, காரில் பஸ்ஸ்டாண்ட் வரை டிராப் செய்து விட்டு வந்தாள்.

அம்மா போன பிறகு வீடே வெறிச்சோடிப் போனது போல் ஆனது. எத்தனை தூரம் சிறகடித்துப் பறந்தாலும் தன் கூட்டிற்கு வந்து தாய்ப் பறவையின் சிறகிற்குள் கிடைக்கும் சுகம் வேறெதில் இருக்கும். மறுபடியும் வீட்டிற்குள் அதே சூன்யமான வெறுமை. புத்தக அறைக் குள் புகுந்தாள். ஏதாவது ஒரு புதினத்தை வாசிக்கத் தொடங்க மனம் எதிலும் ஒட்டாமல் இருந்தது.

நாளிதழைப் புரட்டினாள். அன்றைய இதழில் ஒரு ருசியான கேள்வி பதில் வெளிவந்து இருந்தது.

இன்றைய சூழ்நிலையில் கணவன் மனைவி உறவில் பிரிவு ஏற்படக் காரணம் என்ன? என்ற கேள்விக்கு பல கலைஞர்கள் பதில் கூறியிருந்தார்கள்.

கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்வத னால்தான் இந்த நெருக்கம் குறைகிறது என்றும்,

இருவரும் பணிக்குச் சென்றாலும், ஆண்மகன் என்ற எல்லைக்குள் ஒடுங்கி விடுவதால் பிரிவும் உண்டாக வாய்ப்புள்ளது. பெண்கள் வீடு, அலுவலகம் என இரண்டு சுமைகளையும் சுமப்பதால் டிப்ரஷன் ஏற்பட்டு எல்லா வற்றிலும் வெறுப்பு ஏற்படுகிறது.

அலுவலக டென்ஷனையெல்லாம் உடை மாற்றுவது போல் களைந்து விட்டு, நல்ல ஸ்நேகிதனாய் தந்தையாய் கணவனாய் மட்டுமே நடக்க வேண்டும். அப்படி இருந் தால் பிரிவு என்ற சொல்லுக்கு இடமிராது.

எத்தனை வேலைகள் இருந்தாலும் குறைந்தது ஒரு பத்து நிமிடமாவது தினமும் ஒதுக்குங்கள். அதன் மூலம் உங்கள் குறைகளை களைய வாய்ப்பு உண்டு.

இந்தக் காரணங்களையெல்லாம் மிதுனும் அவளும் மனது விட்டுப் பேசினாலே, பாதிப் பிரச்சனைகள் குறைந்து விடும் என்று தோன்றியது. அதற்குத் தகுந்த நாளையும் எதிர்பார்த்து காத்திருந்தாள்.

அன்று சோம்பல் கலந்த ஞாயிறு காலை, வழக்கத்திற்கு மாறாக மிதுன் எட்டு மணியாகியும் உறங்கிக் கொண்டு இருந்தான்.

நளினா சப்பாத்தியும், குருமாவும் செய்து கொண்டு இருந்தவள், காலிங்பெல் சத்தம் கேட்டு வெளியே வந்தாள். எதிர் வீட்டு பெண்மணி மலர் செல்வி நின்றிருந்தாள். அவளிற்குப் பின்னால், அள்ளிச் செருகிய கொண்டையும், நெற்றி அகல பொட்டுமாய், 35 வயது மதிக்கத்தக்க பெண்மணி நின்றிருந்தாள். முழங்கால் வரை தூக்கிக் கட்டிய சேலைக்கு வெளியே பாவாடை தெரிந்தது.

''வாங்க மலர் ஏன் வெளியே நிக்கறீங்க?''

அவள் உள்ளே நுழைந்து சோபாவில் பரவ, அந்தப் பெண்மணி பவ்யமாய் நின்றிருந்தாள். ''இவங்க சத்யவதி எங்க வீட்டுலே வேலைப் பார்த்தவங்க, அவருக்கு பெங்களூர் பிரான்ஞ்சுக்கு டிரான்ஸ்பர் ஆயிட்டதால நாங்க வீடு காலிப் பண்ணப் போறோம். அதனால வேறேயெங்கயாவது, வேலைக்கு ஏற்பாடு பண்ணலாமின்னு வந்தேன்.

''உங்க வீட்டு வேலைக்கு ஏதாவது ஆள் தேவைப்படுமான்னு கேட்கத்தான் வந்தேன்.''

''மலர் உங்களுக்கே தெரியும், எங்க வீட்லே ரெண்டே பேர் வேலையும் அதிகமில்லை. நானே பார்த்துப்பேன்.''

அதுவரை பேசாமல் இருந்த அந்த பெண்மணி பேசினாள். ''நீங்க வீட்டு வேலைக்கு சேர்த்தா என் குடும்பமே உங்களை வாழ்த்தும். ஏதோ வேலை செய்து வயித்தைக் கழுவிகிட்டு இருக்கேன். என்னை நம்பி நாலு ஜீவன் இருக்கும்மா நான் நல்லா சமைப்பேன்மா.''



நளினாவிற்கு அந்தப் பெண்ணைப் பார்க்கவே பாவமாய் இருந்தது.

''இங்கே மத்த வேலையெல்லாம் நானே பார்த்துப்பேன். நீங்க தோட்ட வேலை செய்யுறீங்களா? பெரிசா ஒண்ணுமில்லை, குப்பை கூளம் சேர விடாம பார்க்கணும். பூச்சி மருந்து தெளிச்சி நீர் பாய்ச்சணும் அவ்வளவுதான்.''

''சரி தாயி! நாளைக்கே வந்திடறேன்.''

''ரொம்ப தேங்க்ஸ் நளினா. அப்போ நான் கிளம்பறேன் துணியெல்லாம் பேக் பண்ணனும்.''

''இருங்க மலர் காபியாவது தர்றேன்.''

''நீங்க இரண்டு பேரும் பேசிகிட்டு இருங்க. நான் காபி கலந்து தர்றேன்.''

அதே நேரம் மிதுன் வெளியே வந்து புருவம் சுருக்கினான். ''இவங்க நம்ம எதிர்வீட்டுலே இருக்கிறவங்க. பேரு மலர்.'' அப்படியே அவள் வந்த விஷயத்தைப் பற்றிக் கூறிடவும். ''உனக்குத்தான் அடிக்கடி உடம்பிற்கு முடியாமப் போகுது. ஒரு ஆள் துணைக்கு இருந்தா நல்லதுதானே!''

நான் யார் துணைக்கு ஏங்குகிறேன் என்று உங்களுக்கு எப்போதுதான் புரியும் மிதுன். கேள்வியோடு அவன் முகம் நோக்கவும், சத்யவதி காபியை கொண்டு வந்து தந்தாள்.

மிதுன் அந்தப் பக்கம் நகரவும், மலர் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிட, ''நீங்க நாளையிலிருந்து வேலைக்கு வந்திடுங்கம்மா'' என்றாள்.

அவர்கள் நகரவும், ''என்னங்க...''

''ம்...'' பேப்பரிலிருந்த மிதுன் நிமிர்ந்தான். ''என்ன நளினா?''

''எங்க ஷாப்பிங் போறேன். நீங்க வர்றீங்களா?''

''இல்லை நளினா எனக்கு ரொம்பவும் டயர்டா இருக்கு. அதுவும் இல்லாம நாளைக்கு ஒரு முக்கியமான அசைன்மெண்ட் இருக்கு.''

''சரிங்க.. என்ன திடீர் ஷாப்பிங்குன்னு கேட்க மாட்டீங்களா?''


''என்ன?''

''என் பிறந்த நாள் அடுத்த வீரம் வருது. அதுக்காக புடவை எடுக்கப் போறேன்.''


''அப்படியா? அட்வான்ஸ் விஷஷஸ். நல்ல காஸ்ட்லியா புடவை வாங்கிக்கோ. இந்தா கார்டு எடுத்திட்டுப் போ.''

''வேண்டாங்க.''

''பிடி நளினா. உன் விருப்பப்படி எதுவேன்னாலும் வாங்கிக்க'', சொல்லிவிட்டு அவன் மறுபடியும் பேப்பரில் ஆழ்ந்தான்.



# 15



நளினா ஜனநெருக்கடியைக் கடந்து அந்த புடவைக் கடைக்குள் நுழைந்தாள். மூன்று மாடிகளைக் கொண்ட அந்தக் கடையில் இரண்டாவது மாடிக்குள் பிரவேசித்தாள்.



''ஹலோ... தேவி'' என்ற குரல் கேட்டு திரும்பினாள். எதிரே வெள்ளை ஜிப்பாவில் சிவமணி நின்றிருந்தான். அந்த உடையில் சற்று உயரம் அதிகமாய் தெரிந்தான்.

''சிவா புடவைக்கடைப் பக்கம் ஆண்களுக்கு என்ன வேலை?''

''இங்கே என் ஓவியங்கள் கேட்டு இருந்தார்கள். அதான் விஷூ பார்க்கலாமின்னு வந்தேன்.''

''நீங்க?''

''ஜஸ்ட் ஷாப்பிங்.''

''செலக்ட் பண்ணியாச்சா?''

''இன்னும் இல்லை, நான் ஹெல்ப் பண்ணவா?''

''ஷ்யூர்...''

சில்க் சாரீஸ் செக்ஷனுக்கு வந்தார்கள். பத்துப் புடவைகளைக் கலைத்துப் போட்டு விட்டு அந்த சந்தன நிற சேலையில் சிகப்பு கற்கள் வேலைப்பாடு கொண்ட புடவையைத் தேர்வு செய்தாள்.

''ரொம்ப அற்புதம் தேவி. நீங்க நல்லா செலக்ட் பண்றீங்க.''

''நன்றி சிவா. இங்கே ஒரு காபி ஷாப் இருக்கு போலாமா?'' என்ற சிவாவின் கேள்விக்கு தலையசைத்து பார்சலைப் பெற்றுக் கொண்டு இறங்கினார்கள்.

அருகிலிருந்த காபி ஷாப்பினுள் தனியான மேஜையைத் தேர்வு செய்து அமர்ந்தனர். ''ஏன் இரண்டு நாளா போனே பண்ணலை சிவா?''

''கொஞ்சம் வேலை தவிரவும், உடம்பு சரியில்லாத உங்களைச் சும்மா தொந்தரவு பண்ண வேண்டான்னு பார்த்தேன்.''

''உங்க அழைப்பை நான் எப்பவுமே தொந்தரவா நினைக்க மாட்டேன் சிவா. புண்பட்ட எனக்கு உங்க வார்த்தைங்க மருந்துதான் ஆதரவா இருக்கு. இப்படியொரு நல்ல நண்பனை கொடுத்ததுக்கு நான்தான் கடவுளுக்கு நன்றி சொல்லணும்.''

அவன் புன்னகைத்தான் ''தேவி. இத்தனை நல்ல உள்ளம் கொண்ட உங்களுக்கு வாழ்வில் எந்தக் குறையும் நிச்சயம் வராது. இப்பவும் காசு பணம் விஷயத்தில் அவரு எனக்கு எந்தக் குறையும் வைக்கலை. முழு சுதந்திரம் தந்து இருக்கார். ஆனா ஒரு பொண்ணுக்கு பணமும் நகையும் மட்டும் போதுமா? அதற்கு மீறி நேசமும் ஆதரவும் தேவையில்லையா? பணம் மட்டுமே வாழ்க்கையில் லைன்னு எப்பத்தான் அவர் உணரப் போகிறாரோ?''

''சிவா நான் அவரை எத்தனை நேசிக்கறேன் தெரியுமா? என் உயிருக்கும் மேலே ஆனா சில நேரங்களில் அவர் நடந்துக்கிற முறையைப் பார்த்தா என் மேல கொஞ்சம் கூட ஒட்டுதல் இல்லாதவர் நடந்துக்கிறா மாதிரி இருக்கு. அந்த நேரம் மனசுக்கு ரொம்பவும் கஷ்டமாயிடுது சிவா.''

''தேவி பெண்கள் கண்ணீர் மூலம், உணர்வுகள் மூலம் வெளிக்காட்டிடுங்க, எண்ணத்தை ஆனால் ஆண்கள் அப்படி நடந்துகிட்டா கோழைன்னு முத்திரை குத்திடுவாங்க. அருமை பெருமையா அவர் சம்பாதிப்பது எல்லாம் உங்களுக்காகத்தான. உன் மேல அன்பில்லாமயா?''

''புத்திக்குப் புரியுது. இதயத்திற்குப் புரியலையே? என் மனசு அன்புக்கு ஏங்குது. சிவா அது உங்ககிட்டே கிடைக்கும்போது இதமா இருக்கு.''



''என்னால முடிஞ்சளவுக்கு அந்த அன்பை அள்ளித் தர நான் தயாரா இருக்கேன் தேவி.''

நளினா வீட்டிற்குத் திரும்பும்போது மணி ஏழாகி விட்டது. சிவாவுடன் பேசியது வலிக்கு ஒத்தடம் தந்தது போல் இருந்தது. வழக்கத்திற்கு மாறாக மிதுன் இன்று வீட்டில் இருக்கிறான். என் மனதைப் பற்றியும் ஏக்கங்களைப் பற்றியும் பேசிப் புரிய வைக்க இது ஒரு நல்ல வாய்ப்பு என்றெல்லாம் எண்ணியபடியே வந்தவளுக்கு கதவில் தொங்கிய பூட்டு பெருத்த ஏமாற்றமாய் இருந்தது.

இந்நேரத்திற்கு எங்கே சென்று இருப்பார் என்ற யோசனையோடு தன்னிடமிருந்த சாவியைக் கொண்டு உள்ளே நுழையவும் இருட்டு கண்களைப் போர்த்தியது. வெளியே பெரிய பிஸினஸ் மேன். வீட்டுக்குள் ஒரு லைட்டைகூட போடாமல் போய் இருக்கிறாரே?

சலித்தபடியே முகம் கழுவி இலேசாக பவுடர் பூசினாள். கட்டியிருந்த சேலையை உருவி விட்டு நைட்டுக்குள் நுழைந்து வாங்கி வந்த மல்லிகைச் சரத்தை சூடிக் கொண்டு கணவனுக்காக காத்திருந்தாள்.

பெயருக்கேற்றாற்போல் தொல்லை தந்தது தொலைபேசி.

''ஹலோ.''

''நளினா நான் மிதுன்.''

''எனக்கு ஒரு அவசர வேலை, அதனால நான் இப்போ பெங்களூர் போயிட்டிருக்கேன்.''

''என்ன திடீர்னு?''

''நான் வந்து விபரமா சொல்றேன்!'' என்றபடி லைனை கட் பண்ணி விட்டான்.

நளினாவின் மொத்த உற்சாகமும் வடிந்து போனது. இயலாமை ஏமாற்றம் அனைத்தும் சேர்ந்து அவள் கண்களில் அழுகையை வரவழைத்தது.

நளினாவும், சத்யவதியும் தோட்டத்து வேலையை முடித்து விட்டு, அங்கேயே சேர் போட்டு அமர இஞ்சி கலந்த சூடான தேநீரை கலந்து தந்தார் சத்யவதி.

"உட்கார்ந்து குடிங்க."

"பரவாயில்லைம்மா..."

"சும்மா உக்காருங்க சத்யா. உங்க கணவர் என்ன செய்யறார். உங்களுக்கு எத்தனைப் பிள்ளைகள். நானும் அப்பவே கேக்கணுமின்னு நினைச்சேன்."

"எனக்கு இரண்டு பிள்ளைகள். ஆணொன்னு, பொண்ணொன்னு என் புருஷன், ரொம்ப நல்லவரும்மா, நல்ல மனசைப் படைச்ச அவருக்கு கடவுள் பெரிய தண்டனை தந்திட்டான். எங்களோடது காதல் திருமணம் எத்தனையோ எதிர்ப்புகளை மீறி கல்யாணம் செய்திட்டோம்.


"பதினைந்து வருஷம் எல்லா இன்பமும் கைகோர்க்கத்தான் வாழ்ந்தோம். யார் கண்ணு பட்டதோ ஒரு நாளு வேலை பார்த்திட்டு வந்தப்போ விபத்திலே அவருக்கு இரண்டு காலும் போயிடுச்சு. இருந்தாலும் மனம் தளராம உக்காந்தபடியே போர்டு எழுதித் தந்திட்டு இருக்கார். ஒரு பக்கம் அவரு படற கஷ்டத்தைப் பார்க்கச் சகிக்கலை. மறுபுறம் அந்த வருமானம் எங்க வயிற்றுக்குப் பத்தலை. படிப்பு வாசனை இல்லாதவ எனக்கென்ன கவர்மெண்ட் உத்தியோகமா கிடைக்கும்.

"நாலு வீட்ல பத்துப் பாத்திரம் தேய்ச்சு வயித்தைக் கழுவுறோம். ஆனா வெளியிலே படற கஷ்டம் எல்லாமே




வீட்டுக்குள்ளே போயிட்டா மாறிடும்மா. எங்க வீட்டுல பணம்தான் இல்லையே தவிர அன்பு நிறைஞ்சு இருக்கு. இப்படியொரு புருஷன் கிடைக்க நான் கொடுத்து வைச்சிருக்கணும்.

"ஒரு நாளு சண்டை போட்டதும் இல்லை, சீ போன்னு சொன்னதும் இல்லை. அத்தனை நல்ல மனுஷன்!" மனைவி மேல் பாசம் கொண்ட மனிதர்களும் உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஏன் அம்மாவிற்கு டைபாய்டு காய்ச்சல் வந்தபோது அப்பா செய்யாத பணிவிடையா? அம்மா சத்யா போல் இன்னும் எத்தனையோ பெண்கள், கணவனின் அன்பை பரிபூரணமாய் அனுபவிக்கும் தகுதி கொண்டவர்கள் என் போன்ற சிலருக்குத் தான். அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை என்று வருந்தினாள் நளினா.



## 16



காற்றைப் போல காதல் எல்லா கதவுகளையும் அடைத்தாலும், சுவாசத்தால் நுழைந்து விடும். அது கால நேரமோ, இடம் பொருளோ பார்ப்பதில்லை. எல்லோர் வாழ்விலும் ஒரு முதல் காதல் உண்டு. முதல் காதலும் முதல் முத்தமும் வாழ்வு முடியும் வரை நினைவு இருக்கும் என்பார்கள்.

அது நூறு சதவிகித உண்மை. நளினா தன் முதல் காதலை அறியாதவள் மிதுனுடனான அவளின் வாழ்வில் அதை அனுபவிக்கத் துடித்தவள். ஆனால் முடியாமல் இன்றளவும் மனதளவிலேயே நினைப்பவள். இரவு

முழுவதும் அவன் அணைப்பில் வெற்றுடலாய் இருப்பாளே தவிர மனம் லயித்து இருக்கும் உறவிற்குத் தான் அவள் வாழ்வில் இடமேயில்லையே.

ஊரிலிருந்து வந்த மிதுன் வேறு எந்தக் காரணத்தையும் சொல்லவில்லை. ஆனால் அவன் முகம் மட்டும் தீவிரமாக எதையோ சிந்தித்துக் கொண்டே இருந்தது. நளினா அவனையே கூர்ந்து கவனித்தாள். இவனால் மட்டும் எப்படி ரொட்டீனாய் செயல்பட முடிகிறது. இயந்திரம் அலுத்தாலும் கூட, மனம் பிறழாமல் ச்சே... என்ன வாழ்க்கை இது?

ஏதோ கட்டளையிட்டாற் போல, சுவிட்ச் போட்டதும் நகருதல் போல இவனால் மட்டும் எப்படி முடிகிறதோ?

"என்னங்க?" தோசையைப் பரிமாறியபடியே பேச்சைத் துவங்கினாள்."

"என்னவாம்?" டையை அட்ஜெஸ்ட் செய்து கொண்டே அமர்ந்தான் மிதுன்.

"நிதிலாவோட கல்யாணத்திற்கு இன்னும் பத்து நாள் தான் இருக்கு ஒரு வாரத்திற்கு முன்னாடியே வரச் சொல்லி பேசினா?"

"ம்..." அவளுக்கு எரிச்சலாய் வந்தது. இந்த ஒற்றைச் சொல்லைத் தவிர வேறொன்றும் அவனிற்குத் தெரியாதோ என்ற கேள்வி நளினாவின் முன் எழுந்தது.

"ஸ்வீட் இந்தாங்க" தனக்கு முன்னால் நீட்டப்பட்ட குலாப் ஜாமூனை ருசி பார்த்தான் "நல்லாயிருக்கா?"

"ம்..."

"எதுக்கு ஸ்வீட் கேட்க மாட்டீங்களா?"



"ப்ளீஸ் நளினா உங்கூட வார்த்தை விளையாட்டு விளையாட எனக்கு நேரமில்லை. நமக்குக் கல்யாணமாகி இத்தனை நாளாச்சு இன்னும் பொறுப்பு வரலை, வீட்டிலே சும்மாவே உட்கார்ந்துகிட்டு இருந்தா இப்படி தேவை இல்லாததுதான் தோனும். போ போய் இன்னொரு தோசையைக் கொண்டு வா, எனக்கு நேரமாயிடுச்சி. அவனவன் ஆயிரத்தெட்டு பிரச்சனையோட வர்றான். உங்களுக்கு கிண்டலா போச்சு."

நளினா மேற்கொண்டு எதும் பேசாமல் தோசையைக் கொண்டு வந்தாள். அவன் கிளம்பிவிட அவள் கண்கள் குளமாயின. போனவாரம் இந்த புடவை வாங்கக்கூட காசு தந்தானே, அவ்வளவு ஏன்? நேற்றிரவு கூட அவன் அணைப்பில் இருந்து கொண்டு தன் பிறந்த நாள் பற்றி பேசியது நினைவிற்கு வந்தது.

புதுப் புடவை கட்டி, வழக்கத்திற்கு மாறாய் சற்று அதிகமான ஒப்பனையுடன் தலை நிறைய பூவும் மனம் நிறைய அவனையும் நிரப்பிக் கொண்டு நின்றாள். மிதுனோ மனைவியின் முகமலர்ச்சி, அலங்காரம் என எதையும் கண்டும் காணாதது போல இருந்தும் குதர்க்கமாய் பேசி எரிந்து விழுந்ததும் அவளை சங்கடத்தில் ஆழ்த்தின. அவன் பிறந்த நாள் வாழ்த்து சொல்லுவான். நீ ரொம்பவும் அழகு என்று கூறி முத்தமிடுவான் என்றெல்லாம் எண்ணியிருந்தவளுக்கு எல்லாம் தலைகீழாய்ப் போகவே அழுகை மண்டியிட்டது.

பசிக்கு அழும் பிள்ளையைப் போல கதறியது தொலைபேசி. வேண்டா வெறுப்பாய் எடுத்தாள்.

"மெனி மோர் ஹேப்பி ரிட்டர்ன்ஸ்" சிவமணியின் குரல் ஒலித்தது.

''என் பிறந்த நாள் உங்களுக்கு எப்படித் தெரியும் சிவா?''

''உண்மையான அன்பு எல்லாமும் உணர வைக்கும் தேவி.''

''நன்றி சிவா -''

''நான் உங்களை ஒரு சிறியப் பரிசோடு பார்க்க வருவேன் தேவி.''

''இத்தனை நாள் ஏக்கம் நிறைந்த மனதிற்கு இந்த அன்பு ஆறுதலாய் இருந்தது. தன் நலன்களைப் பற்றியும் அறிந்து கொள்ள ஒரு ஜீவன் இருக்கிறது என்ற எண்ணம் மேலோங்கியது.''

*

தாலி கட்டிய கணவன் வெறும் உடல் பசிக்காக மட்டும் தொடரும் பந்தம் எந்தவித பரஸ்பர உரிமையோ, பேச்சோ இல்லாமல் என்ன குடும்ப வாழ்வு இது அவளுக்கு அலுத்துப் போனது.

மனம் சிவமணியையும், மிதுனையும் ஒப்பிட்டுப் பார்த்தது. தொழில் என்னும் முறையில் இருவருமே ஒப்வில்லாதவர்கள்தான். ஆனால், சிவமணியால் மட்டும் எப்படி மற்றதையும் நினைவு கூற முடிகிறது. அவன் கூறியது போல் உண்மையான அன்பு தான் காரணமோ!

அப்படியானால் மிதுனுக்கு என் மேல் உண்மையான அன்பு இல்லையா? எந்த ஒரு முடிவிற்கும் வர முடியாமல் தவித்தாள் நளினா.

நளினா செங்கல்பட்டை நோக்கிப் பயணம் செய்து கொண்டு இருந்தாள். வழக்கம் போல் தனிப் பிரயாணம் தான். நிதிலாவின் திருமணத்திற்குப் புறப்படும் அன்று பெங்களூரில் உள்ள ஜி.எம். தெய்வ சகாயத்தின் உடல்நிலை சரியில்லாததால் உடனே வருமாறு செய்தி வர மிதுன் பறந்து விட்டான்.



வழக்கம் போல் அட்டையாய் பின்பற்றி வந்தது அத் தனிமை. சில நேரம் யோசித்தால் மனிதர்கள் பிறப்பதும் தனிமையில்தான். ஒரு ஆண் தன் சோகத்தை, சந்தோஷத்தை தாய், மனைவி, சகோதரி என்ற உறவுகளோடு பகிர்ந்து கொண்டு தனிமையை விரட்டி விடுகிறான். ஆனால் பெண் ஜென்மம் பிறந்த வீட்டு உறவுகளை மறந்து புகுந்த வீட்டிற்குப் புகும்போதும் தனித் தீவாய் நிற்கிறாள்.

தன் கவலைகளை, மனவேதனைகளைத் தனியாகவே கழிக்கிறாள். ஒரு உயிர் சுமக்கும், வலியையும் தனிமையில்தான் அனுபவிக்கிறாள். பின் இறுதி ஊர்வலத்தின் போதும் தனிமையே துணையாய்.

ஆனால் இடைப்பட்ட காலங்களில் வெவ்வேறு உறவுகளோடு பிணைகிறாள். அதேதான் நளினாவின் நிலையும். எந்நேரமும் வாழ்க்கை எனும் குளிர் காட்டில் இருள் என்னும் தனிமைப் போர்வையைப் போர்த்திக் கொண்டு இருக்க வேண்டும் என்பதுதான் அவளின் எழுதாத விதி போலும்.

எண்ணங்கள் சிறகாய் விரிந்து பறந்து கூடு திரும்பும் பறவையென மீண்டும் சிவமணியிடமே வந்தது. அன்றைய தினம் மாலை அவன் கையில் ஒரு பரிசுப் பொருளோடு வந்து நின்றான். அப்போதுதான் கோவிலுக்கு சென்று விட்டு வந்திருந்தாள் நளினா.

சிவமணியைக் கண்டு மலர்ந்த முகத்தின் ஓரம் இருந்த வேதனையையும் கண்டு பிடித்து விட்டு, ஏன் முகம் ஒரு மாதிரி இருக்கு தேவி?

''மனசு சரியில்லை சிவா?''

''என்னாச்சு?''

அவள் காலையில் கணவனுடன் நடந்த வாக்கு வாதத்தைக் கூறினாள்.

''சரி விடுங்க அவருக்கு என்ன டென்ஷனோ... ஏதோ... பார்த்டே அதுவுமா இப்படித்தான் மூஞ்சியைத் தூக்கி வைச்சிக்கிறதா?'' போய் ப்ரெஷ்ஷாயிட்டு வாங்களேன் ப்ளீஸ்.''

அவனின் வார்த்தையை மறுக்க மனமில்லாமல் எழுந்து அறைக்குச் சென்றாள். பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு வெளியே வந்தவளைக் கண்ட பிறகு நிஜமாகவே புருவம் தூக்கினான் சிவமணி.

''உண்மையிலேயே நீங்க ரொம்பவும் அழகு தேவி.'' சிவாவின் கண்களில் ஏதோ இனம்* பார்க்க முடியாத உணர்வு. இது என்னுடைய பிறந்த நாள் பரிசு. அவன் நீட்டிய பார்சலைப் பிரித்தாள்.

கருநீல டிஷ்யூ காகிதத்தை மேலுறையாய் கொண்டு இருந்தது அது. அதன் உள்ளே வெள்ளைச் சட்டத்திற்கு நடுவில் அவளின் உயிரோவியம், புன்னகையும் வியப்பும் ஒரு சேர ஓடியது நளினாவினுள். அதனடியில், ஸாட்டின் பட்டுத் துணியில், மனம் என்னும் தீயில் எரியும் என் தேவிக்கு, உன் வடுக்களுக்கு ஆதரவாய் அன்பும், ஏங்கித் தவிக்கும் தோளும் என்றுமே உன் வசம் தேவி பக்தன் சிவமணி என்று எழுதியிருந்தது.

நளினாவின் கண்களில் கண்ணீர். அதிக சந்தோஷம், துக்கம் என இரண்டின் பிரதிபலிப்புமே அழுகையாகத்தான் இருக்க முடியும். சிரிப்பு எப்படி மனிதனுக்கு கடவுள் அளித்த வரப் பிரசாதமோ அதே போல் அழுகையும் புண்களுக்கு வடிகால்தானே. எதையும் எதிர்பாராமல் தன் மேல் காட்டப்படும் முழுமையான அன்பில் திளைத்தவள் அதன் வெளிப்பாடாய் விம்மி விம்மி அழுதாள்.




''இப்ப என்னாச்சு அழறீங்க தேவி...?'' பதறினான் சிவமணி.

ஒரே விநாடிதான். தன் தயக்கங்கள் அனைத்தையும் உடைத்தெறிந்து விட்டு ஓடோடிச் சென்று அவனைக் கட்டிக் கொண்டாள் நளினா, அவளின் மொத்த பாரமும் அவன் மேல்.


உணர்வுகளை அடக்க இயலாமல் அவள் செய்த அச்செயலில் கலங்கித்தான் போனான் சிவமணி. தோளில் சாய்ந்த அவள் உடல் அழுகையில் குலுங்கியது. விம்மல்கள் காதுகளைக் கலவரப்படுத்தியது. அவளை சமாதானப் படுத்த வேண்டி முதுகில் ஆதரவாய் வருடினான். ''ப்ளீஸ் தேவி! கண்ட்ரோல் யுவர் செல்ஃப் ப்ளீஸ்...''

சில நிமிடங்களில் சுயநிலையை அடைந்த நளினா சிவமணியிடமிருந்து விலகினாள். கண் மூடித்தனமாய் அவள் செய்த செயல் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்க இயலாதபடி வெட்கமடைய நளினா. தனியே செய்வதறியாது நின்ற சிவமணியைக் கண்ட நளினாவின் ஓவியம் சிரித்தது.

தோழிக்குப் பிறந்த நாள் வாழ்த்து கூற வந்த கீதா நடந்த அத்தனையும் பார்த்து, இமைக்காமல் நின்றவள் தான் வந்த சுவடே தெரியாமல் அவள் நகர்ந்து விட்டாள்.



## 17



அன்றைய சம்பவத்தின் நிழல் இன்றும் படிந்திருந்தது. நளினாவினுள், நானா எப்படி நடந்து கொண்டேன் என்று

எண்ணுகையில் தன் மீதே வெறுப்பு படர்ந்தது. மிதுனைத் தவிர வேறு உலகமில்லை. கணவன் எத்தனையோ உதா சீனப்படுத்தி இருந்தாலும் அவன் காலடியே சொர்க்கம் என்றிருந்தாளே!

அவள் ஏன் சிவமணியைச் சந்திக்க வேண்டும். அவ னின் செய்கையில் மனம் லயித்து ஒரு சஞ்சலம் தோன்ற வேண்டும். இவை அனைத்திற்கும், சிகரம் வைத்தாற் போல் அந்த நிகழ்வு. என்னைப் பற்றி எத்தனை தரக் குறைவாய் எண்ணியிருப்பான் சிவமணி.

ஒரு அந்நியனிடம் என் மனதை இழக்க இருந்தேனே, எத்தனை பெரிய தவறு. தன்னைத் தானே நொந்து கொண்டாள். அதற்குப் பிறகு நான்கு நாட்களாக அவளும் சிவமணிக்கு தொடர்பு கொள்ளவில்லை. அவனும் பேச வில்லை, தன் அவசர புத்தியினால் அன்பான உள்ளத்தை இழந்து விட்டேன் என்ற வருத்தமே அவளைச் சூழ்ந்து இருந்தது.

நடுவில் நிதிலாவின் திருமணம் வந்துவிட, நளினா விற்கு ஒரு வகையில் நிம்மதியாகவே இருந்தது. இந்தப் பயணத்தின் மூலம் சிவமணியைத் தவிர்க்கலாம். வீட்டில் பேச முடியாத மிதுன் விடுப்பு போடுவதால் தன் மன ஓட் டங்களை அவனுக்குப் புரிய வைத்து விடலாம். அவரின் அன்பு ஒன்றுதான் என் மனதில் அலை பாய்தலுக்கு சிறந்த தீர்வாய் இருக்க முடியும்.

என்ற நினைப்பு அவளுள் ஆழமாய் ஊன்றி விட்டது. ஆனாலும் அதிலும் பெரிய தடைக் கல்லாய் வந்ததென இருந்தது. அவன் வெளியூர் செல்ல வேண்டி வந்த செய்தியைக் கண்டதும் மனமொடிந்து போனாள்.

''தங்கச்சியோட கல்யாணத்தை விட, உங்களுக்கு வேலை தான் முக்கியமா?'' என்றுமே இல்லாத வேகத் துடன் அவள் குரலுயர்த்தி, கேட்டதும் மிதுன் மிரட்சி கலந்த ஆச்சரியத்தோடு திரும்பினான்.



''எனக்கு அவசர வேலையிருக்கு நளினா என் எம்.டி. யோட ஒய்ஃப் இறந்திட்டாங்க. நான் போய் விசாரிக்க வேண்டாமா?''

''என்னைக்குத்தான் உங்களுக்கு வேலை இல்லாமல் இருந்தது. கட்டின பொண்டாட்டியை நல்லா வைச்சிக்கத் தெரியலை. யார் மனைவி போனா உங்களுக்கு என்ன? சொந்த தங்கையோட கல்யாணத்திற்கு கூட வரலைன்னா யெப்படி?''

''இதோ பார் நளினா இது என் தங்கையோட கல் யாணம். உன்னை விட எனக்குப் பொறுப்பு அதிகம்தான் புரியுதா, தவிரவும், நான் ஒண்ணும் உன்னை சாப்பாட் டுக்கு வழியில்லாமயோ உடுத்த துணியில்லாமையோ விட்டு வைக்கலை.''

''ஒஹோ... அப்போ விதவிதமா உடுத்தறதும், வகை வகையா சாப்பிடறதும் மட்டும்தான் வாழ்க்கையா? என் மனசிலும் ஆசை பாசமிதெல்லாம் இருக்குமின்னு என்னைக்காவது நினைச்சிப் பார்த்து இருக்கீங்களா? எப்பவுமே தொழில் தானே உங்க இலக்கு.''

''இதோ பார் நளினா இப்போ உன்னோட வாக்குவாதம் செய்ய எனக்கு நேரமில்லை. ஆறு மணிக்கு டிரெய்ன் நீ முதல்ல கிளம்பிப் போ என் ட்ரெஸ்ஸை பேக் பண்ணிடு, நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வந்திடறேன்!'' முகத் திலடித்தாற்போல் வந்த பதிலில் சுருண்டாள் நளினா.

மிதுன் நீங்க என்னை வெறுத்து ஒதுக்க ஒதுக்க நான் எங்கே வழி தவறிப் போய் விடுவேனோ என்று தோன்று கிறதே. அன்பு, பாசம் எனும் அலங்கார வார்த்தைகளுள்,

புதையுண்டு சுயத்தை தொலைத்து விடாதே! என்று எங்கோ படித்தது அவளின் நினைவுக்கு வந்தது.

மிதுனிடம் பேச இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமையும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்துப் போனது. திடீரென ஒரு யோசனை உதித்தது. நேரிடையாகப் பேச மறுக்கும் விஷயங்களைக் கூட. லெட்டரில் தெளிவாய் எழுதிவிட முடியும். அதற்கு இதுதான் சிறந்த வழி என முடிவு செய்து தன் உணர்வுகளைக் கொட்டினாள்.

*அன்பு கணவர் மிதுனுக்கு உங்கள் மனைவி நளினா எழுதுவது. முதலில் அப்படி அழைப்பதே தவறோ என்று கூட எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் நமக்கு கல்யாணம் முடிந்த இத்தனை மாதங்களில் அன்பு என்ற உணர்வு ஒரு பெயரளவிற்கு கூட நமக்கு இல்லையே?*

*நன்றாக யோசித்துப் பாருங்கள். கணவன் மனைவிக்குள் உண்டான ஊடல், சின்ன சந்தோஷங்கள், சீண்டல்கள், கொஞ்சல் என எந்தவொரு உணர்வையுமே என்னிடம் நீங்கள் இதுவரையில் காட்டியதில்லை. இதற்கு காரணம் என்னவாயிருக்கும் என்று நானும் பலமுறை யோசித்ததுண்டு.*

*நான் அறிந்து எந்தத் தவறும் தெரியவில்லையே! உங்களை உயிராய் நேசிப்பது நிஜம் மிதுன். இதை உங்களுக்கு உணர்த்த பலமுறை முயற்சித்து உள்ளேன். ஆனால் அதற்கான சந்தர்ப்பத்தை நீங்கள் எனக்குத் தரவில்லை, உங்களின் பாராமுகம் தேவையில்லாத பயத்தை தோற்றுவிக்கிறது.*

*சொன்னால் நம்ப மாட்டீர்கள் மிதுன். நீங்கள் என்னைப் பெண் பார்த்துச் சென்ற நாள் முதல் உங்கள் நினைவிலேயே உழண்டு ஒவ்வொரு*



*தினமும் நாம் பேசப் போகும் விஷயங்களை நூறு முறை யோசித்து ஒத்திகைப் பார்த்து எல்லாமே மடிந்து போனாற் போல் நம் முதலிரவில் உணர்ந்தேன்.*

*வெறும் பசிக்காக அதுவும் உடல் பசிக்காக மட்டும்தான் நீங்கள் என்னை நாடுகிறீர்கள். அதுவும் இயந்திரத்தனமாய் இது எத்தனைக் கொடுமையான விஷயம் தெரியுமா? உடலுக்குப் பின் ஒரு மனது அதுவும் உங்களையே ஏங்கித் தவிக்கும் ஒரு மனது இருப்பதைப் பற்றி நீங்கள் இன்னமும் புரிந்து கொள்ளாததுதான் என்னை வாட்டுகிறது.*

*பட்டுப் புடவை, நகை, சகல வசதிகளோடு பெரிய வீடு இது மட்டுமே வாழ்க்கை இல்லை? பரஸ்பர அன்பு, நெருக்கம் இதுதானே தாம்பத்தியத்தின் அஸ்திவாரம். இதிலே ஒண்ணாவது நமக்குள்ளே இருக்கா சொல்லுங்க.*

*தொழில் முக்கியம்தான். பணம் அவசியம்தான். ஆனா நீங்க யாருக்காக சம்பாதிக்கிறீங்க? அம்மா, அப்பா, தங்கை மனைவின்னு எல்லா உறவுகளின் உணர்வுகளையும் புறக்கணிச்சிட்டு, நீங்க சாதிக்கிறது பூஜ்யத்திற்கு சமம் மிதுன்.*

*ஒரே கூட்டுக்குள்ளே மூழ்கிடாம ஓடையாய் சுருங்காம வெளி உலகத்தைப் பாருங்க, எந்தவொரு சேமிப்பும் இல்லாமல், மழைக்கும் வெயிலுக்கும் கூட ஒதுங்க இடமில்லாதவங்ககூட எத்தனை இன்பமா வாழ்றாங்கன்னு புரியும். இதுநாள் வரை நீங்க எத்தனை சுகங்களை இழந்து இருக்கீங்கன்னு உங்களுக்குத் தெரியும்.*

*மிதுன் பெண்களைப் பற்றி உங்கள் மனதில் என்ன நினைப்பு இருக்குமோ எனக்குத் தெரியவில்லை. உங்க வேலையில் நிறையக் கஷ்டங்கள்*

இருக்கத்தான் செய்யும். அதே நேரம் எங்களையும் புரிந்து கொள்ளுங்கள். வீட்டில் சும்மா வெட்டியாக இருக்கிறாய் என்கிறீர்களே? என்னைப் போல் ஒரு இரண்டு நாள் வீட்டுக்குள்ளேயே சும்மா இருந்து பாருங்கள்.

உங்களுக்கே அலுப்புத் தட்டிடும். என் ரசனைகள் விருப்பங்கள் லட்சியங்கள் எல்லாமே அடுப்பாங் கரையில் முடங்கும்போது ஏற்படும் வலி புரியும். கடைசி முயற்சியாய் இக்கடிதத்தில் என் மனக் கவலைகளை இதில் கொட்டி இருக்கிறேன்.

இனியாவது உணர்ந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு,
உங்கள் அன்பைப் பெறத் துடிக்கும்
மனைவி நளினா

கடிதத்தை எழுதி விட்டாள். ஆனால் அதை அவ னிடம் சேர்ப்பிக்கும் விதம்தான் தெரியவில்லை. இறுதி யில் அவன் பெட்டிக்குள் அடுக்கி வைத்திருந்த துணி களுக்கு இடையில் செருகி வைத்து நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

பின்னோக்கிப் பறந்த எண்ணங்களை கடிவாளமிட்ட குதிரையாய் நிறுத்தினாள். மனம் ஒரு குரங்கு என்பது உண்மைதான் நினைவுகள் என்னும் மரங்களைத் தாவிக் குதித்துக் கொண்டு இருந்த அதை அடக்க முடியாமல் தவித்தாள் நளினா.

அருகில் சிவமணி பிறந்த நாள் பரிசாய் அளித்த ஓவி யத்துடன் 'அன்பு' என்ற தலைப்பில் உள்ள புத்தகத்தைப் பிரித்து அணிந்துரையைப் படித்தாள். புத்தகம் எழுதிய



வரின் பெயர், விலை விவரம் போன்ற சிறு குறிப்பு அவற்றைத் தாண்டி அன்பு நதி என்னும் தலைப்பின் கீழ்...!

அன்பு ஒரு மகா சக்தி அது தூய்மையானதாய் இருக்கும் போது உலகத்தைப் புரட்டும் அளவிற்கு வலிமை தருகிறது. கசப்பான உலகத்திலே உண்மையான ஒரு துளி அன்பு, பாலைவனத்தில் ஒரு சமுத்திரம் போன்று குளிர்ச்சியாகவே இருக்கும். அன்பின் கண்ணீர் துன்பம் தராது. அவை முத்துக்களாக மாறி விடும்.


அதே போல் மனக் குவியல்கள் என்ற தலைப்பின் கீழ் இருந்த வரிகள் நெஞ்சைத் தொடுவது போல் இருந்தது. பிரிக்க முடியாத உணர்வுகளில் அடையாளம் காண இயலாதபடி மனம் பிரமைப்பட்டு நிற்கிறது. காரண காரியங்களை காற்று ஆராய்வதில்லை. கவிதைகளில் சுழன்ற மனம் கற்பனையில் விழைந்த மனம் நிஜத்தை சந்திக்க பயம் கொள்கிறது.

சுட்டெரிக்கும் சூரியனாய் சுடும் நிஜங்கள் காற்றில் மிதந்து வரும் உன் சுவாசம் கூட என்னை அடையாளம் கண்டு விடுகிறது. குளிர்விக்கும் காற்றாய் நீ குளிர் நிலவாய் நான் இரண்டு பேரும் இணையும் நேரம் பௌர்ணமியென ஜொலிக்கிறேன் நான்.

மனக்கடலில் அலை அலையாய் எண்களின் சீற்றம் என்னுள் கரை தாண்டிய சுனாமி என் இதயச் சுவர்களை உடைத்துக் கொண்டு வெந்நீர் குழம்பென வெளியேறு கிறது. நீ இல்லாத நாட்களில், தவிப்பென உணரும் தருணங்களில் தணியாத சூடு உடலெங்கும். பொங்கி விட நதிநீரின் பிரவாகம் என் விழிகளில்.

போராட்டம் நிறைந்த வாழ்க்கையில் பொக்கிஷமென நீ கிடைத்தாய் போற்றிப் பாதுகாக்க பேழையாய் என் இதயம் பட்டுத் துணியில் பொத்தி வைத்தேன்... உன் நினைவுகளை, பட்டுப் பூச்சியாய் சிறகடித்தது என் மனம்!

வார்த்தைகள் ஒவ்வொன்றும் மனதைத் தொடுவன வாக இருந்தன. நீண்ட 'பெருமூச்சு விட்டபடியே தன் புகுந்த வீட்டில் நடந்து கொள்ள வேண்டியவைகளை அசை போட்டாள்.



# 18

பெங்களூர் ஏஸியின் ஜில்லிப்போடு குளிர்ந்த காற்று உடலைத் தழுவ தன் முன்பு இருந்த தெய்வசகாயத்தின் உருவத்தை அவனால் நம்பவே முடியவில்லை? இந்த ஆறு வருடங்களில் கம்பீரமாகவும், மிடுக்கோடும் கண்ட அவரை இத்தனை சோர்ந்து தளர்வாய் கண்டதும் மிதுன் அரண்டே போனான்.

''என்ன ஸார் இது உடம்புக்கு ஏதும் முடியலையா?''

ஒரு வாரம் போல் மழிக்கப்படாத முட்கள் தாடையில் பரவியிருக்க, கவலை அப்பிய குரலோடு உடலிற்கு எந்த கேடும் இல்லை மனம் தான் விம்மலோடு வெளிவந்த வார்த்தைகள் அவர் அழுகைக்குத் தயாரானதை உணர்த்தின.

''மிதுன் நான் G.M. பொறுப்பில் இருந்து விலகிட் டேன். அந்தப் பதவிக்கு உங்களைத் தான் சிபாரிசு செய்து இருக்கேன்.''

''ஏன் சார் இந்தத் திடீர் முடிவு. உங்களை மாதிரி ஒரு கடுமையான உழைப்பாளியிடமிருந்து இதை நான் எதிர்பார்க்கவில்லை!''

''மிதுன் உங்களுடைய உழைப்பையும், டெடிகேஷனை யும் பார்க்கும் போது என் இளைய வயதில் என்னையே



பார்ப்பது போல் இருக்கிறது. அதனாலேயே யென்னவோ என் மனதில் அரித்துக் கொண்டிருக்கும் விஷயத்தை சொல்ல விரும்புகிறேன்.''

''சொல்லுங்க ஸார். மனதின் புகை மூட்டத்தை விலக் குங்கள் கவலை மறையும்.''

''நானும் சுபத்ராவும் காதல் திருமணம் செய்து கொண்ட வர்கள். எங்களிடையே அன்பு மட்டும் வற்றாத சமுத்திர மாய் இருக்க, இருபக்க உறவுகளும் பிரிந்தன. நான் பணத்தைத் தேடி ஓடும் வரை எல்லாம் நல்லபடியாகவே இருந்தது.''

''சுபத்ராவுடைய கர்ப்பப்பையில் ஒரு கட்டி இருப்ப தாகவும், அதனால் அவளுடைய கர்ப்பப் பையையே அகற்ற வேண்டியிருப்பதாகவும் ஆபரேஷன் செலவிற்கு ஒருலட்ச ரூபாய் செலவாகும் என்று டாக்டர்கள் கூறி னார்கள்.''

''நானும் வெட்கத்தை விட்டு என் ப்ரெண்ட்ஸ், உறவுகள்னு எல்லார்கிட்டேயும் கெஞ்சிப் பார்த்தேன். எல்லோரும் கையை விரிச்சிட்டாங்க. கடைசியிலே வேற வழியில்லாம வட்டிக்கு கடன் வாங்கி நான் பட்ட அவமானம் கொஞ்ச நஞ்சமில்லை எப்படியோ சுபத்ரா காப்பாற்றப்பட்டாள்.''

''அதோடு என் சுபத்ராவிற்கு எல்லாமே நானாய் இருக்கணுமின்னு விரும்பினேன். வாழ்க்கையிலே பணத்தி னால நாங்கபட்ட அவமானத்தையும், துடைச்சே தீர ணும்ங்கிற முடிவுக்கு நான் வந்திட்டேன். என் சுபத்ராவை ஒரு மகாராணி மாதிரி நான் வைச்சிக்கணுமின்னு வெறித் தனமா உழைச்சேன்.''

''இரவு பகலாக கிடைக்கிற வேலையை செய்து விட்டு படிப்பை தொடர்ந்தேன். அப்புறம் தான் இந்த கன்சனில்

சேல்ஸ் ரெப் வேலை கிடைத்தது. அதிலிருந்து G.M. பதவிக்கு உயர்ந்து இருக்கேன்னா அதற்கு எத்தனை உழைப்பு தேவைப்பட்டு இருக்குமின்னு நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை!'' மிதுன் பிரமிப்புடன் தலையசைத்தான்.

''ஒரு கணவனா 'அவளுக்கு செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் முழுமையா செய்திட்டதா நான் நினைச்சேன், ஆனா வெறும் பட்டுப்புடவைகளும், வைரமும், தங்கமும், கட்டுக்கட்டா பணமும் மட்டும் சுகத்தை தந்திடாதுன்னு நான் அப்போ உணரலை.''

''சுபத்ரா என் மனம் கோணாமல் ஒரு குழந்தையைப் போல் கவனிச்சிக்கிட்டா. ஆனா அவளுடைய மனசு முழுக்க எத்தனையோ ஏக்கங்களை சுமந்துகிட்டு புன்னகையோட வாழ்ந்திருந்ததை நான் உணர்ந்த நேரம் அவ உயிரோடு இல்லை.'' அவர் அடக்கமாட்டாமல் அழுதார்.

''ப்ளீஸ் ஸார் கண்ட்ரோல் யுவர் செல்ப்...!'' அவரின் கைகளை ஆறுதலாகப் பற்றிக் கொண்டான் மிதுன்.

''ஸார் இப்பத்தான் நீங்க வேலையில் முறுழுமனதா ஈடுபட்டு உங்க காயங்களை ஆற்ற வேணும்?''

''நோ... மிதுன் இங்கே கால நேரம் பார்க்காமல் நான் யாருக்காக உழைக்கப் போகிறேன். என் சுபத்ரா இருந்த போதுதான் அவளுடைய ஏக்கங்களை நான் உணரவில்லை. இனியும் அப்படியிருக்க நான் தயாராக இல்லை, சுபத்ரா என்னை விட்டுப் போனதாய் நான் எண்ணவில்லை, அவள் இன்னும் என்னோடு தான் இருக்கா, எஞ்சிய நாட்களை என் சுபத்ராவின் ஆன்மாவோடு கழிச்சிடலாம்னு நினைக்கிறேன்.''

''ஸார்....?''



''மிதுன் நீங்க நல்ல உழைப்பாளி என் பொறுப்பை உங்களால் சுலபமாய் சுமக்க முடியும். அது போல் உங்கள் உறவுகளையும் நேசிங்க. மனைவி என்பது ஒரு அற்புதமான பொக்கிஷம். எந்த உறவிற்கும் இல்லாத ஒரு நெருக்கம், ஈர்ப்பு எல்லாமே கணவன் மனைவி உறவிற்கு உண்டு. நிலையில்லா பணத்தை நம்பி, நிலையான இல்லறத்தை தொலைத்து விட்டு என்னைப் போல் தனிமரமாகி விடாதீர்கள்.''


தெய்வசகாயம் கூறிய ஒவ்வொரு வார்த்தைகளும் மிதுனின் நெஞ்சில் அலையாய் மோதின. ஊருக்கு கிளம்பிய அன்று அழுகையோடு நளினா பேசியது நினைவிற்கு வந்தது. தெய்வசகாயம் கூறியது போல் நானும் நளினாவிற்கு நல்ல கணவனாய் நடந்து கொள்ளவில்லையோ என்ற எண்ணம் வண்டாய் குடைந்தது. சாப்பிடக் கூடப் பிடிக்கவில்லை.

எண்ணங்கள் மனதினுள் பெரிதாய் கட்டிடம் எழுப்ப எங்கேயாவது காலார நடந்து விட்டு வருவோம் என்று உடைக்காக பெட்டியை அணுகினான். உடைகளுக்கு நடுவில் வெள்ளை நிறத்திலான கவர் அதில், நளினாவின் குண்டு குண்டான கையெழுத்து அவனைப் பார்த்துச் சிரித்தது.


படித்து முடித்ததும் பெரும் பாறாங்கல்லை தலையில் தூக்கி வைத்தாற் போல் இருந்தது மிதுனுக்கு. பட்டு புடவை, நகைகள் மட்டும் மனைவியின் அன்பை பூரணப் படுத்தாது என்று தெய்வசகாயம் சொன்னது நினைவிலாடியது. நளினா என்னையும் அறியாமல் நான் உன்னை இத்தனை கஷ்டப்படுத்தி இருக்கிறேனே. உன்மேல் நான் உண்மையான அன்போடுதான் இருக்கிறேன்.

ஆனால் அதை வெளிப்படுத்தத் தவறி விட்டேன். இப்போதும் காலம் கடந்து போய் விடவில்லை என்று இதயம் ஒருமுறை இடித்துரைத்தது.

நேரம் இரவு ஒன்பதைத் தாண்டி இருந்தது. டிராவல்ஸ்க்கும் போன் செய்தான் நாளை மதியம் தான் ப்ளைட் என்று கூறிட தவித்துதான் போனான்.



# 19



விசாலமான ஹால் சுற்றிலும் உறவுகளின் கவலை தோய்ந்த முகங்கள். நீட்டிய நிலையில் முகத்திலும் நெற்றியிலும் மஞ்சள் குங்குமத்தோடு மல்லாந்து படுத்தபடி இருந்தாள் நளினா. அவள் தலைமாட்டில் ஊதுபத்தியும், விளக்கும் எரிந்து கொண்டு இருக்க, மலர் மாலைகள் அவளை சூழ்ந்து இருந்தன.

மிதுன் அழுது கொண்டு... படுக்கையில் இருந்து அலறியபடி எழுந்தான் ச்சே! எத்தனை மோசமான கனவு உடல் முழுக்க தெப்பமாய் நனைந்திருந்தது.

அன்றைய மீதி இரவு உறக்கம் இல்லாமலே கழிய காலையில், சீக்கிரம் எழுந்தவன் டிக்கெட்டை ஒருமுறை கன்பார்ம் செய்து விட்டு, வெளியே வந்தான். விமானத்திற்கு இன்னும் ஆறு மணி நேரங்கள் இருக்க, நளினாவிற்காக ஏதாவது பொருள் வாங்கலாம் என்ற நினைப்பில் நகைக்கடை ஒன்றினுள் நுழைந்தான் மிதுன்.

தங்கச் சங்கிலியில் முத்து டாலர் பதித்த சங்கிலி அவன் மனதை ஈர்த்தது. இது போல் எப்போதும் வந்து



வாங்காத படியால் என்ன வாங்குவது என்று தீவிர யோசனையில் பார்வையை சுழலவிட்டவனின் கண்களில் வளையல், கம்மல், கொலுசு என் அத்தனை ஷெக்ஷனிலும் பார்வை திருப்தியுராமலே போனது.

பிறகு இறுதியாய் செயினை தேர்வு செய்து கிப்ட் பேக் செய்யச் சொன்னான். கிரெடிட் கார்டு மூலம் பணம் தந்து விட்டு, திரும்பும் போது வெகு உரிமையாய் தோள் மேல் ஒரு கைவிழ வியப்போடு புன்னகைத்தான்.

தன் கல்லூரித் தோழன் கௌரிசங்கர் மனைவியுடன் நிற்க, "எங்கேடா இந்தப் பக்கம்?" என்றான்.

"அதை நான் கேட்கணும் பெங்களூரில் தானே மாலினியோட அம்மா வீடு இருக்கு. ஒரு வாரம் லீவு கிடைச்சது. அப்படியே ஒரு டூர் போகலாம்ன்னா வந்திட்டோம். உன் பர்சேஸ் முடிஞ்சதா? எங்கே உன் மிஸஸ்?"

"நான் அபீஸியலா வந்திருக்கேன் சங்கர். ப்ளைட்டுக்கு இன்னும் ஆறு மணி நேரம் இருக்கு. அதுவரை டைம் ஸ்பெண்ட் பண்ணத்தான் இங்கே வந்தேன்."

"அப்படின்னா நீ கட்டாயம் எங்க வீட்டுக்கு வந்தே ஆகணும்."

"இல்லேடா இன்னொரு நாள்..."

"நோ நோ! உன்னைப் பார்ப்பதே அபூர்வம். இப்பத்தான் ஒண்ணும் வேலையில்லையே, கட்டாயம் நீ வந்துதான் ஆகணும்."

அவர்கள் அழைப்பைத் தட்ட முடியாமல் பார்சலோடு வெளியேறி சென்றான்.

அளவாய் அழகாய் இருந்தது வீடு. மாலதி காபியும் பிஸ்கட்டும் தந்து உபசரித்தாள். "அண்ணா! இதை உங்க மனைவிக்கு தந்து விடுங்கள்."

"என்னம்மா இது?"

''போன மாசம் நாங்க இரண்டு பேரும் ஜெய்ப்பூர் போய் இருந்தோம். அங்கே வளையல் ரொம்ப பிரசித்தம். இரண்டு செட் வாங்கியிருந்தேன். ஒண்ணை அவங்களுக்குத் தந்து விடுங்கள்.''

''ஏண்டா சங்கர் நீயும் ஒரு கம்ப்யூட்டர் இன்ஜினியர் தானே உனக்கு மட்டும் எப்படி ஊர் சுத்த நேரமிருக்குது.''

''மிதுன் வாழ்க்கையிலே பணம் முக்கியம்தான். அதுக்காக அது பின்னாடியே ஓடினாலும் திரும்பி மூச்சு வாங்கி நிற்கும்போது தண்ணி கொடுக்கக் கூட ஆள் இருக்காது. நான் அளவா சம்பாதிக்கிறேன் மகிழ்ச்சியோடு வாழுகிறேன். மாலை 7 மணிக்கு மேலே ஒரு விநாடி கூட ஆபீஸில் இருக்க மாட்டேன். அதற்கு பிறகு, என் குடும்பத்தோட மட்டும்தான் நேரத்தை செலவிடுவேன். எல்லாத்துக்கும் மேலே வருண் இருக்கானே அவன் கூடப் பேசினா உலகமே மறந்து போயிரும்.''

''வருண் யாரு?''

''அடப்பாவி வருண் என் 2 வயது பையன். ஏண்டா குழந்தைக்கு பேர் வைக்கும் போது கூட நீயும் உன் மிஸஸும் கூட வந்தீங்களேடா?''

''ஸாரிடா மறந்திட்டேன்.''

''வருண் அவங்க பாட்டி கூட வெளியே போய் இருக்கான். மாலு அந்த ஆல்பம் கொண்டு வாயேன்.''

மாலதி தன் பெட்டியில் இருந்து வழுவழுப்பான அட்டை அணிந்திருந்த ஆல்பத்தினை தந்தாள். திராட்சை கண்களும், குறும்புத் தனமுமாய் அந்த சிறுவன் மனதைத் கொள்ளையடித்தான். ஒவ்வொரு புகைப்படத்திலும் அந்த அழகான குடும்பத்தின் சந்தோஷமும் நிம்மதியும் பளிச்சிட்டது.

இதுபோல் ஒரு நாளும் நான் இன்பமாய் வாழ்ந்ததில்லை, என்று மனதில் ஏக்கம் பிறந்தது. அளவான




சிரிப்பு பேச்சு என்று அலுவலக விஷயத்தை மட்டுமே வீட்டிலும் கடைபிடித்ததால் என்று சிந்திக்க ஆரம்பித்தான்.


''அப்போ நான் கிளம்பறேன்!'' அவன் விடைபெறவும் கௌரிசங்கர் வாசல் வரை வந்தான். ''மிதுன்! வாழ்க்கையிலே எதுவுமே சுலபமா கிடைக்காது. ஒண்ணை இழந்தாதான் இன்னொன்றைப் பெற முடியும். உனக்குத் தொழில் முக்கியமா குடும்பம் முக்கியமான்னு நீ தாண்டா முடிவு பண்ணனும். படிக்கும் போதும் சரி இப்பவும் சரி வெறித்தனமா பணத்தை தேடி ஓடுறவன் நீ இப்போ மாறியிருந்தா சந்தோஷம் தான்.!?!''

''அப்படியே இருந்தாலும் நீயும் ரிலாக்ஸா வாழப் பழகிக்கோ. நம்மளையே நம்பி வாழற நம்ம குடும்பத்தை விட மற்ற எதுவுமே பெரிசு இல்லைடா. மனைவிங்கிற உறவு மட்டும் தான் நமக்காகவே வாழ்ந்து சாகிறது புரிஞ்சு நடந்துக்கோ மிதுன்.''

நடந்த அத்தனை நிகழ்வுகளும் தான் கடந்து வந்த பாதை தவறென்பதை அவன் நன்றாய் உணர்ந்து விட்டான் இனி அப்படியொரு தவறு நடந்து விடக் கூடாது என்பதில் மிகவும் உறுதியாய் இருந்தான்.



# 20



வாழையும், கமுகுமாய் தோரணமுமாய் விழாக் கோலம் பூண்டிருந்தது அவ்வீடு. வாழையிலையில் சுற்றி மலர் மாலைகள் கனமாய் ஆணியில் தொங்கிட, கல்யாணப் பந்தியின் பரபரப்பு மணம், சந்தனம் பன்னீர்

வாசனை, நாதஸ்வர இசை டேப்பில் வழிய, சின்னச்சின்ன மாக்கோலங்களோடு, பெண்கள் ஆளுக்கொரு வேலையில் பரபரப்பாய் ஈடுபட்டுக் கொண்டிருக்க, மிதுன் ஷூவைக் கழற்றி விட்டு உள்ளே நுழைந்த மிதுனின் கண்ணில் முதலில் நிதிலாதான் பட்டாள்.

பாவாடைச் சட்டையோடு திரிந்த அவளின் உடலில் பட்டுப்புடவை சுற்றியிருக்க, மேனியெங்கும் நகைகள் மினுமினுத்தன. தலை நிறையப் பூவோடும், முகம் நிறையப் புன்னகையோடும் அவளைக் காண மகிழ்ச்சியாக இருந்தது மிதுனுக்கு.

கைகளில் மருதாணியிட்டுக் கொண்டிருந்தவள் அண்ணனைக் கண்டதும் புள்ளி மானைப் போல் துள்ளி வந்தாள்.

''என்னன்னா இது?'' சொந்த தங்கச்சியோட கல்யாணம், ''இப்பத்தான் உனக்கு வர வழி தெரிந்தது இல்லை? என்மேல உனக்கு அக்கறையே இல்லையே?'' செல்லமாய் கோபம் காட்டிய தங்கையின் கன்னத்தில் தட்டினான்.

''அதான் என் சார்பா உன் அண்ணி வந்திட்டாளே?''

''அந்த மட்டில் நீ தப்பிச்சிட்டே!''

''சரி அண்ணியெங்கே?''

''மேலறையில் அம்மாவோட இருக்காங்க?''

''சரி கல்யாணப் பொண்ணு அந்தக் களை முகத்திலே வந்திடுச்சே, ஆமா ஒருவகையில் இது காதல் கல்யாணமின்னு அண்ணி சொன்னா? பரவாயில்லை இந்த விஷயத்திலே என்னைக் காட்டிலும் நீ ரொம்பத் தேறிட்டே?''

''போண்ணா? இப்படியே என்னைக் கிண்டல் பண்ணிட்டே இருந்தியானா அவர்கிட்டே சொல்லிடுவேன்.''

''கல்யாணம் ஆகிற வரையில் நீ என் தங்கைதான், உன்னைக் கிண்டல் செய்யலாம்!''



நிதிலா குழந்தையாய் சிரித்தாள்.

''நித்தி! எனக்கு சூடா ஒரு கப் காபி கொண்டு வா!'' தங்கை அந்தப்பக்கம் நகரவும், எதிர்ப்பட்ட உறவுகளின், புன்னகையையும், உபசரிப்புக் கேள்விகளையும் ஏற்றுக் கொண்டபடி மாடியேறினான்.

அறையில் சன்னமான ஒலியில் பேசுவது கேட்டது.

''ஏம்மா நளினா உனக்கும் மிதுனுக்கும் ஏதாவது பிரச்சனையா?''

தாம்பூலப் பைகளை சரிபார்த்துக் கொண்டு இருந்த நளினா அதெல்லாம் ''இல்லையே அத்தை'' என்றாள். வந்த இரண்டு நாட்களாகவே இந்தப் பொய் முகமூடியைத்தானே போட்டுக் கொண்டிருக்கிறாள். 'உலகமே ஒரு நாடக மேடை அதில் நாமனைவரும் நடிகர்கள்' என்று ஒரு அறிஞர் கூறியது நினைவில் வந்தது.

''பின்னேயென்னம்மா. கூடப்பிறந்த தங்கச்சியோட கல்யாணம் இதுவரைக்கும் அவன் வரலை, சரி ஒரு போனாவது பண்ணக் கூடாதா பாவம் நிதிலா அவ மனசு என்ன பாடுபடும்.''

''அவர் நேத்து நைட் கூட போன் பண்ணினார். நான் தான் உங்ககிட்டே சொல்ல மறந்திட்டேன் அத்தை. போன வேலை முடிஞ்சிட்டதாம். எப்போ வேணு'ன்னாலும் வந்திடறேன்னார். என்னை விட நிதிலாவோட கல்யாணத்திலே அவர்தான் ஆர்வம் காட்டினார்.''

அந்தத் தாயின் முகம் மலர்ந்தது. ''ஏம்மா! அவன் உன்கிட்டே நல்லபடியாத் தானே நடந்துக்கிறான்?''

எதிர்பார்ப்பு மிகுந்த அம்முகத்தை ஏமாற்ற மனம் வரவில்லையெனினும் வேறு வழியின்றி, ''நாங்க இரண்டு

பேரும் ரொம்ப அன்பா குடும்பம் நடத்துறோம் அவர் என்னை கண்ணுங்கருத்துமா கவனிச்சிக்கிறார்.''

''அதெல்லாம் சரிம்மா இன்னும் ஒரு பிள்ளை குட்டியில்லையே?!''

''இப்போதைக்கு வேண்டாமின்னு நாங்கதான் தள்ளி வைச்சு இருக்கோம்?''

''அம்மா பாத்திரங்களுக்கு பேர் போட ஆள் வந்திருக்கான்.'' பின்கட்டு வழியாக வந்த வேலைக்காரி கூப்பிட, அவள் பின்னாடியே ரத்தினம்மாள் சென்று விட,

மிதுன் உள்ளே நுழைந்தான் ''நளினா'' என்று குரலெழுப்பியபடியே,

''நீங்களா... நீங்க எப்போ வந்தீங்க?''

''நீ எங்கம்மாகிட்ட பெருமையா பேசிகிட்டு இருந்தியே அப்பவே வந்திட்டேன். நளினா நான் உன்கிட்டே....!'' அவன் வார்த்தையை முடிக்கும் முன் மொத்த குடும்பமும் அவனைச் சூழ்ந்து கொள்ள இவள் தனியானாள்.

''என்னப்பா இது நீ வந்து பார்க்க வேண்டிய காரியங்கள் இத்தனை லேட்டா வந்தா எப்படிப்பா...?''

''ஸாரிம்மா! எங்க எம்டியோட மனைவி இறந்திட்டாங்க. இப்போ இந்த கம்பெனியிலே ஒரு நல்ல நிலையிலே நான் வர்றதுக்கு காரணமே அவர்தான். அப்படியிருக்கும் போது அவருடையு சோகத்திலே நான் பங்கெடுக்கிறது தானே முறை. அதான் சரியான நேரத்திற்கு வந்துட்டேனே. அப்புறம் எனக்கு ப்ரமோஷன் கிடைச்சிருக்கும்மா. போஸ்டிங் பெங்களூரில்...!''


''ரொம்ப சந்தோஷம் வந்த புள்ளையை நிக்க வைச்சே பேசிகிட்டு இருக்கேனே போ! போய் குளிச்சிட்டு சாப்பிட வாப்பா, சாயந்திரம் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க எல்லாம் வந்திடுவாங்க அதுக்குள்ளே தயாராயிடு மிதுன்.''




''நான் போய் நீங்க குளிக்க வெந்நீர் ஏற்பாடு செய்யறேன் நளினா,'' அவ்விடம் இருந்து அகன்றாள், மிதுன் இல்லாதவரை நடிக்க முடிந்த அவளால், அவன் இருக்கும் சமயம் நிற்க முடியவில்லை, வேலையைக் காரணம் காட்டி விலகிய மனைவியின் பின்னால் சென்றான்.

''ஆனால்...'' அவளுடன் மனது விட்டுப் பேச நேரம் இல்லை. குளித்து விட்டு உணவு உண்டபின், மாப்பிள்ளை வீட்டாரை வரவேற்கச் சென்றான்.

அவர்கள் வரும்முன் சத்திரத்தினை ஒழுங்குபடுத்தி, சீர் செய்தான். மாப்பிள்ளை வீட்டார் இரண்டு வேனில் வந்திருந்தனர், அவர்களுக்கு காபி, டிபன் என இதர உபசரிப்புகளோடு, வசந்தனை சந்திக்கச் சென்றான்.



# 21



வசந்தன் பெயருக்கு தகுந்தாற் போல் குளிர்ச்சியாய் பேசினான். ''நான் உங்களை எங்க நிச்சயதார்த்தத்தின் போதே எதிர்பார்த்தேன்.''

''ஸாரி என்னால் வர முடியலை.''

''பரவாயில்லை, நிதிலா உங்களைப் பற்றித்தான் எப்பவுமே பேசிகிட்டே இருப்பா, அவளுக்கு உங்கமேல அன்பு ரொம்பவும் அதிகம்.''

மிதுன் சிரித்தான் ''வசந்தன் நீங்க என்ன வேலை பார்க்குறீங்க?''

''ஆடிட்டர் ஆபீஸ் ஒன்று ஒப்பன் பண்ணி கணக்கு வழக்குகளை கம்ப்யூட்டரைஸ்டு செய்து தருகிறேன். இப்பதான் ஆறு மாதம் ஆகுது.''

''ஓஹோ... நிதிலா ரொம்பவும் சின்ன பொண்ணு. அவளுக்கு ஏதும்... நீங்க தான் பார்த்து நடந்துக்கணும்.''

''ஸார் நிதிலா என் உயிர், அவளை நான் என்னை விடவும் அதிகமா நேசிக்கிறேன். அவ எனக்கு மனைவியா வரப்போறான்னு நினைச்சா அது எத்தனை பெரிய சந்தோஷம். அவளை என் கண்ணுக்குள்ளே வைச்சுப் பார்த்துப்பேன் ஸார்.''

''ஏன் ஸார்? என்னை மாமான்னே கூப்பிடலாமே?''

''கூப்பிட்டா போச்சு,'' வசந்தனின் கலகலப்பான சுபாவம் மிதுனுக்கு மிகவும் பிடித்து இருந்தது. கவலைகள் இல்லா மனிதன் இவனுடன் அமையப் போகும் வாழ்வு நிச்சயம் நிதிலாவிற்கு சிறந்ததாகவே இருக்கும் என்ற நம்பிக்கை வந்து விட்டது.

''ஸார்... ஸாரி மாமா நான் உங்ககிட்டே ஒரு விஷயம் கேட்பேன். ஆனா நீங்க எப்படி எடுத்துப்பீங்களோ?''

''என்ன விஷயம்? எதுவாயிருந்தாலும் தயங்காம கேளுங்க வசந்தன்.''

''இதை யார்கிட்டே கேட்கறதுன்னு தெரியலை, நானும் நித்தியும் எப்படியாவது ஒரு முறை சில விநாடிகளாவது சந்தித்திடுவோம். இல்லைன்னா போன் மூலமாவது பேசிடுவோம். ஆனா இப்போ இரண்டு நாளா எதுக்கும் வழியில்லை. அவளோட குரலைக் கேட்காமல் மனதுக்கு ரொம்ப கஷ்டமா இருக்குது.''

''என்னோட நிலைமை உங்களுக்குப் புரியுமின்னு நினைக்கிறேன், நீங்களே கூட ஊருக்கு அக்காவை விட்டுப் போனா எத்தனை கஷ்டப்படுவீங்க அந்த மாதிரிதான் இப்போ நான் தவிக்கிறேன்.''



''இதை யாரிடமாவது சொன்னா இரண்டு நாள் கூட பொறுக்க முடியாதான்னு கேட்பாங்க, அவங்களுக்கு காதலிக்கிறவங்களோட மனசு புரியாது. நீங்கதான் எப்படியாவது...''

''நாளைக்கு நாம எல்லாரும் வெளியே போகலாம் சரிதானே.''

''நன்றி ரொம்ப நன்றி.''

''சரி வசந்தன் நாளை நிச்சயமாய் மீட் பண்ணலாம். இப்போ போய் நிம்மதியா உறங்குங்கள்.'' வசந்தனிடம் பேசிவிட்டு நகரவும் அக்காவை விட்டுப் போனா நீங்க எத்தனை கஷ்டப்படுவீங்க என்று வசந்தன் கேட்டது நினைவிற்கு வந்தது.

தான் இத்தனை நாள் எத்தனை பெரிய முட்டாளாய் இருந்திருக்கிறேன். என்னைப் பிரிந்த வேதனை நளினாவின் மனதிலும் இருந்து இருக்குமே அதைக் கூட உணர்ந்து கொள்ளாமல் யாரோ நலம் பெற வேண்டுமென்று நான் என் இரத்தத்தை வேர்வையாக்கி உழைத்தேன். என் இரத்தத்தில் கலந்தவளைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்படாமல் இருந்து விட்டேனே என்று தன்னையே நொந்து கொண்டான்.

அதன் நலங்கு சம்பந்தப்பட்ட வேலைகள் அனைத்திலும் நளினா முதன்மையாய் நின்றாள். நளினாவின் அலங்காரம், அவள் பேசும் விதம், சிரிப்பு, உபசரிப்பு என அங்குலம் அங்குலமாய் அவளை ரசித்தான் மிதுன். இது வரை தான் அனுபவித்திராத ஒரு உணர்வு மனதிற்கு குளிர்ச்சியாய் இருந்தது.

இரவு பத்து மணி ஆகி விட பௌர்ணமி நிலவொளியில் மொட்டை மாடியில் ரத்தினம்மாள் உணவு உருட்டிப்

போட வட்டமாய் அமர்ந்தபடி உணவு உண்டார்கள் அனை வரும்.

முடிந்த பின் குளிர்ந்த நீரை வயிற்றுக்கு தாரை வார்த்த பின், ''நளினா என்னோட பெட்டியைக் கொண்டு வாயேன்?'' என்றான்.

அவளும் கொண்டு வந்து தரவும், அவளுக்காக வாங் கிய செயினையும் வளையலையும் தந்தான்.

மெரூன் நிறத்தில் நீலம், சிகப்பு, மஞ்சள் என்று கற்கள் பதித்த வளையல் கண்ணைப் பறித்தது. ''ரொம்ப அற் புதம் அண்ணா! ஆனா கல்யாணம் எனக்கு, என்னை மறந்திட்டே பொண்டாட்டிக்கு மட்டும் ஸ்பெஷல் கிப்டா,'' நிதிலா கிண்டலான தொனியில் கேட்க, அனைவரும் சிரித்தனர்.

''நீ கல்யாணப் பொண்ணு உன் விருப்பப்படி நாளை கடைக்குப் போய் வாங்குவோம். இது என் ப்ரண்ட் கிப்ட் பண்ணது.''

''பிடிச்சிருக்கா!'' என்ற போது தலையசைத்தாள். செயினை அவனே அவள் கழுத்தில் அணிவித்தான். நளினாவிற்கு நடப்பது எதையும் நம்பவே முடிய வில்லை, எதிரில் நிற்கும் போதே தன்னைப் பற்றி எண்ண நேரமில்லாத கணவனுக்கு எப்படி வெளியூர் செல்லும் போது தன் நினைப்பு வந்திருக்கும்.

என்றும் இல்லாத திருநாளாய் இன்று மட்டும்... சட்டென ஒரு யோசனைத் தோன்றியது. ஒரு வேளை கடிதத்தைப் படித்து இருப்பாரோ... பெட்டியை ஆராய்ந்தாள்.

கடிதம் அவன் சட்டைக்குள் அவள் வைத்த நிலையி லேயே இருந்தது.

''அம்மா நான் நித்திக்கும், வசந்தனுக்கும் கொஞ்சம் நகைகள் வாங்கணும் கூட்டிட்டு போகட்டுமா?''



''நலங்கு வைச்சிட்டதும் வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது மிதுன்.''

''அப்படியா? பக்கத்திலே இருக்கிற கடைக்குத் தானேம்மா?''

''நாளை மறுநாள் கல்யாணமாச்சேப்பா கங்கணம் கட்டியாச்சு? நாம சம்மதிச்சாலும் மாப்பிள்ளை வீட்டுக் காரங்க சம்மதிக்கணுமே?''

''சரிம்மா... நீங்க போய் படுங்க நித்தியோட நான் கொஞ்ச நேரம் பேசிட்டு வர்றேன்'' அவர்கள் கலையவும்,

''என்ன விஷயம் அண்ணா?''

''ஒண்ணுமில்லை வசந்தனுக்கு உன்கிட்டே பேசணு மாம். அதான் நாளைக்கு வெளியே கூட்டிட்டுப் போக லான்னு பார்த்தேன் முடியலை, இந்தா செல்போன் பேசிட்டு காலையிலே தா... நான் போய் தூங்குறேன் டயர்டா இருக்கு, நளினா நீ வா...'' என்று அவன் முன்னாடி நகரவும்,

நளினா அவன் பெட்டியை சீர்படுத்தும் வேலையில் இருக்க,


''அண்ணி, எப்பவுமே தொழிலே கதின்னு இருக்கானே மனசு விட்டு என்னைக்கு சந்தோஷமா வாழப் போறான்னு நான் ரொம்பவே கவலைப்பட்டேன். போனமுறை நீங்க வீட்டுக்கு வந்தப்ப கூட இத்தனை அன்னியோன்யம் இல்லை, இப்போதான் அண்ணி உண்மையிலேயே என் மனசு நிறைஞ்சு போயிருக்கு. இதுக்கு காரணம் நீங்கதான், நல்ல மனைவி இன்பத்தின் உறைவிடமின்னு நிரூபிச் சிட்டீங்க!'' புன்னகையோடு தன் வருங்காலகணவனுக்கு போன் செய்ய போய் விட்டாள் நிதிலா, நளினா ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

மனைவியிடம் தனியாகப் பேச எத்தனையோ முறை முயன்றும் அது முடியாமலே போனது. அது ஒருவித அவஸ்தையாய் இருப்பினும் சுகமாகவே இருந்தது.


நளினா எத்தனை மிருதுவானவள், தொழில் என்னும் போர்வையில் மறைந்து கொண்டு, அவளைச் சரியாக கவனிக்காமல் போனாலும், அம்மாவிடம் எத்தனை நாசுக்காக நடந்து கொண்டாள். தெய்வசகாயம் ஸார் நல்ல நேரத்தில் என் கண்களைத் திறந்து விட்டார். இல்லையென்றால், என் கவனக் குறைவால் நல்ல மனைவியை இழந்து இருப்பேனே.

வேரில்லாத தாவரங்கள் மழையால் வளர முடியாது. அதுபோல் நமக்குள் அன்பிருந்தால் நாம் வெகுதூரத்தில் இருந்தாலும் சந்திக்க முடியும். நமக்குள் அன்பு இல்லையெனில் அருகில் இருந்தாலும் சந்திக்க முடியாது.

உண்மையான அன்பின்றிப் போனாலும், அது இருப்பது போல் நடிக்கவாவது செய்யுங்கள் என்று அவள் எழுதியதை நினைக்கையில் மனம் வலித்தது. எத்தனை தூரம் நான் அவளை வேதனைப்படுத்தி இருந்தால் அந்த வார்த்தையை எழுதியிருப்பாள். இனி மறந்தும் அத்தவறை செய்ய மாட்டேன். என் கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றுவேன். மனதிற்குள் உறுதி பூண்டான்.



## 22



சிவமணி அந்தக் காண்டியில் உலக அதிசயங்களில் ஒன்றான, காதல் சின்னமுமான தாஜ்மஹாலை தன் தூரிகையால் வரைந்து கொண்டிருந்தான். காதலுக்காகவே இன்றளவும் தலைநிமிர்ந்து கம்பீரமாய் நின்றிருக்கும் நினைவுச் சின்னமல்லவா. காதல் அந்த ஒரு வார்த்தை எத்தனைப் பரிமாணங்களில் மாறி வாழுகிறது. கடவுளின் படைப்பிலே உயர்ந்தது மனிதன் என்றால், மனிதனின் படைப்பிலே உயர்ந்தது காதல்தானே! தாய்மைக்குப் பிறகு உலகினரால் அதிகம் போற்றப்படும் ஒரு உணர்வு காதல், அப்படிப்பட்ட காதல் சின்னத்தை வரையும் போது அவனையும் அறியாமல் நளினாவின் நினைப்பு வந்தது. கூடவே அன்றைய தினம் நடந்த நினைப்பும்.

கீதாவின் மூலம் நளினாவின் பிறந்த நாளைத் தெரிந்து கொண்ட சிவமணி, அவளிற்கு என்ன பரிசு தருவது என்று தீவிர யோசனையில் இருந்தான். நளினாவிற்கு நல்ல புத்தகங்கள் படிக்கும் ரசனை இருந்ததால் 'அன்பு' என்ற தலைப்பில் 18 அத்தியாயங்களைக் கொண்ட புத்தகங்களையும், கூடவே என்றைய தினம் முதன் முதலில் அவன் கடற்கரையில் நளினாவை சந்தித்தானோ, எந்த ஓவியம் அவனின் கனவுகள் நினைவாக காரணமாக இருந்ததோ அதையே அவளிற்கு பரிசாகத் தர விரும்பினான். எனவே இரண்டையும் எடுத்துக் கொண்டு, ஆவலோடு அவளைக் காண விழைந்தான். ஆனால் அங்கு அவள் இருந்த நிலையைக் கண்டதும் அவன் மனம் வேதனையடைந்தது நிஜம். அவளை எப்படியாவது பேசி சகஜமான நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற நினைப்பில்தான் அவளுக்கு ஆதரவாய் பேசினான். ஆனால், அவள் இத்தனை உணர்ச்சிவயப்பட்ட நிலையில் இருப்பாள் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை, சிவமணி.

பண்பு மாறாத அவளின் உள்ளத்தில் தேவையில்லாத சலனத்தை நான் ஏற்படுத்தி விட்டேனே, எத்தனை கொடுமை. தேவிக்கு திருமணம் முடிந்து விட்டது என்ற நிலையில் நான் அவளுடன் நட்பைத் தொடர்ந்ததே தவறு. அதுதான் அவளை நிலைகுலைய செய்து விட்டது.

ஏமாற்றம் படர்ந்த மனது எதிர்பட்ட அன்பை ஏற்றுக் கொள்ளத் தயாராகி விட்டது. எனக்கு மனதில் வரித்த பெண் கிடைக்காமல் போன ஏமாற்றம், அவளின் அருகாமை கிடைத்த போது அதை விட மனமில்லாமல் வேரறுந்த மரமென பற்றிக் கொண்டது மனம்.

நளினாவிற்குள் பெரிய ஏமாற்றம் இருந்ததால், காய்ந்து போன நிலத்தில் ஒரு துளி நீராய் நிறைந்த என் அன்பை அவளும் மனமுவந்து ஏற்றுக்கிறாள். ஆனால், அதுவே ஆறாய் பெருக்கெடுத்து அப்பேதைப் பெண்ணின் வாழ்க்கையினை மூழ்கடித்து விடும் என்று அறியாமல் நான் அளித்த அன்பு எத்தகைய பாதகமான விளைவை ஏற்படுத்தி இருக்கிறது மனம் அவனை சாடியது.

எத்தனை அற்புதமான பெண் நளினா அவளை மனைவியாய் அடைவது அதிர்ஷ்டம் அல்லவா, இதையெல்லாம் சற்றும் உணராமல் கையில் கிடைத்த பொக்கிஷத்தை மிதுன் இப்படி காடாய் ஆக்கி விட்டாரே, தன் கையில் வைரம் இருந்தாலும், மற்றவரின் பொருளான கண்ணாடிக் கல்லிற்குத்தான் மதிப்பு அதிகம் என்று சும்மாவா சொன்னார்கள்.

மனதில் பலவாறு குழம்பியவன் இறுதியில் நளினாவின் மனதிற்கு சஞ்சலம் அளிக்கும் விதமாய் இனி நடக்கக் கூடாது. கூடுமானவரையில், அவளின் வாழ்வில் இருந்து விலகி விட வேண்டும் என்ற முடிவிற்கு வந்தான்.



கூடுமானவரையில் இந்த ஊரைவிட்டு சென்றுவிட்டால், கூட நல்லது என்று மனதிற்குப் பட்டது. ஆனால் அது சாத்தியமா? தேவி அருகில் இருப்பது மனதிற்கு எத்தனை இதமாய் இருக்கிறது. இதை விடுத்து நான் சென்றால் அங்கே தேவியை மறந்து வாழ முடியுமா என்றெல்லாம் கேள்விகள் அணிவகுத்து நின்றன.

தொலைபேசி அவனை அழைத்தது.

''ஹலோ...'' இது தேவியின் அழைப்பாய் இருக்குமோ என்று நினைத்தான் ஆனால்...

''ஸார் நாங்க குளோபல் ஆர்ட் லைட்டிங்ஸ்-இல் இருந்து பேசறோம்.''

''சொல்லுங்க மேடம்.''

''ஸார் ஆபீஸ் செட்டிங்க்ஸ் எல்லாம் முடிஞ்சிட்டது பெயிண்டிங் எப்ப கிடைக்குமின்னு எம்.டி கேட்கிறார்?''

''மூன்று நாட்களுக்குள் தந்து விடுகிறேன் என்று சொல்லுங்கள்.''

''செக்கை கூரியரில் அனுப்பி இருக்கோம் ஸார், நாளைக்கு உங்க கையில் கிடைக்கும்.

''நன்றி'' ரிசீவரை அதனிடத்தில் பொருத்தி விட்டு, பாதியில் நிறுத்தப்பட்டு இருந்த ஓவியத்தை முடிக்க தூரிகையைக் கையில் ஏந்தினான். மனதை ஒரு நிலை படுத்தி வரைய ஆரம்பித்து இருப்பான். கைதட்டல் ஒலியோடு ரொம்ப அற்புதம் சிவான்னு குரல் எழுப்பியபடியே வந்தாள் கீதா.

''வாங்க கீதா.''

''இத்தனை வித்தைகள் புரியும் உங்கள் விரல்களுக்கு கண்டிப்பா பரிசு தந்தே ஆகணும் சிவா.''

''நன்றி... நம்ம ஊரில் புதிதாக ஆரம்பிக்க விருக்கும் மல்ட்டி பார்ப்பஸ் கம்பெனிக்காக கிளாஸ் மற்றும் பாட் பெயிண்டிங்ஸ் வரைய ஆர்டர் தந்தாங்க. அதான் கொஞ்ச பிஸி, என்ன சாப்பிடறீங்க தேவி? ஸாரி கீதா...''

''உங்க ஓவியங்களைப் பார்த்ததே வயிறும் மனசும் நிறைஞ்சு போச்சு சிவா. நெக்ஸ்ட் வீக் மாமா ஊரிலிருந்து வர்றார். அதனால நானும் மதுரைக்குப் போய் விடுவேன் சரி சொல்லிப் போனால் தேவலைன்னு தோணுச்சி அதான் வந்தேன். நான் வந்ததில் உங்களுக்கு ஏதும் தொந்தரவா?''

''இன்பேக்ட் நீங்க வந்தது ரொம்ப சந்தோஷமா இருக்கு கீதா? தேவி எப்படி இருக்காங்க?''

''அவ இன்னும் ஊரிலிருந்து வரலை, குறைஞ்சது ஒரு வாரமேனும் ஆகும்.''

''சிவா நாம் சில விஷயங்களை ஓப்பனா பேசிடறது எல்லாருக்கும் நல்லதுன்னு நினைக்கிறேன். பேசலாமா? ஏன்னா இது உங்க தனிப்பட்ட விஷயம் மட்டும் இல்லை, தேவி அதான் நளினாவோட வாழ்க்கைக்கு எந்த பாதிப்பும் வந்திடக் கூடாது.''

''கீதா, தேவியோட வாழ்விற்கு என்னால சத்தியமா எந்தத் தொந்தரவும் வராது.''

''பேச்சிலே உள்ள உண்மை உங்க செயலில் இல்லையே?''

"என்ன சொற்கள் இது கீதா?" நான் என்ன தவறு செய்தேன்."

''நளினாவோட பிறந்தநாள் அன்று அவ வீட்டுக்கு வந்தேன் அங்கே நீங்க இரண்டு பேரும்... அதற்கு என்ன அர்த்தம் நளினா வெகுளி, ஏதோ அவ திருமண வாழ்வில் ஏற்பட்ட விரக்தி காரணமா ஏதாவது தவறான முடிவு எடுத்திருந்தாலும், நீங்க அவளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டாமா?''



''கீதா... என் கனவை நிஜமாக்கியது நீங்க, நான் தேவியை எந்த அளவிற்கு நேசித்தேன் என்று உங்களுக் குத் தெரியும், ஆனா அவங்களுக்கு கல்யாணம் ஆயிடுச் சின்னு தெரிஞ்சதும், நான் என் மனதிற்கு திரை போட்டு விட்டேன். அப்பவே இந்த ஊரை விட்டு போயிருக் கணும், ஆனா தேவியோட குணம், நான் பார்த்துப் பார்த்து பதிய வைச்சிக்கிட்ட அந்த முகம், அவங்களுடைய ஏக்கங்கள் இதையெல்லாம் கண்ட பிறகு, அவங்க அருகில் இருப்பது எனக்கு சந்தோஷத்தைத் தந்தது.

ஆனா, அன்றைய தினம் நீங்க பார்த்தது வெறும் உணர்வின் வெளிப்பாடுதான் நாங்க உடனே எங்களைக் கட்டுப்படுத்திக்கிட்டோம். அதிலிருந்து இன்று வரை நான் தேவியுடன் போனில் கூட தொடர்பு கொள்ளவில்லை,'' என்று அன்று நடந்த நிகழ்விற்கு விளக்கம் கூறினான்.


''தேவி மிகவும் நல்லவர் அவருடைய வாழ்வு நல மடைய வேண்டும் என்பதில் நானும் ஈடுபாட்டோடு தான் இருக்கிறேன். அதற்காக இந்த ஊரை விட்டு செல்ல வும் நான் தயாரா இருக்கேன் கீதா, ஆனா மேற்கொண்டு தேவியிடம் பேச மனசுக்கு சங்கடமா இருக்கு, அதனால என் சார்பா தேவியின் மனதில் என்ன இருக்குன்னு நீங்கதான் கேட்டுச் சொல்லணும்.''

''புரியுது சிவா! நான் நளினாகிட்டே இதைப் பற்றி நிச் சயம் பேசுறேன். அப்போ நான் கிளம்பறேன் நீங்க உங்க வேலையைத் தொடருங்கள்!'' கீதா சென்று விட்டாள், ஆனால்


சிவமணி நிம்மதியிழந்து தவித்தான்.

மனம் முழுக்க கவலைகளைப் பரப்பியபடி கீதா வெளியே வந்தாள், நளினாவின் மனதிலும் சிவமணியைப்

போல் போராட்டம் இருக்கும் என்பதையும், இதைப் பற்றி தோழியிடம் பேச வேண்டுமென்பதையும், கீதா முன்பே யோசித்து வைத்திருந்தாள் நளினாவின் வரவிற்கென காத்திருந்தாள்.



# 23



மொட்டை மாடியில் படுத்துக் கொண்டு நட்சத்திரங்களை வெறித்துக் கொண்டு இருந்தான் மிதுன். அவன் மனம் நிதிலாவின் திருமணத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை ஞாபகப்படுத்தியது.

திருமணம் நல்லபடியாக நடந்தேறியது. யாரால் மனம் நொந்து தன் வாழ்வின் இலக்கணங்களையும், அந்த வயதிற்கே உரிய ரசனையையும் மறந்து இயந்திரத்தனமான ஒரு வாழ்விற்கு மாறினானோ அதே மாமா கல்யாணத்திற்கு வந்திருந்தார். ஆனால் பழைய கம்பீரம் அவரிடம் இல்லை, ஒரே மகள் அவள் வாழ்வே இப்படியானதில் கவலை இருக்கத்தானே செய்யும்.

ஒரு சமயம், இவரை இனியேனும் பார்க்க உதவாக்கரை என்றீர்களே இப்போது எத்தனை தூரம் உயர்ந்திருக்கிறேன் பாருங்கள் என்று காட்ட வேண்டும் என்ற நினைப்பில் இருந்தான். ஆனால் இப்போது அவர் ஒரு செத்த பாம்பு போல அவரை அடிப்பது நியாயம் என்ற நினைப்பில் அமைதியாய் இருந்தான். ஆனால் அது அவரை உறுத்தி இருக்க வேண்டும்.



''என்னங்க மாப்பிள்ளை நல்லா இருக்கீங்களா?'' என்றார் அவராக முன் வந்து.

''எனக்கென்ன குறை மாமா அன்பான அப்பா, அம்மா, தங்கையோட கல்யாணமும் நல்லபடியா முடிஞ்சிடுத்து. கை நிறைய சம்பளம் எல்லாத்துக்கும் மேலா திகட்டத் திகட்ட அன்பை பொழியும் மனைவி இதுக்கு மேலே வேற என்ன வேணும்? நீங்க அவளைப் பார்க்கலை இல்லை ஒரு நிமிடம்....!''

கூட்டத்தில் பார்வையை சுழல விட்டவன் நளினா தன் பெற்றோருடன் பேசிக் கொண்டவுடன் ''நளினி'' என்று பெருங்குரல் எழுப்பினான்.

''என்னங்க...?'' வியப்பும் தவிப்புமாய் அருகில் வந்தவளை இழுத்து தோளோடு சேர்த்துக் கொண்டான். ''இவள்தான் என் மனைவி நளினா,'' எத்தனை முயன்றும் அவர் முகம் சுருங்கத்தான் செய்தது.

அதற்குள் மிதுனின் அம்மா நளினாவை அழைக்க, அவள் நகர்ந்தாள். மனதின் குறுகுறுப்பு அவன் தொட்ட இடத்திலும்.

''என்னை மன்னிச்சிடுப்பா மிதுன் நான் உன்னையும், ரத்தினத்தையும் தவறாப் பேசிட்டேன்.''

''விடுங்க மாமா நா எல்லாத்தையும் மறந்திட்டேன்.''

''அது உன் பெருந்தன்மைப்பா? ஆனா கடவுள் அதுக்கு தகுந்த தண்டனைதனை தந்திட்டான்.''

''கவலைப்படாதீங்க மாமா, லலிதாவோட மனசும் காலப்போக்கில் மாறும். மாற்றங்கள் காலத்தின் கட்டாயம் அவளுக்கும் நல்ல எதிர்காலம் அமையும்.''

''உன் வாக்குப் பலிக்கட்டும் மிதுன். ''அவர் கண்களை மேல் துண்டால் ஒற்றியபடியே நடந்தார்.

நிதிலாவும், வசந்தனும் உலகத்தை வென்று விட்ட மகிழ்ச்சியில் இருந்தனர். அவர்கள் இருவரின் நெருக்கமும் மிதுனை வதைத்தது, கண்கள் தானாக நளினாவின் பக்கம் செல்ல அவன் வந்தவர்களை உபசரித்துக் கொண்டு இருந்தாள்.

நிதிலாவை மறுவீட்டுக்கு அழைத்துச் சென்று இதர சடங்குகள் முடிந்த பின் நாலு மணியில் அவரவர் உறவுகளோடு சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து பேசிக் கொண்டு இருந்தனர்.

''அண்ணி என் மருமகள் கன்யாவுக்கு வளைகாப்பு வெச்சிருக்கேன் வர்ற வெள்ளிக்கிழமை நீங்க எல்லோரும் அவசியம் வரணும் மாப்பிள்ளை நீங்களுந்தான்'' என்று நளினாவின் அம்மா சொல்ல, மிதுன் என்ன சொல்லப் போகிறாரோ என்ற நினைப்பில், அவன் முகத்தை கெஞ்சும் விதமாய் பார்த்தாள்.''

''ஒரு வாரம் லீவுதான் நிச்சயமாய் நாங்க வர்றோம்'' என்ற அவனின் பணிவான பதில் இவளுள் பாலை வார்த்ததைப் போலிருந்தது.''

மாப்பிள்ளை மறுவீட்டுக்குப் பிறகு நம்ம வீட்டுக்கு வரவேயில்லை என்ற தாயின் கவலைக்கு ஒரு தீர்வு கிடைத்ததை யெண்ணி மகிழ்ந்தாள். அத்தோடு காலையில் போட்டோ எடுப்பதில் இருந்து வந்தவர்களை உபசரிப்பது வரை தன் அனைத்து செயலிலும் மனைவியைத் தன்புறமே இருத்திக் கொண்டான் மிதுன்.

அவளுக்கு தன்னைச் சுற்றி நடப்பதை நம்பவே முடியவில்லை. அன்னியோன்யமான கணவன் மனைவி போல் அவர்கள் நடந்து கொண்டதை நம்ப இயலாமல் யாரும் அறியா வண்ணம் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.



இரவு நிதிலா - வசந்தனின் முதலிரவு அறையைத் தயார் செய்தாள். நளினா, எத்தனை முயன்றும் தன் முதலிரவில் நடந்த சம்பவங்கள் கண்முன் நிழலாடியது. கனத்த இதயத்தோடு வெளிவந்தவள் எதிர்பட்ட மிதுனைத் தவிர்த்து நிதிலாவிற்கு அலங்காரம் செய்யும் பொறுப்பை மனமுவந்து ஏற்றாள்.

குழைவான வெண்நிறப் பட்டுப்புடவையில் சரிகைகள் கொடிகளாய் ஓடித் திரிய, நகைகள் பூ அலங்காரம் என்று மிளிர்ந்தாள்.

''நிதிலா... கல்யாணத்திலே உங்க அண்ணன் மாமான்னு ஒருத்தரைக் காட்டினாரே! அவரை நான் பார்த்ததேயில்லையே.''

''வந்தாதானே பார்க்க முடியும்?''

''என்ன சொல்றே நீ? அவரு சொந்தம் தானே.''

''தாய்மாமன், அம்மாவின் அண்ணன், புரியலையா அண்ணி, ஒரு பிரச்சனை... அதாவது, அம்மாவுக்கு, மாமாவின் பெண் லலிதாவை மிதுன் மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்பது ஆசை. அவரோ நல்ல பசையுள்ள மனிதர்.''

''விவரம் புரியாமல் அம்மாவும் பெண் கேட்க, அவ்வளவுதான் மாமா ருத்ரதாண்டவமே ஆடிவிட்டார். இதைக் கேள்விப்பட்ட அண்ணன், இரவு பகலாக உழைத்து தன் பொருளாதார நிலையை உயர்த்திக் கொண்டான். ஆனால் திருமணம் மட்டும் வேண்டாம் என்றான். அப்புறம் உங்களைப் பார்த்ததும் கவுந்திட்டான்.''

''ஏன்? நித்தி உங்க அண்ணனுக்கும் அந்த பொண்ணு மேல...'' மேற்கொண்டு கேட்க வார்த்தைகள் வரவில்லை, 'ஆமாம்' என்று நிதிலா கூறிவிட்டால் தாங்க முடியுமா?

அவளின் இதயம் துடிக்கும் சப்தம் தெளிவாய் கேட்க, நல்லவேள்ளயாக நிதிலா அப்படி ஏதும் கூறவில்லை.

''அண்ணனுக்கு அதிலெல்லாம் விருப்பமில்லை அண்ணி, என்னமோ உங்ககிட்டே'மாட்டிக்கிட்டான்'' இவளும் ஒப்புக்கு சிரித்தாலும், மறுபடியும் மனம் சமாதானமாக மறுத்தது.

அப்படியானால், மிதுன் இன்று உண்மையான அன்போடு தன்னுடன் இழையவில்லை, தன்னை ஏளனமாய் கணக்கிட்ட அவரை வெறுப்படைய செய்யவும், நான் எப்படி உயர்ந்திருக்கிறேன் பார் என்று மார் தட்டிக் கொள்ள என்னைக் கருவியாய் பயன்படுத்தி இருக்கிறார். ஒரு விநாடியில் எத்தனை மகிழ்ந்து விட்டாள்.

மிதுன் என்றுமே மாறப் போவதில்லை, பால்செம்போடு நிதிலாவை அறைக்குள் அனுப்பி விட்டு வந்தவளிடம், ''தம்பிக்கு ஒரே தலைவலியாய் இருக்காம்... மாடியறையில் படுத்து இருக்கான். இந்த பாலை குடுத்திட்டு நீயும் தூங்கும்மா!'' என்றார் ரத்தினம்மாள்.

மனசில்லை என்றாலும் போட்ட நாடகம் நடக்க வேண்டுமேயென்ற நினைப்பில் மாடியறைக்கு நடந்தாள் நளினா, முகமூடியை அணிந்து கொண்டு நடிக்கும் அம்முகத்தைப் பார்க்கப் பிடிக்கவில்லை, வெற்று மார்புடன் மிதுன் மனைவியை வரவேற்றான்.



## 24

அலங்கார பொம்மையென நின்றவளைக் க்ண்டான். கருநீலப் புடவையில் ஆரஞ்ச் நிறப் பூக்களுக்கு போட்டியென அவள் கூந்தலில் குடியிருந்த மல்லிகை சிரித்தது.



நளினாவை இழுத்து மடியில் அமர்த்திக் கொண்டான், கைகள் அவளின் இடுப்புப் பிரதேசத்தில் ஊர்ந்தது. மிருதுவாய் கன்னத்தில் முத்தமிட்டான். அவன் வேறு மூடில் இருப்பது புரிந்தது. மனைவியின் மனதைப் புரிந்து கொள்ள மறுக்கும் இவர்கள் இதை மட்டும் மறந்திடாமல் வந்துவிடுகிறார்களே!

இந்த ஒன்று மட்டும் இல்லாமல் போனால், பெண்ணை ஆண் எதற்காகவும் விட்டு வைக்க மாட்டான் என்றே தோன்றியது.

அதற்கு மேல் பொறுக்க முடியாமல், அவனிடம் இருந்து தள்ளி அமர்ந்தாள். ''ரொம்ப நன்றிங்க!''

''எதுக்கு?'' புரியாதபடி மனைவியைப் பார்த்தான்.

''நம்மை பெற்றவங்க முன்னாடி என்மேல ரொம்ப பாசமா இருக்கிறா மாதிரி நடிச்சதுக்கு ரொம்பவும் நன்றி! தனிமையில் என்னை உதாசீனப்படுத்தினாலும், நாலு பேர் முன்னிலையில், மரியாதையாய் நடத்தியதுக்கு'' என்று கண்ணீர் மல்க, அவள் கூறியதைக் கேட்ட மிதுன் திகைத்தான்.

''உன் கோபம் வருத்தம் இதையெல்லாம் என்னால புரிஞ்சு கொள்ள முடியுது. நான் உன்னை அந்தளவுக்கு புண்படுத்தி இருக்கிறேன்னு நினைக்கும் போது எனக்கே என்மேல் வெறுப்புதான் வருது. ஐ'ம் ஸாரி நளினா'' அவளின் கூந்தலை வருடியபடியே பேசினான் மிதுன்.

''சிறு வயசிலே நடந்த கசப்பினால பணம் மட்டும் தான் உலகமின்னு எனக்குள்ளே நானே ஒரு வட்டம் அமைச்சிகிட்டேன். அதனால என்னைச் சுற்றி என்ன

நடக்குதுன்னே தெரியலை, என் நலனில் கருத்தும், அக்கறையும் கொண்டு எனக்காகவே வாழ்ந்த உங்களுக்கு நிறைய கஷ்டத்தை தந்திட்டேன். நினைக்கும் போது நிஜமாகவே சங்கடமா இருக்கு.''

''நேத்து வசந்தனின் மேல் நிதிலா கொண்ட அன்பும், நிதிலா மேல் வசந்தன் கொண்ட காதலும் ஒருமுறை என்னையே உலுக்கி விட்டது. அதிலே ஒரு கால்பங்கு கூட நான் உன்னிடம் அன்பு காட்டலை'' அவள் விரல்களை பிரித்துப் மூடியபடியே பேசியவனை விழிகள் விரித்துப் பார்த்தாள்.

''பணமும், நகையும்தான் உன்னை முழுமையா திருப்தி படுத்துமின்னு, நான் தப்பு கணக்கு போட்டுட்டேன். ஆனா நீ என் அன்பை மட்டுமே எதிர்பார்த்து தவிக்கும் உண்மையான ஜீவன் நீன்னு இப்போதான் இந்த மரமண்டைக்குப் புரிஞ்சுது!''

''நிஜமாகவா...!''

''நம்ப முடியலையில்லையா? நான் சொல்றது உண்மைதான் நளினா இது என் மேல் சத்தியம்.''

''நம்பிக்கை வைக்காமலா நான் இத்தனை நாள் உங்ககூட வாழ்ந்துகிட்டு இருக்கிறேன். எத்தனை நாள் நீங்க இப்படி புன்னகையோடு பேச மாட்டீர்களா என்று ஏங்கி இருக்கிறேன் தெரியுமா?''

''ஏன்? உன் நிலையை என்னிடம் நீ தெளிவாய் கூறியிருக்கலாமே நானென்ன அந்த அளவிற்கா பயமுறுத்தி வைத்திருந்தேன்.''

''பயமில்லை, நான் எத்தனையோ முறை வலிய வலிய வந்து உங்ககிட்டே பேசியிருக்கேன். ஆனா நீங்க ஒரு நாளும் அதைக் காது கொடுத்து கேட்டது இல்லை.''



''ஸாரிம்மா!'' அவன் வாயைப் பொத்தினாள் தன் நெஞ்சக் கூட்டிற்குள் ஒரு புறாவைப் போல அவளை தாங்கிக் கொண்டான். அந்த உஷ்ணமான மூச்சில் நளினாவிற்குப் பேச வாயே எழவில்லை.

''ஏய்! என்ன? நேரிலே பேச மாட்டியா எல்லாமே லெட்டரில்தானா.''

''படிச்சிட்டீங்களா?''

''படிக்காம? புத்தருக்கு போதி மரத்தடி மாதிரி எனக்கு உன் கடிதம்!''

அவன் சத்தமாய் சிரிக்க மேலும் இளமையாய் அழகாய் தெரிந்தான்.

''அதான் இந்த திடீர் மாற்றமா?!'' கணவனின் மார்பில் குத்தினாள்.

''உண்மையை சொல்லப் போனா அதற்கு முன்பே நான் யோசிக்க ஆரம்பிச்சிட்டேன். ''நளினா,'' மிதுன் தன் M.D. தெய்வசகாயத்தைப் பற்றியும் அவரின் வாழ்வில் ஏற்பட்ட கலக்கத்தைப் பற்றியும் கூறினான். ''இதே நிலைமை நம்ம வாழ்விலும் வந்திடுமோன்னு பயந்த போதுதான் உன் கடிதமும் கண்ணில் பட்டது.''

''நீ எங்கே என்னை விட்டுப் போய் விடுவாயோ யென்று...'' அதற்கு மேல் வார்த்தை வராமல் தவித்தான் மிதுன். அவன் பிடி இறுகியது. மூச்சு முட்டினாலும் சுகமாகவே இருந்தது நளினாவிற்கு. நீண்ட நாளாய் தவித்த உடலுக்கும், மனதிற்கும் அது தேவையாய் இருந்தது.

''நீங்க என் மேல் உண்மையிலேயே அன்பு கொண்டு இருந்தால் ஏன்... என்னைப் பார்க்கும் போது எரிஞ்சு விழுந்தீங்களாம்?''

''கண்ணே மணியேன்னு கொஞ்சினாத்தான் அன்பிருக்கிறதா அர்த்தமா? அன்பு உருவமற்றது நிறமற்றது. வெளியே சொல்லலைன்னாலும் அது நிலைத்திருக்கும்?!'' மக்கு, தலையில் தட்டினான். தங்கத்தாலும், வைரத்தாலும் இந்த தேவதையை வாங்க முடியாது என்பதை நான் உணர்ந்து விட்டேன். என்னுடைய ஆபீஸ் டென்ஷனை உன்னை விட்டால் நான் யாரிடம் காண்பிப்பேன்.''

''அதான் உடம்புக்கு முடியாதவளை அம்போன்னு விட்டுட்டுப் போனிங்களா?''

''தப்புதான் ஆனா போனதும் உனக்கு போன் பண்ணி விசாரிக்கலாமின்னு நினைச்சேன். அப்போதான் என் மாமா பொண்ணைப் பார்த்தேன். அதனாலதான் உனக்கு போன் பண்ண முடியலை.

''லலிதா ரொம்பவும் நல்ல பொண்ணு, ஆனா பாவம் அவளுடைய வாழ்க்கை அப்படியே விட்டுப் போச்சு, அன்னைக்கு அவளை அந்த நிலையில் பார்த்ததும் எனக்கு மனசே சரியில்லை. நளினா பெத்தவங்க, செய்யிற பாவம் பிள்ளைங்களைத்தானே சேரும்.''

''லலிதாவை உங்களுக்குத் தானே கல்யாணம் பண்ணி வைக்கிறதா இருந்ததாம்?''

''அப்படி அம்மா மனசிலே ஒரு எண்ணம் இருந்தது. ஏன் லலிதாவும் கூட ஆசைப்பட்டா, ஆனா நானும், அவளும் சின்னப் பிள்ளையிலேயே இருந்தே, பழகிகிட்டு இருக்கோம். எனக்கு அவ மேல எந்த ஈடுபாடும் இல்லை, மாமாவோட பேச்சினை தாங்காமத்தான் நான் இயந்திரத்தனமா மாறிட்டேன்.

''நம்ம கல்யாணத்தின் அப்போ கூட உன்னோட அமைதியும், பொறுமையும் எனக்கு ரொம்பவும் பிடிச்சிருந்தது. ஆனா அதை நான் தவறா பயன்படுத்திட்டேன்.''



நிதிலா எல்லா விஷயத்தையும் கூறினாள்?! ''அப்போ உங்க மனமாற்றத்தைப் புரிஞ்சுக்காம நீங்க என்னை ஒரு பழிவாங்குற கருவியாப் பயன்படுத்திக்கிறீயோன்னு நினைச்சு நான் ரொம்பவும் வருத்தப்பட்டேன்.''

''இனிமேல் உன் மனசு வருத்தப்படாம நான் பார்த்துப்பேன்.''

''உண்மையாகவா இதில் மாற்றமேதும் இல்லையே?''

''நிச்சயமாக இல்லை, மாதமிருமுறை உனக்காக நிச்சயம் நேரம் ஒதுக்குகிறேன். அன்று எல்லாமே உன் விருப்பம் தான் சரியா, ஆனால் என் வேலை டென்ஷனையும் புரிந்து கொண்டு நீயும் அனுசரித்துக் கொண்டு நடந்து கொள்.''

''நீங்க இந்தளவிற்கு மாறியதே பெரிய விஷயங்க. இதுவேயெனக்கு பம்பர் பிரைஸ் மாதிரிதான்.''

''உண்மையான அன்பு இல்லைன்னாலும் அன்பிருக்கிற மாதிரி நடிங்கன்னு எழுதி இருந்தியே? அதான் என் மனசை ரொம்பவும் பாதிச்சியிருக்கு நளினா. எத்தனை புண்பட்டு இருந்தால் அந்த வார்த்தைகள் உன் மனதில் இருந்து வந்திருக்கும்.''

''மன்னிச்சிடுங்க, உங்க மனசு புண்படணுமின்னு நான் அப்படி எழுதலை ஏதோவொரு வேகத்திலே...''

''உன்மேல் எந்தத் தவறும் இல்லை நளினா, என்னைப் போலவே தொழில் முறையில் ரொம்பவும் பிஸியானவன் ஆனால் அவனும் குடும்பத்திற்கென நேரம் ஒதுக்கி எத்தனை சந்தோஷமா இருக்கிறான்.

''நான்தான் என் நாட்களைத் தொலைத்து விட்டேன் இனிமேல் நிச்சயம் அந்தத் தவறையே செய்ய மாட்டேன்.''

''சரி எனக்கு இன்னைக்கு நல்ல பசி.''


''பால் குடிக்க வேண்டியது தானே.''

''இது வேற பசி? பால் குடிச்சா எல்லாம் தணியாது? நீதான் அருகில் வர வேண்டும்.''


''உங்களுக்கு இன்று பெரிய விருந்தே காத்துகிட்டு இருக்கு.'' சொல்லிய மனைவியைப் புன்னகையுடன் அணைத்தான் மிதுன்.

பேச்சு மட்டும் அல்ல, கலவியிலும் கூட இரண்டு மனங்களும் சேர்ந்து இணைந்து இருந்தால் அதனால் உண்டாகும் சங்கமம் எல்லையில்லா இன்பத்தில் கொண்டு போய் விடும்.

அதே போன்று ஆழமான இன்பப் பள்ளத்தாக்கில் தான் விழுந்து இருந்தார்கள் மிதுனும் நளினாவும், அவர்களின் ஊடல் மறைந்து கூடல் குழந்தையெனத் தாவி ஓடியது.



## 25



நளினா கண் விழிக்கும் போது நேரம் நாலரையைத் தாண்டியிருந்தது. அருகில் ஆண்மையின் சின்னமாய் உறங்கும் கணவனைக் கண்டாள். இரவு நடந்த நிகழ்வு கள் கண் முன்னே விரிய வெட்கப் பூச்சோடு அவன் இதழ்களில் தன் இதழ்களை ஒற்றியெடுத்தாள்.

அலுப்பு தீர இளம் சூடான நீரில் குளித்தவள் உடலை துடைத்து ஆரஞ்சும், பச்சையும் கலந்த சிறு சரிகைப்



போட்ட புடவையை உடுத்தினாள். தலையை சீராய் வாரிப் பின்னலிட்டாள். மிதுனுக்கு காபி எடுத்துக் கொண்டு அறைக்குச் செல்ல, மெல்ல தலை நிமிர்த்திப் பார்த்தவன் மறுபடியும் ஒருமுறை அவளைக் கலைத்தான்.

''என்னங்க இது, புடவை நசுங்குது.''

''புடவை கசங்காம கட்டிப் பிடிக்க சீக்கிரமா கத்துக்கு றேன்.''

''அய்யோ! இன்னைக்கு நிதிலாவை அவங்க வீட்லே மறுவீட்டுக்கு விடணும். எங்கண்ணிக்கு இன்று வளை காப்புன்னு நேத்து அம்மா சொன்னாங்களே?''

''போலாம் முதல்ல இங்கே வாயேன்.''

''மாட்டேன் எனக்கு நிறைய வேலையிருக்கு. வெட்டியா வீட்லே இருக்கிறவங்களுக்கு என்ன வேலை?'' மிதுன் கேட்ட அதே தொனியில் கேட்டதும் பக்கென சிரித்து விட்டேன் அவன்.

இருவரையும் அப்படி சிரித்த நிலையில் கண்ட நிதிலாவிற்கும், ரத்தினம்மாளிற்கும் மனம் நிறைந்து இருந்தது.

மாலை நிதிலாவை மறு வீட்டுக்கு விட்டபிறகு, தாய் வீட்டிற்கு கிளம்பினால் நீலமும் மஞ்சளும் கலந்த ஆர் கண்டி சேலையும் அதற்கு தோதாய் டிஸைன் செய்யப் பட்ட சோளியையும் அணிந்தாள். மதியம் தொடுத்து வைத்திருந்த நித்ய மல்லியை சூடிக் கொண்டாள்.

முத்துமணி கோர்த்த வளையலோடு லாக்கெட் பதித்த தங்க சங்கிலியையும் அணிந்து லேசான ஒப்பனைக்குப் பின், நீண்ட நாள் கழித்து அவள் முகத்தில் பழைய மலர்ச்சி வந்து ஒட்டிக் கொண்டது.

"சரி எனக்...

"பால்...

"...

நீ...



...ன்னீரோடு ரோஜாக்களை தூவி ...வினர்கள் புடைசூழ அத்தனை ஓடியது.

...கள், 7 வகையான உணவுகள், ...ழை, பழ தினுசுக்கள் என்று சீ... ...ய் வளையல்களும் இருந்தன.

...ணயின் அடியில் பச்சரிசியை ...னால் மூடிவிட்டு அதன் மேல் ...யாவை அமர வைத்து இருந் தார்கள். அவளின் முகம் ஐந்து முகம் கொண்டு இரண்டு விளக்குகள் ஒளிர்ந்தன.

பட்டுப்புடவைகள் மலர் மாலைகள் சகிதமாய் சோர்ந்த முகத்திலும், ஒரு புது ஒளி புறப்பட தனக்கு ஒரு புது சொந்தம் வரப் போவதை யெண்ணி பூரித்திருந்து இருந்தாள். கூடவே அண்ணன் முகத்திலும் எக்ஸ்ட்ரா வாட்ஸ் பல்ப் எரிந்தது.

சுமங்கலிப் பெண்கள் அனைவரும் வளையல்களைப் போட்டு விட்டு, சந்தனமும் குங்குமம் இட்டு விட்டு பன்னீர் தெளிக்க, அதே நிலையில் தன்னையெண்ணி உடல் சிலிர்த்து சிரித்தாள் நளினா. அனிச்சையாய் தன் அடி வயிற்றைத் தடவி விட்டுக் கொண்டாள்.

சடங்குகள் முடிந்து, பந்தி பரிமாறிய பின், நளினா கிளம்பத் தயாரானாள்.

"என்னடியிது! இன்னைக்குத்தான் வந்தே நீயும், மாப்பிள்ளையும் இன்னும் ஒரு இரண்டு நாள் இருந்திட்டு போகக் கூடாதா?"

"அம்மா அவருக்கு லீவு முடியப் போகுது. அடுத்த முறை கட்டாயம் வர்றேன்."



"அது வந்து..." மேற்கொண்டு பேசத் துவங்கும் முன், மாமியாரின் பேச்சை இடை மறித்தான் மிதுன்.

"அத்தை அடுத்த எட்டு மாதத்திற்குள்ளே நளினா இங்கே வந்திடுவா மூணு மாசத்திலே மூணு பேரா அனுப்பிடுங்க" என்று சொல்லி விட்டு கண்சிமிட்டி னான்.

"ரொம்ப சந்தோஷம் மாப்பிள்ளை" இனிப்பு வகைக ளோடு மகளையும் மருமகனையும் வாழ்த்தியனுப்பினார்.

"இன்னைக்கு எனக்கு ரொம்ப மனசு நிறைவா இருக் குங்க."

அவன் மனைவியைப் பார்த்து மென்மையாய் சிரித்தான்.

"சீக்கிரம் நமக்குன்னு ஒரு குழந்தை வேணுங்க, உங் களை மாதிரியே வாகாய்" அவன் மடியில் சாய்ந்தவளை இழுத்து நெஞ்சின் மேல் போட்டுக் கொண்டான்.

"உன்னோட ஆசைகளை நிறைவேற்றதுதான் என் னோட லட்சியம். நான் கூடிய விரைவில் உன்னைப் பிள்ளையார் வேஷம் போட வைக்கிறேனே இல்லை யான்னு பாரேன்!"

"நிஜமா!"

"இனிமேல் நோ ஆக்ஷன் ஒன்லி ரியாக்ஷன் மட்டும் தான்" மிதுன் மனைவியை முழுவதுமாய் ஆக்ரமித்திருந் தான்.

"ஹலோ கீது டியர்..."

"ஹாய் சுரேந்தர் எங்கே இருந்து போன்?"

"கண்டுபிடி. இது?"

"விளையாடாதீங்க சுரேன் உங்க குரலை கேட்டே நாலு நாள் ஆகுது."

''அத்தனை அக்கறை இருக்கிறவ போன் பண்ண வேண்டியது தானே!''

''உங்க குரலைக் கேட்டா உடனே பார்க்கணும் போல இருக்கு.''

''அப்போ பாரு?''

''நானும் பாரீனின் வரவா?''

''மனமிருந்தால் மார்க்கம் உண்டு.''

''என்ன ஒரே புகை மூட்டமாகவே பேசிகிட்டு இருக் கீங்க?''

''கண்ணை மூடிக்கிட்டு கதவைத் திறந்து பாரேன்!''

அவள் அதே போல செய்ய சுரேந்தர் பளீர் பல்வரிசை யுடன் சிரித்தான்.

''சுரேன்!'' வேகமாய் ஓடி வந்து கட்டிப்பிடித்து கன்னம், முகம் என்றும் பாராமல் வேகமாய் முத்தம் பதித்தாள்.

''இப்படி வரவேற்பு இருக்கும் என்று தெரிந்திருந்தால் நான் இன்னும் மூன்று வருடங்கள் கூட பாரீன் செல்லத் தயார்.''

''இனி உங்களை ஒரு விநாடி கூடப் பிரியாமல் இருக்க வேண்டும் சுரேன். நீங்கள் சம்பாதித்த வரையில் போதும் இங்கேயே ஒரு வேலை பார்த்துக் கொள்ளுங்கள்.''

''ஏய்! என்னாச்சு டியர் உனக்கு இன்னைக்கு ஒரே மூட்ல இருக்கே போல இருக்கே?''

''பின்னே எத்தனை நாள் தவிப்பு, ஆமா என்ன லீவில் வந்து இருக்கீங்களா?''

''என்னோட அசைன்மெண்ட் காண்ட்ராக்டுக்கு முன்பே முடிஞ்சிடுச்சு. திரும்பவும் இரண்டு வருடம் இருக்கச் சொன்னாங்க. எனக்காக என் அத்தைப் பொண்ணு காத் திருக்கான்னு ஓடி வந்திட்டேன்.''



''உண்மையா?''


''பின்னே உன்கிட்டே பொய்யா சொல்லப் போறேன். இப்பவே ஆபீஸிற்கு லீவு போடு, ஊருக்குப் போய் அம்மாவைப் பார்த்து கடனை அடைச்சிட்டு கூடிய சீக் கிரமே உன்னை என் சொந்தம் ஆக்கிடவேண்டும், நீ ரெடி யாகு, நான் குளிச்சிட்டு சாப்பிட வெளியே போகலாம்.''

சொன்னபடியே, உணவு முடித்து ஆபீஸிற்கு லீவும் போட்டுவிட்டு, ஊருக்கு செல்ல முடிவு செய்தனர்.


''சுரேன்! நான் போய் என் தோழி நளினாகிட்டே சொல்லிட்டு வரேனே!''

''எப்படி உன் தோழி ரொம்ப அழகா நான் வந்து பார்க்கவா?''

''முதல்ல என்னை சமாளி அப்புறம் இரண்டாவதைப் பார்க்கலாம்.'' கைப்பையை எடுத்துக் கொண்டு நளி னாவைப் பார்க்கச் சென்றாள் கீதா.



## 26



வாசலில் அரவம் கேட்டதும் ஆர்வமாய் வெளி வந்தவள் கீதாவைக் கண்டதும் மேலும் முகமலர்ந்தாள். ''வா! வா! நானே உனக்கு போன் பண்ணணுமின்னு நினைச்சேன். நல்லவேளை நீயே வந்திட்டே?''

''சுரேன் ஊரிலிருந்து வந்திட்டார் நளினா இன்னைக்கு நைட் நாங்க ஊருக்குப் போறோம். சீக்கிரமே எங்க கல் யாணப் பத்திரிகையோட வர்றேன்.''

''இப்போதான் நமக்கு நல்லகாலம் பிறந்திருக்கு நளினா.''

''ஊர்லே எல்லாரும் நலமா? கல்யாணம் நல்லபடியா நடந்ததா?''

''ஓ... எல்லாமே நல்லபடியாத்தான் நடந்தது. நேற்று தான் வந்து இறங்கினேன்.''

''இன்னும் விஷயத்தை சிவாவிடம் சொல்லலை. இனிமேதான் போகணும் நேரம் இருக்குமான்னு தெரியலை.''

நளினா பேசவில்லை.

''என்னாச்சு நளினா சிவாவுடன் நீ பேசவேயில் லைன்னு கவலையா சொன்னார். நளினாவா இருப்பதை விடவும் தேவியா இருப்பதைத்தான் விரும்புறேன்னு சொன்னியே இப்ப என்னாச்சு?''

''அது... வந்து?''

''சிவா எல்லா விஷயத்தையும் எனக்கு சொன்னார். விடு நளினா இதுலே உன் தப்பு எதுவுமே இல்லை, வெறும் தாலியை கட்டிட்டா மட்டும் கணவனா ஆயிட முடியாது. இன்ப துன்பமின்னு எல்லாத்துக்கும் தோள் கொடுக்கணும். ஒரு கணவனுக்கு மனைவியைக் காட் டிலும் உயர்ந்ததாய் ஏதும் தெரியக் கூடாது.''

''இன்பமான மனசு ஒத்த வாழ்வில் தாலி முக்கியப் பங்கு வகிக்கும். அப்படியில்லாத வாழ்வில் தாலிக்கு நீ மரியாதை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

''சிவமணியோட நீ இருந்த அந்த நாட்களில் உன் முகத்திலே இருந்த சந்தோஷத்தை நான் பார்த்தேன் நளினா. அன்புங்கிற சிறைக்குள்ளே மாட்டிக்கிட்டு சம்பிர தாயங்கிற விலங்கினை நீ மாட்டிக்க வேண்டிய அவசிய மில்லை நளினா.''



''இப்பவும் சிவா உன்னைத் தவறா நினைக்கிறார்ன்னு நீதான் எண்ணிகிட்டு இருக்கிறே நளினா. சிவா உன்னை விரும்புறார். அது எந்த அடிப்படையில் என்று நீதான் முடிவு பண்ணணும்!

''பழைய பழமொழிதான்னாலும் நாம விரும்புறவங் களை விட நம்மளை நேசிக்கிறவங்களை ஏத்துக்கிறதில் தப்பேயில்லை நளினா.''

கீதா பேசிய அனைத்தையும் மௌனமாய் கேட்டவள், ''கீதா சிவமணிக்கு என்னைப் பற்றி ஒன்றுமே தெரியாது அதனால ஒரு வேதனையிலேயே ஆறுதலா அவர் அருகாமையை நான் விரும்பியதை அவர் தவறா நினைக் கலாம். ஆனா நீ கூட என்னைப் புரிந்து கொள்ளலையே?''

''அப்படின்னா?''

''கல்யாணங்கிறது புனிதமான பந்தம் பிடிக்கலைன்னா கழட்டியெறிய அது புடவை இல்லை. நினைச்சவுடனே அறுக்க முடியாது கீதா.

மிதுன் என்னைப் புரிஞ்சுக்கலைதான் அதனால நான் மனசு வருத்தப்பட்டேன். உண்மைதான், ஆனா என் மனசு பூராவும் அவரைத் தவிர வேறு யாரும் இல்லை கீதா. நான் மிதுன் மேல கொண்ட அன்பு காதல்.

''சிவா மேல் வைத்த அன்பு நட்பு நான் வறுத்தப்பட்ட நேரங்களில் எல்லாம் எனக்கு ஆறுதலா இருந்தார். உண்மையான நண்பன் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்வான். அதற்கு பிரதிபலனாய் நான் என்ன செய்தாலும் பூர்த்தியாகாது.

''பூமியின் ஆழத்தை விடவும் ஆழமானது அவரின் அன்பும், நட்பும்! அந்த பரிசுத்த அன்பும், உன்னோட நல்ல உள்ளமும் தான் இன்னைக்கு ஒரு நல்ல வாழ்வை மீட்டுத் தந்து இருக்கு!

''ஏதோ கவலையிலே ஆறுதலைத் தேடி அவர் தோளில் சாய்ந்தேனே தவிர வேறு எந்தத் தப்பான எண்ணமும் அந்த செய்கையில் இல்லை.

''அந்த இடத்திலே நீ இருந்தாலும் அதுதான் நடந்து இருக்கும். உன்னையும், சிவாவையும் நான் வித்தியாசமா பார்க்கலை இரண்டு பேருமே எனக்கு ஒன்றுதான்.

''யார் செய்த புண்ணியமோ மிதுன் இப்போ என்மேல ரொம்பவும் அன்பா இருக்கார். என் தேவைகளை உணர்ந்து என் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து நடத்துறார். சொர்க்கம் தொலைவில் இருந்தாலும் நாம் உண்மை நிலையை எட்டிப் பிடித்து விட்டால் அது முன்னே தோன்றும்.

''நம்பிக்கை என்பதுதான் அன்பை அடைய ஆணி வேர். இதுவே எண்ணங்களுக்கும், சாதனைகளுக்கும் அடித்தளம் வறண்டிருந்த என் வாழ்வில் மழைச்சாரல் வீச ஆரம்பிச்சிடுச்சி, அதே மாதிரி சிவாவின் வாழ்விலும் ஒளி வீச வேண்டும்.

''ஒரு நிமிடம்!'' என்றுரைத்தவள் உள்ளே சென்று திரும்பிய போது கையில் அந்த ஓவியம் இருந்தது.

''இது சிவா எனக்கு பிறந்த நாள் பரிசா தந்தது. இதை என் நியாபகமா வைச்சிக்கச் சொல்லு. அவருடைய கற்பனை உருவத்தை மறந்திட்டு நிஜ உலகின் யதார்த்தத்தை புரிந்து கொள்ளச் சொல்லு.

''அவருடைய திறமை விலை மதிப்பில்லாதது. அது எந்தக் காரணம் கொண்டும் அழியக் கூடாது கீதா, ஒரு நல்ல ரசிகையா, தோழியா அவருடைய முன்னேற்றமும், எதிர்காலமும் எனக்கு ரொம்பவும் முக்கியம். அதற்கு முன் உதாரணமாகத்தான் இந்த ஓவியத்தைத் திருப்பித் தர்றேன். அவரின் மனம் புண்படாமல் சொல்லிடு கீதா.''



''உன் மனசிலே சிவாவைப் பற்றி என்ன எண்ணமிருக்குன்னு தெரிஞ்சுக்கத் தான் நான் அப்படி பேசினேன். உன்னுடைய நல்ல மனசுக்கு உனக்கு எந்த குறையும் வராதுடீ, சிவாவும் இதை புரிந்து கொள்வார். அப்போ நான் கிளம்பறேன். சுரேந்தரைக் கூட்டிகிட்டு சிவாவைப் பார்க்க முடிந்தால் இதை நான் அவரிடம் தெளிவாக சொல்லி விடுகிறேன்.''

''இன்னைக்கே ஊருக்கு போகணுமா கீதா?''

''ஆமாம்... சுரேன் ரொம்ப அவசரப்படுகிறார்'' கீதாவின் முகத்தில் வெட்கத்தின் சாயல் படர்ந்தது.

''சரி சீக்கிரமா கல்யாணப் பத்திரிகையை அனுப்பிடு நான் ஆவலோட காத்திருப்பேன். உன் வாழ்வு சிறக்க என் வாழ்த்துக்கள்.''

''நான் வரேன் நளினா...'' அவள் விடைபெறும் சமயம் மிதுனும் வந்துவிட, ''என்ன மேடம் நான் வரவும் உடனே ஓடிப்போறீங்க?''

''அப்படியெல்லாம் இல்லை ஸார்.''

''அவ இன்னும் கொஞ்சம் நாளிலே கல்யாணப் பொண்ணா ஆகப் போறாங்க.''

''அப்படியா வாழ்த்துக்கள்.''

''நான் வரேன் ஸார்.'' அவள் விடைபெற்று கிளம்பவும், மிதுன் தலையசைத்தான்.

உடனே வெளியேறியவள், வாசலை அடையும் முன், மிதுன் நளினாவின் சிரிப்பொலி கேட்டது. மனதிற்கு ரம்மியமாய் இருந்தது. பனிமூட்டம் விலகி தோழியின் வாழ்வில் உண்டான இன்பத்திற்கு நீண்ட ஆயுள் தரச் சொல்லி கடவுளை வணங்கினாள் கீதா. நிச்சயம் சிவமணி

யின் மனமும் இதைத்தான் எண்ணும் என்று அவள் அறிவாள். அந்த நட்புச் சிகரத்தின் எண்ணம் வலுப்பெறும் விதமாய் நளினாவும் மிதுனும் ஒருவரையொருவர் இணைந்து இருந்தனர்.

''என்னங்க பால் தரட்டுமா?'' இரவு நெருங்கிக் கொண்டு இருக்க, மிதுன் லேப்டாப்பை மூடி விட்டு மனைவியின் அருகில் வந்தான். அவளின் பனி விரல்களில் இருந்து பாலை வாங்கிப் பருகினான்.

''எனக்கு கொஞ்சம் வைங்க.''

''இதென்ன சம்பிரதாயமா? எனக்கு நம்பிக்கை இல்லைடா.''

''சில சம்பிரதாயங்கள் பைத்தியக்காரத்தனமா இருந்தாலும் இனம் காண முடியாத சந்தோஷத்தை தருகிறது.''

''உண்மையாகவே உனக்கு சந்தோஷம் என்றால், எதையும் செய்ய நான் தயார்.''

''நீங்க இப்படி மாறினதுக்கு நான் கடவுளுக்குத்தான் நன்றி சொல்லணும்.''

''அந்த பொறுமையா சொல்லு. இப்போ, கணவனே கண்கண்ட தெய்வம் அதனால என்னைக் கவனி.''

''ஆசைதான்.''

''எனக்கு மட்டுமில்லை. எல்லாருடைய ஆசையும் அதுதான். யாருக்கும் கிடைக்காத பொக்கிஷம் நீ என் அழகு கண்மணி.''

மேற்கொண்டு அவன் ஏதும் பேசவில்லை, காமன் அவர்கள் இருவரையும் காதற் சிறைக்குள் பூட்டி விட்டான் இனி அவர்கள் ஆயுளுக்கு விடுதலை ஆகாமல் இருக்க நாமும் வாழ்த்துவோம்.''